# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்




Women and Media Collective
Established 1984

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

இரண்டாம் அரையாண்டு - 2012
ISSN 1391-958X

கௌரவ ஆசிரியை
**எம்.எஸ். தேவகௌரி**

சரவை நோக்கு
**குகநிதி குகநேசன்**

அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு
**ஆர். சுகந்தினி**

அட்டைப்பட ஓவியம்
**வைதேகி**

சஞ்சிகை வெளியீடு
**பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு,**
**56/1, சரசவி லேன், காசல் வீதி,**
**கொழும்பு 8, இலங்கை.**
**தொலைபேசி : +94-11-5632045/5635900**
**தொலைநகல் : +94-11-2690192**
**மின்தபால் : wmcsrilanka@gmail.com**

# நாம் சொல்ல விரும்புவது...

உலகெங்கும் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் பெருகிச் செல்கின்றன. ஊடகங்களின் அறிக்கையிடலானது கொடுமைகளை உலகிற்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது. இதைக் குறைக்கவும் இல்லாதொழிக்கவும் வழிகள் உள்ளனவா என ஒரு கூட்டம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. சட்டம், சமூக ஒழுங்கு, பாலியல் கல்வி, பால்சமத்துவக் கல்வி எனக் கவனிக்க வேண்டிய விடயங்களை கோடிட்டுக் காட்டுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் "சொல்" பெண்ணும் கருக் கலைப்பும் பற்றி சொல்ல வந்துள்ளது.

பெண்ணுக்கும் கருவுக்குமான தொடர்பு என்ன? கருவுறல் என்பது உணர்வுமயப்பட்ட தாய்மையில் மையங் கொண்டுள்ளதா? பெண்ணின் பாலுணர்வில் தங்கியுள்ளதா?

புதிய மனிதனை - சமூகமொன்றை - உற்பத்தி செய்தல் (மறு உற்பத்தி) என்ற பொறிமுறையில் தங்கியுள்ளதா?

தாய்மை பெண்மையை முழுமையடைய வைத்தல் என்ற கலாசார விழுமியத்தில் தங்கியுள்ளதா?

இலங்கையில் தினமும் சுமார் ஆயிரம் சட்ட விரோதக் கருக்கலைப்புகள் இடம் பெறுவதாகவும் இதன்படி வருடாந்தம் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முதல் இரண்டு இலட்சம் வரை கருக்கலைப்புகள் இடம் பெறுவதாகவும் மதிப்பிடப்பட்டிருப்பதாக பெண் நோயியல் மருத்துவ நிபுணர் மங்கள் திஸநாயக்கா தெரிவித்திருந்தார்.

இது பாரிய சுகாதார பிரச்சினையாகவும் இனங்காணப்படுகிறது.

பெண் தனது உடலில் கருவை சுமப்பதா வேண்டாமா? என்ற தீர்மானத்தை எடுக்க முடிகிறதா? பாலுறவுக்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெண் இதைப் பற்றி யோசிக்க வேண்டியவளாகின்றாள். இதனால் பெண்ணின் பாலு ணர்வு குறித்து பேசப்படுவதைவிட கருவுறல் குறித்தே அதிகம் பேசப்படுகிறது. பெண்ணின் கருப்பையில் உருவாகும் கரு யாருடையதாக இருக்க வேண்டும் என்பது பெண்ணின் உணர்வு சார்ந்ததல்ல. கலாசார விழுமியங்கள் சார்ந்தது. அல்லது ஆணாதிக்கம் சார்ந்தது என கூறலாம்.

பெண்ணுக்கு கணவனாக வருபவன் பெண்ணின் கருப்பையை தனது உரிமையாக்குகிறான். அவன் பேரில் அடுத்த மனித உற்பத்தி நடக்கிறது. முதல் மனித உற்பத்தி கொண்டாடப்படுகிறது. பாலுறவு வேண்டுமா? வேண்டாமா? என்பதையும் ஆணே தீர்மானிக்கிறான். இதனால் உருவான கரு வேண்டுமா? வேண்டாமா? அவன் தீர்மானிக்கிறான். இலங்கையில் கருக்கலைப்பு செய்யும் பெண்களில் 90 வீதமானவர்கள் திருமணமானவர்கள் என்கிறது புள்ளிவிபரம். பொறுப்புணர்வுடன் கூடிய பாலியல் நடத்தைகள் இருவருக்குமேயானது. ஆனால் ஆணின் தீர்மானங்கள் பெண்ணின் கர்ப்பப்பை வரை செல்கிறது. உருவான குழந்தை தேவையில்லை என்றால் சட்டவிரேதமான முறையில்தான் கருக்கலைப்பை செய்ய முடியும்.


இதே பெண்ணுக்கு ஒரு பாலியல் வல்லுறவால் ஒரு கரு உருவானால்...? கருக்கலைப்பு செய்யப்பட்டாலும், அவள் வாழ்வு அத்துடன் முடிந்துவிடும். இவளுக்கே கணவன் இறந்து விட்டால்.... இருக்கும் குழந்தைகளுடன் அவள் திருப்தியாக வாழவேண்டும். தப்பித் தவறி அவளுக்கு பாலுணர்வு தோன்றக்கூடாது. அப்படித் தோன்றினாலும் கருப்பையை கவனமாக பாதுகாக்க வேண்டும். எந்தக்கருவும் அதில் உருவாகாதமாதிரி.

இதே பெண்ணுக்கு திருமணத்தில் குழந்தை இல்லையாயின் வேறு ஒரு ஆணின் விந்தணுவில் இருந்து கூட கருவை உருவாக்கி கர்ப்பப் பையில் வைக்கமுடியும். கர்ப்பப்பை சரியில்லையென்றால் வாடகைத்தாய் மூலம் கர்ப்பப்பைக்கு வாடகை செலுத்தி குழந்தை பெற்றுக்கொள்ள முடியும். இவை எல்லாவற்றையும் பார்க்கின்ற போது கருவுக்கும் பெண்ணுக்குமான தொடர்பு ஒரு ஆணிடம் உள்ளது என்பதும், ஆண் அதிகாரத்தால் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகிறது என்பதும் தெளிவாகிறது.

ஆணின் உடல் ஒரு ஆயுதம். அதனால் அவன் தனது அன்பான மனைவிக்கு அன்பான குழந்தையையும் உருவாக்குவான். அதே ஆயுதத்தால் அவன் தன் காமப்பசிக்கு - பழிதீர்க்கும் சமூகத்திற்கு, குடும்பத்திற்கு, பெண்ணுக்கு அவமானத்தையும் ஏற்படுத்துவான். அதனால் வரும் குழந்தை அவமானச் சின்னமாகும். இப்படித் தீர்மானிக்கும் சக்தியாக ஆண் இயங்குவதும் உலகை இயக்குவதும் பல சிக்கல்களுக்கு காரணமாகியுள்ளது.

இங்கே பெண்ணின் உடல் சார்ந்து தீர்மானமெடுக்கும் நிலை பெண்ணுக்கு வேண்டும். பெண்ணுக்கு பாதுகாப்பும், பாதிப்புமாக ஆணே இருப்பதால், பெண்ணுடல் சார் தீர்மானங்கள் பெண்களுக்கு ஆபத்தானதாக உள்ளது. பெண்ணுடல் சார் தீர்மானங்களை பெண்கள் எடுக்கின்றபோது ஆணின் சமூகப் பெறுமானம் கேள்விக்குட்படப் போவதும் தவிர்க் முடியாதது. சமவாய்ப்பும் சமசந்தர்ப்பமும் சமநீதியும் சம வாழ்வும் வேண்டி நிற்கும் அதேநேரத்தில் பெண்ணுடல் சார் தீர்மானங்களில் பெண்ணின் கருத்து முக்கியமானதென்பதை இங்கே "சொல்" ஊடாக வலியுறுத்த விரும்புகிறோம். ■

# சொல்
## விடுக்கும் அறைகூவல்!



www.stockfreeimages.com

வருடமொன்றின் முடிவு என்பது கடந்த பன்னிரண்டு மாதங்களை மீள் திரும்பிப் பார்ப்பதற்கும், அது தொடர்பாக பகுப்பாய்வொன்றை மேற்கொள்வதற்கும், நாம் அடியெடுத்து வைக்கப்போகும் புதிய வருடம் சம்பந்தமாக சில எதிர்வு கூறல்களை தொகுத்துக் கொள்வதற்கும் வாய்ப்பளிக்கின்றதான ஒரு தருணமாகும்.

பெண்கள் உரிமை தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் கோடிட்டுக்காட்டும் அளவில் வளர்ச்சி எதுவும் காணப்படவில்லை. பெண்கள் உரிமைகள் பற்றிய சட்டமூலம் குப்பைத் தொட்டியிலிருந்து வெளியில் எடுக்கப்படவில்லை. மகளிர் அலுவல்கள் அமைச்சின் கைகளில் விலங்கிடப்பட்டுள்ளவாறு அது இருக்கின்றது. வீட்டு வன்முறை பற்றிய சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எழுகின்ற செயற்பாட்டு ரீதியான சிக்கல்களைப் பெண் செயற்பாட்டாளர்கள் நிதமும் சுட்டிக் காட்டுகின்றனர். அரச தலைவர்கள் மேற்படி சட்டத்தை இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களை பகிரங்கமாக வெளியிடுவதன் மூலம் சட்டத்தைப் பலவீனப்படுத்தியுள்ளனர். இச்சட்டத்தின் மூலம் உதவிபெறக் கூடிய பெண்களுக்குக்கூட அதன் காப்பு அரிதாகவே கிடைப்பதாக பொலிஸ் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தேசிய மகளிர் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுதல் சம்பந்தமான உரையாடல்களும் செவிகளை எட்டவில்லை. ஏனைய ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை தொடர்பாக பாரதூரமான சிக்கல்கள் காணப்படுகின்ற போது மகளிர் ஆணைக்குழு தொடர்பாக குரலெழுப்புவது பயனற்றதாகவும் அமையலாம். 2011 மாசி

> **"பெண்கள் உரிமை தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் கோடிட்டுக்காட்டும் அளவில் வளர்ச்சி எதுவும் காணப்படவில்லை."**

மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் உரிமைகள் தொடர்பாகக் கண்காணிக்கும் CEDAW குழுவானது இலங்கையின் பெண்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள இறுதி அவதானிப்புகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக ஒரு உரையாடலும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. பெண்களுக்கு எதிராக சகல விதமாகவும் இடம்பெறுகின்ற வன்முறைகள் நாளுக்கு நாள் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் அறியக்கிடைக்கின்றன.

வட மாகாணத்தில், குறிப்பாக 2009 ஆம் ஆண்டிலும் யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியிலும் இடம்பெற்ற பெண்களுக்கெதிரான பாலியல் ரீதியான வன்முறைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகளும் ஓயவில்லை. 2012 கார்த்திகை மாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக ஜனாதிபதியின் மனித உரிமைகள் பற்றிய விசேடப் பிரதிநிதி அமைச்சர் மஹிந்த சமரசிங்க பின்வருமாறு தெரிவித்தார். "2009 வைகாசி மாதம் தொடக்கம் 2012 வைகாசி மாதம் வரையிலான மூன்று வருட காலப் பகுதியில் வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்து பாலியல் ரீதியான வன்முறைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் 256 கிடைத்துள்ளன. இவற்றுள் இரண்டு முறைப்பாடுகளுக்

குரிய குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 11 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. 67 முறைப்பாடுகள் மேலதிக ஆலோசனைக்காக சட்ட மா அதிபரிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. 176 முறைப்பாடுகள் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இராணுவத்தினர் இப்பிரதேசத்தில் இருப்பதற்கும், பாலியல் ரீதியான வன்முறைகளுக்கும் இடையில் காட்டப்படுகின்ற தொடர்புகளுக்கும் எதுவித அடிப்படையும் கிடையாது." அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுகின்ற புள்ளி விபரங்களும் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த மூத்த அமைச்சர் ஒருவர் வழங்கும் விளக்கம் தொடர்பாக நாம் புதிதாக பகுப்பாய்வு செய்ய வேண்டியதில்லை.

இராணுவமயமாக்கம் மற்றும் சட்ட பாதுகாப்புப் பொறிமுறை செயலிழந்துள்ளமை என்பவற்றின் காரணமாக வட கிழக்குப் பெண்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ள துன்புறுத்தல்கள் தொடர்பாக அறியக் கிடைப்பதை விட குறைவாகவே தெற்கில் உள்ள பெண்கள் இராணுவமயமாக்கத்தின் காரணமாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளை அறியக் முடிகின்றன. கடந்த ஐப்பசி மாதம் மக்கள் மன்றத்தினால் வெளியிடப்பட்ட குறும் விவரண வீடியோ நாடாவின் மூலம் ஒரு இராணுவ விதவையின் துன்பகரமான முறைப்பாட்டைக் கேட்க முடிந்தது. இராணுவச் சட்டத்தின் பிரகாரம் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரரொருவரின் மரணத்திற்குப் பின்னர் அவரது மனைவி மறுமணம் செய்யாதிருக்கும் வரை மட்டும் அவரது சம்பளத்தைப் பெறலாம். தாம் வேறொரு விவாகம் செய்து கொள்ளவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இவர்கள் கிராம சேவகரை அல்லது பிறிதொரு அரசாங்க உத்தியோகத்தரை நாட வேண்டியுள்ளது. இவ்வாறு செல்லும் போது இவர்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் பல உள்ளன. யுத்த வெற்றி தொடர்பாக இன்றுகூட பெருமைப்படுகின்ற அரசாங்கத்தின் கீழ் இத்தகைய முறைகேடான செயற்பாடுகள் இடம்பெறுவதை மஹியங்கனைப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் மிகவும் துன்பகரமான முறைப்பாடு எடுத்துக்காட்டுகின்றது.

இதற்கிடையில் கடந்த கார்த்திகை மாதம் பெண்கள் உரிமைகள் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற மற்றுமொரு சம்பவம் செய்தித் தாள்களில் வெளியானது. அதாவது, கருத்தடை செய்து கொள்வதற்காக பண்டாரகம அரசாங்க மருத்துவமனைக்கு வருகை தந்த

சில வயது முதிர்ந்த பெண்கள், பாடசாலைப் பிள்ளைகளால் வீதிக்கு அழைத்து வரப்பட்ட பிக்குமார்களாலும் பிக்குனிமார்களாலும் திருப்பி அனுப்பப்பட்டனர். அரசாங்கம் சில காலங்களாகப் பேணிவருகின்ற இனப்பெருக்கச் சுகாதாரம் தொடர்பான சேவையைப் பெற்றுக்கொள்வதை இவ்வாறு தடை செய்வது என்பதானது மேற்படி பெண்களினதும் ஒட்டு மொத்த பெண்களினதும் உரிமை மீறலாகும். இருப்பினும் இது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்துவதற்காக சுகாதார அமைச்சிலிருந்தோ மகளிர் விவகார அமைச்சிலிருந்தோ யாரும் முன்வரவில்லை. கார்த்திகை மாதத்திலேயே இடம்பெற்ற

**“இராணுவமயமாக்கம் மற்றும் சட்ட பாதுகாப்புப் பொறிமுறை செயலிழந்துள்ளமை என்பவற்றின் காரணமாக வட கிழக்குப் பெண்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ள துன்புறுத்தல்கள் தொடர்பாக அறியக் கிடைப்பதை விட குறைவாகவே தெற்கில் உள்ள பெண்கள் இராணுவமயமாக்கத்தின் காரணமாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளை அறிய முடிகின்றன.”**

தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இன்னும் இரண்டு சம்பவங்களைப் பார்க்கும் போது எதிர்காலத்தில் நாட்டின் சட்டமும் நீதியும் எவ்வாறு அமையும் மற்றும் அது எவ்வாறு பாதுகாக்கப்படும் என்ற கேள்விகளுக்கும் நாம் முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பது தெளிவு.

பிரதம நீதியரசருக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒரு குற்றப்பிரேரணை தாக்கல் செய்யப்பட்டிருப்பது முதற் சம்பவமாகும். இச்செயன்முறையின் சட்ட ரீதியான தன்மை எதுவாக இருப்பினும் அது ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரானதென உள்நாட்டு, வெளிநாட்டு சட்டத்தரணிகளின் அமைப்புகளிலிருந்து வெளிவருகின்ற பதில்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இரண்டாவது, வெலிக்கடை சிறைச்சாலையில் 27 கைதிகள் கொலை செய்யப்பட்டமையாகும். இதற்கு முன்னர் வவுனியா மற்றும் அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளில் ஏற்பட்ட கலகங்கள் ஒடுக்கப்பட்ட விதத்திலேயே இச்சம்பவமும் கொடூரமான முறையில் அடக்கப்பட்டது. பயங்கரவாதிகளென முத்தரை குத்தப்பட்டு காணாமல் போகச் செய்த பெயர்ப்பட்டியல்களிலிருந்து சிந்தித்துப் பார்க்க முடியாதவாறு தோன்றிய தமிழ் இளைஞர்களுக்குப் பதிலாக இம்முறை போதைப் பொருட்காரர்கள் மற்றும் குண்டர்களென்று முத்திரை குத்தப்பட்ட சிங்கள இளைஞர்களே மரணித்துள்ளார்கள். இருப்பினும் அரச பாதுகாப்பிலும் பொறுப்பிலும் உள்ளவர்கள் மரணிப்பது எவ்வாறு என்பதானது ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமாக ஒரு துளியேனும் கரிசினை காட்டும் எந்த ஒரு நபருக்குள்ளேயும் தன்னிச்சையாக எழுகின்ற கேள்வியாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறைக்கு எதிரான சர்வதேச தினமாக பெயரிடப்பட்டுள்ள கார்த்திகை 25 ஆம் திகதி தொடக்கம் சர்வதேச மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடும் மார்கழி 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை உலகம் முழுவதிலும் பல்வேறுபட்ட விதங்களில் பெண்கள் அமைப்புகளும், பெண்கள் உரிமைகள் சார்பாக தொழில்ப்படுகின்ற சகல அமைப்புகளும், நபர்களும் பெண்கள் உரிமைகள் தொடர்பாகக் குரல் எழுப்புகின்றனர். இலங்கையின் பல்வேறுபட்ட பெண்கள் அமைப்புகளும் இச்செயற்பாட்டின் பங்காளிகளாவார்கள். இருப்பினும் இந்த நாட்டுப் பெண்களின் எதிர்காலம் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த இத்தகைய குரல்கள் போதுமானதா என்பது 2013 ஆம் ஆண்டில் எம்முன்னால் வைக்கப்பட்டுள்ள சவாலாகும். ■

**சுனிலா அபேசேகர**

## கேள்வி கேட்கத் தெரியாதவர்களா நீங்கள்?

# இவர்களுக்காக கேளுங்கள்...

மனைவி 38 வயது கணவன் 42. ஆண் பிள்ளை ஒன்று. வயது 14. எந்தக் கதையும் இல்லை. எழும்பி இருக்க முடியாது. படுக்கையில் இருந்து கண்களை விழித்து மூடுவது மட்டும் அது உயிருடன் இருப்பதை உறுதி செய்கிறது. நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் அடுத்த குழந்தை பற்றி யோசிக்கவே முடியவில்லை என்கின்றனர்.ஏனெனில் அடுத்ததும் இவ்வாறு பிறந்து விட்டால்.....

அவளுக்கு 40 வயது. பணிப்பெண்ணாக வெளிநாட்டில் வேலை. இலங்கை திரும்பிய போது அவளது 14 வயது பெண்பிள்ளை சொந்தத் தகப்பனின் தகாத நடவடிக்கையால் கர்ப்பமான நிலையில் இருந்தாள்.வெளியில் சொல்லமுடியாது. கடவுளே....என் பிள்ளையின் அப்பா என் பேரப்பிள்ளைக்கும் அப்பாவா? நான் என்ன செய்வேன்? என் பிள்ளையின் எதிர்காலம்? பிறக்கப் போகும் குழந்தையின் எதிர்காலம்? நிலை குலைந்து நிற்கிறாள்.

யுத்தத்தில் அகப்பட்டு மயங்கிக் கிடந்த அவளுக்கு ஒரு மாதத்தின் பின் தெரிந்தது வயிற்றில் குழந்தை உருவாகியிருப்பது. எப்படி? யாரால்? எங்கே சொல்வது? குழந்தை பிறந்தால் என்ன செய்வது? பேதலித்து நிற்கிறாள்.



By: Suren

ஐயோ என் முதல் குழந்தைக்கு ஒரு வயது கூட ஆகவில்லை இரண்டாவது குழந்தையா? எப்படி வளர்ப்பது? எம்மால் முடியாதே..... கருத்தடை முறையைப் பின்பற்றினேனே... கடவுளே என்ன செய்வது? பதற்றப்பட்டு நிற்கிறாள் அவள்.

வேலைக்குச் சென்று திரும்பும் வழியில் சிலரால் கடத்தப்பட்டு வல்லுறவுக்குட்பட்ட 23 வயதுப்பெண் அதை வெளியே சொன்னால் அவமானம் என கருதி மறைத்தாள். குற்றம் புரிந்தவர்களும் தண்டனையில்லாமல் தப்பினர். ஆனால் அவளுக்கு பெரும் தண்டனை. அவள் கர்ப்பமானாள்.என்ன செய்வது? அலறுகிறாள்....

இந்த மாதிரியான குரல்கள் ஆங்காங்கே ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. யார் பதில் சொல்வது? எவ்வாறான பதில்கள் இவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும்? பெண்ணின் கர்ப்பத்தில் உருவான வேண்டாத குழந்தை. சமூகம் சொல்வதென்ன? சட்டம் சொல்வதெனன்? பெண்ணால் தீர்மானிக்க முடிகிறதா? சிந்திக்க வேண்டிய விடயங்கள் இவை.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கருக் கலைப்புப் பற்றியே அதிகளவில் சிந்திக்க வேண்டியுள்ளது. இதற்கு சட்டத்தில் இடமில்லாத போது என்ன செய்வது? சட்டத்துக்கு புறம்பாக கருக்கலைப்பை செய்வதற்கு பெண்கள் முனைகின்றனர். விளைவு. உயிர் துறக்கும் நிலை.

சரி இத்தகைய குழந்தைகள் பிறந்தால் என்ன செய்வது? இத்தகைய குழந்தைகளுக்கு குடும்ப சமூக ஏற்பாடுகள் ஏதாவது உண்டா? இலங்கையில் சிறுமிகளும் பெண்களுமாக நாள் ஒன்றுக்கு 1000 என்ற எண்ணிக்கையில் வன் புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனையடுத்து அவர்கள் சமூகத்தினால் ஒதுக்கப்படும் நிலைக்கும் உள்ளாகின்றனர்.

அதேநேரம் இந்த சந்தர்ப்பத்தில் கரு உருவாகி விட்டால் சட்ட இறுக்கத்தினால் கருக்கலைப்பு செய்து கொள்ளாமை காரணமாக அவர்கள் குழந்தையை பெற்றெடுக்க வேண்டியுள்ளது. அந்த குழந்தைகளின் வாழ்வும் பாதிப்புக்குள்ளாகிறது.

இந்தத் தகவல்கள் அண்மைக் காலமாக இலங்கை ஊடகங்களில் வெளிப்பட்டுள்ளன. இலங்கையில் கருக்கலைப்பு தொடர்பான சட்ட திருத்தம் தொடப்பில் ஏற்பட்ட எதிர்புகளின் போது இவை தெரிவுக்கப்பட்டன. இது தொடர்பிலும் நாம் சிந் திக்க வேண்டும். அண்மையில் (நவம்பர் 2012) நடந்த ஒரு உண்மைச் சம்பவம்

அயர்லாந்தில் வாழ்ந்து வந்த இந்தியப் பல் மருத்துவர் சவீதா கருத்தரித்த பின்னர் அவருக்கு உடல் நலக் கோளாறு ஏற்பட்டது. மருத்துவக் காரணங்களுக்காக அவர் தனது கருவைக் கலைத்து விடவேண்டும் என்ற சூழல் உருவானது. ஆனால் கத்தோலிக்க நாடான அயர்லாந்தில் கருக் கலைப்பு செய்ய சட்டப்படி தடை இருக்கிறது. ஆதனால் அவருக்கு கருக்கலைப்பு செய்ய அங்குள்ள மருத்துவர்கள் மறுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பினன்ர் சவீதாவின் கரு தானாகவே கலைந்த போது செப்டிசீமியா என்ற மோசமான பாதிப்புக்கு உள்ளாகி சவீதா இறந்து விட்டார். இந்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதை அடுத்து இது தொடர்பாக விசாரணை நடாத்தி அறிக்கை அளிக்க 7பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டது. அக்குழு அளித்த அறிக்கையில் அயர்லாந்தில் கருக்கலைப்புச் சட்டத்தில் உரிய திருத்தத்தை ஏற்படுத்த அரசு விரைந்து செயற்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

> “ **கர்ப்பத்தில் வேண்டாத குழந்தை. சமூகம் சொல்வதென்ன? சட்டம் சொல்வதென்ன? பெண்ணால் தீர்மானிக்க முடிகிறதா?** ”

கலாசாரம் சமூக ஒழுக்கம் எனக் கட்டுப் பட்டு வாழ்க்கை நடத்தும் மூன்றாம் உலக நாடுகளில்தான் பெண்களும் சிறுவர்களும் வெளித்தெரியாத துன்பங்களுக்கு பெருமளவில் ஆளாகின்றனர். வெளித் தெரிந்தால் கௌரவக் குறைவு அவமானம் கலாசாரச் சீரழிவு எனப் பல போர்வைகள் பெண்களை சுற்றி போர்க்கப்பட்டுள்ளன. இவை பெண்களை மீண்டும் மீண்டும் துன்பத்துக்குள்ளாக்குகிறது. சிந்திப்போம். ■

சக்தி

# நினைப்பும் நடப்பும்



**நினைப்பு..........**

"இஞ்சே அப்பா...இரண்டு வருச இடைவெளிக்கு பிறகு அடுத்த பிள்ளையைப் பற்றி பாப்பம்."

"ஏன்.....ஒரு வருசம் எண்டால் நல்லது இரண்டையும் சேத்து வளக்கலாம். செலவும் கொஞ்சம் குறைவா இருக்கும்...."

"அப்ப நான் கருத்தடை மாத்திரைக்கு போகட்டா? அல்லது லூப் வைக்கவா?" "வேண்டாம் வேண்டாம்...."கொண்டம்" பாவிப்பம் அல்லது டாக்டரிட்ட போய் கேப்பம்"

"ம்............"

**நடப்பு...........**

"என்ன உனக்கு கவனமாக இருக்க தெரியவில்லையா? இப்ப அடுத்த பிள்ளையும் வந்தா செலவுக்கு எங்க போறது?"

"ஏன் உங்களுக்கு பங்கில்லையா? என்ன மட்டும் கரிச்சுக் கொட்டுறீங்க"

"ஏனடி குளிசையை கிளிசையை வேண்டி குடிச்சிருக்கலாமே..."

"ஏன் நீங்க ஏதும் செய்திருக்கலாமே..."

"உனக்கு இப்ப வர வர வாய் கூடிற்று... எனக்கு ஆயிரத்தெட்டு வேலை... நீயெல்லோ கவனமா இருந்திருக் வேணும். முதல் பிள்ளை பிறந்த உடனே பிறகு போய் லூப் வைச்சிருக்கலாமே..."

"அதென்னப்பா... எனக்கு இதுகள் தெரியுமே... நீங்கள் டொக்டரிட்ட கதைச்சிருக்கலாமே.." "ஓ...நீ ஒண்டும் தெரியாத சின்ன பாப்பா... எல்லாத்துக்கும் நான் வரவேணும்."

"ஏன்..... நீங்கள் கொண்டம் பாவிச்சிருக்கலாம் தானே..."

"ஓ....அதெல்லாம் தெரியுது டொக்டரிட்ட கதைக்கத்தான் தெரியேல்ல..."

"உங்களோட ஒண்டும் கதைக்க ஏலாது.......இப்ப என்ன செய்யிறது? "

"போ...போய் எங்காவது கருவை கலைக்கேலுமா எண்டு பார்"

"நான் ஆரிட்ட கேக்கிறது?"

"ஏன் உங்க அக்கம் பக்கத்தில கேட்டு பாரன்.."

"சட்படி குற்றம்தானே... எனக்கு பயமா இருக்கப்பா..."


"உங்க காசு குடுத்தா நிறையபேர் செய்ய இருக்கினம்."

"என்ர உடம்புக்கு ஏதும் ஆகாதா? பயமா இருக்கப்பா..."

"பிள்ளைய பெத்து வளக்கேலாது... என்ன செய்வியோ தெரியாது. இப்பவே அழிச்சிரு" ■

**கொற்றவை**

# பெண் VS கரு



cdn2.blogs.babble.com

உலகில் ஒரு மணித்தியாலத்தில் மூன்று கருக்கலைப்புகள் சட்டரீதியாகவோ சட்டரீதியற்ற முறையிலோ இடம்பெற்று வருகின்றது. சில நாடுகள் அதற்கு சட்டரீதியான அனுமதியினை வழங்கியுள்ள அதேவேளை சில நாடுகள் அதனை தடைசெய்துள்ளன. இன்னும் சில நாடுகள் அனுமதியினை குறிப்பிட்ட சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களின் போது, அதாவது தாயின் உயிருக்கு ஆபத்தான நிலை, பாலியல் வல்லுறவினால் கருவுறல், குறை விருத்தி போன்ற காரணங்களுக்காக வழங்கியுள்ளன. அதிலும் குறிப்பிட்ட சில நாடுகள் தாயின் உயிருக்கு ஆபத்து என்னும் நிலை ஏற்படும்போது மாத்திரமே கருக்கலைப்பை அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கருக்கலைப்பினை சட்டரீதியாக்குமாறு இன்றும் கருக்கலைப்பினை அனுமதிக்காத சில நாடுகளில் கோரிக்கை விடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. கருக்கலைப்பினை அனுமதிக்கக்கோருவோர் அதற்காக பல நியாயங்களை முன்வைக்கின்ற அதேவேளை அதனை எதிர்ப்போர் அதற்கான நியாயப்பாடுகளை முன்வைக்கின்றனர். ஐக்கிய இராச்சியமானது சில கட்டுப்பாடுகளுக்கு அமைய சட்ட அனுமதியும், கனடாவில் சில கட்டுப்பாடுகளுடன் ஓரளவு சட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கருக்கலைப்பு சட்டரீதியானது. ஆனாலும் சில மாநிலங்களில் இறுக்கமான சட்டதிட்டங்கள் காணப்படுகின்றன.

கருக்கலைப்பானது உயிர்க்கொலையாக ஒரு சாராரால் கருதப்படுவதோடு மத ரீதியாகவும் முன்வைக்கப்படுகின்ற கருத்தாகவும் காணப்படுகின்றது. பிரதானமாக கத்தோலிக்க கிறிஸ்தவ நாடுகளில் இது பெரும் குற்றமாகக் கருதப்படுகின்றது. ஆனால் இது தொடர்பான பல விவாதங்கள் இன்றுவரை தொடர்கின்றது. அதாவது கருவுக்கு உயிரில்லை அதனால் அது கொலையாகமாட்டாது என்றும், எட்டுக் கிழமைகளானதும் முதிர்க்கருவின் (Fetus) மூளை வளர்ச்சியடையத் தொடங்குவதாகவும் உயிரினம் எனக்கருதுவதற்கு விஞ்ஞான ரீதியான பண்புகள் அனைத்தையும் அது கொண்டிருப்பதால் அது கொலையாகும் என்றும் நிரூபிக்க முயற்சிக்கின்றனர்.

இன்று சமூகத்தில் நடைமுறையில் காணப்படுகின்ற பல பிரச்சினைகளை எடுத்து நோக்கும் போது கருக்கலைப்பானது சட்டரீதியாக ஆக்கப்படல் வேண்டும்

உலகில் ஒரு மணித்தியாலத்தில் மூன்று கருக்கலைப்புகள் சட்டரீதியாகவோ சட்டரீதியற்ற முறையிலோ இடம்பெற்று வருகின்றது. சில நாடுகள் அதற்கு சட்டரீதியான அனுமதியினை வழங்கியுள்ள அதேவேளை சில நாடுகள் அதனை தடைசெய்துள்ளன. இன்னும் சில நாடுகள் அனுமதியினை குறிப்பிட்ட சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களின் போது, அதாவது தாயின் உயிருக்கு ஆபத்தான நிலை, பாலியல் வல்லுறவினால் கருவுறல், குறை விருத்தி போன்ற காரணங்களுக்காக வழங்கியுள்ளன. அதிலும் குறிப்பிட்ட சில நாடுகள் தாயின் உயிருக்கு ஆபத்து என்னும் நிலை ஏற்படும்போது மாத்திரமே கருக்கலைப்பை அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கருக்கலைப்பினை சட்டரீதியாக்குமாறு இன்றும் கருக்கலைப்பினை அனுமதிக்காத சில நாடுகளில் கோரிக்கை விடுக்கபட்டுக்கொண்டே இருக்கின்றது. கருக்கலைப்பினை அனுமதிக்கக்கோருவோர் அதற்காக பல நியாயங்களை முன்வைக்கின்ற அதேவேளை அதனை எதிர்ப்போர் அதற்கான

நியாயப்பாடுகளை முன்வைக்கின்றனர். ஐக்கிய இராச்சியமானது சில கட்டுப்பாடுகளுக்கு அமைய சட்ட அனுமதியும், கனடாவில் சில கட்டுப்பாடுகளுடன் ஓரளவு சட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கருக்கலைப்பு சட்டரீதியானது. ஆனாலும் சில மாநிலங்களில் இறுக்கமான சட்டதிட்டங்கள் காணப்படுகின்றன.

கருக்கலைப்பானது உயிர்க்கொலையாக ஒரு சாராரால் கருதப்படுவதோடு மத ரீதியாகவும் முன்வைக்கப்படுகின்ற கருத்தாகவும் காணப்படுகின்றது. பிரதானமாக கத்தோலிக்க கிறிஸ்தவ நாடுகளில் இது பெரும் குற்றமாக கருதப்படுகின்றது. ஆனால் இது தொடர்பான பல விவாதங்கள் இன்றுவரை தொடர்கின்றது. அதாவது கருவுக்கு உயிரில்லை அதனால் அது கொலையாகமாட்டாது என்றும், 8 கிழமைகளானதும் முதிர்க்கருவின் (Fetus) மூளை வளர்ச்சியடையத் தொடங்குவதாகவும் உயிரினம் எனக்கருதுவதற்கு விஞ்ஞான ரீதியான பண்புகள் அனைத்தையும் அது கொண்டிருப்பதால் அது கொலையாகும் என்றும் நிரூபிக்க முயற்சிக்கின்றனர்.

இன்று சமூகத்தில் நடைமுறையில் காணப்படுகின்ற பல பிரச்சினைகளை எடுத்து நோக்கும் போது கருக்கலைப்பானது சட்டரீதியாக ஆக்கப்படல் வேண்டும என்று கூறப்படுகிறது. அதாவது இன்று பெண்களுக்கெதிரான வன்முறைகளில் பாலியல் வல்லுறவு குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெறுகின்றன. சில இளம் வயதினர், ஊனமுற்றோர், சித்த சுவாதீனமற்றோர் போன்றோர் இதற்கு பலியாகின்றபோது அவர்கள் கருவுற்றால் அது அவர்களின் எதிர்காலத்தை பாதிப்பதாக அமைவதோடு அத்தகைய ஒரு கொடூரமான சம்பவத்தினால் கருத்தரிக்கப்பட்டால் உளவியல் ரீதியாகவும் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களின் போது கருக்கலைப்பு அனுமதிக்கப்படுவது தவறாகாது என்பது பலரது வாதமாகும்.

அண்மையில் அயர்லாந்து நாட்டில் 31 வயதுடைய 4 மாதக் கர்ப்பிணிப் பெண் செப்டிகேமியா நோயால் பாதிக்கப்பட்டிருந்தும் கருக்கலைக்கப்படாமையால் குழந்தை வயிற்றினுள்ளே இறந்ததுடன் அதைவெளியிலெடுக்கத் தாமதமாகியதால் அப்பெண்ணும் உயிரிழக்க வேண்டி ஏற்பட்டது. இதனாலேயே இருதய நோய், கடும் சிறுநீரக பாதிப்பு மற்றும் இரத்த அழுத்தம் போன்ற தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நோய் நிலைமை இருக்கின்ற பட்சத்தில் கருக்கலைப்பினை பெரும்பாலான நாடுகள் அனுமதிக்கின்றன. அதுமாத்திரமன்றி குறைவிருத்தியான கருவினை கலைப்பதனையும் அனுமதிக்கின்றது.

கருக்கலைப்பானது குருதி உறைதல், தொற்றுநோய், கருக்கட்டாமை அங்கங்கள் பாதிப்படைதல் போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட உடலியல் உளவியல் ரீதியான தாக்கங்களை கொண்டுவருவதாகவும் அதையும் மீறி உயிர்ச்சேதமும் ஏற்படுவதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. அத்தோடு மார்பகப் புற்றுநோய்க்கான வாய்ப்பினை அதிகரிப்பதாகவும். பெரும்பாலான பெண்கள் கருக்கலைப்பின் பின்னர் மனவழுத்தம், குற்ற உணர்வு, போன்ற உணர்வுகளால் வாழ்நாள் பூராகவும் பாதிக்கபடுவதாக மேலும் எடுத்துக்காட்டுகிறது. எனவே இந்தக் கருக்கலைப்பானது பெண்களையே ஒரு வகையில் பாதிப்பதாகவும் இருக்கிறது.

> **“சட்டரீதியற்றது என்பதனால் கருக்கலைப்பு கட்டுப்படுத்தப்படவோ, நிறுத்தப்படவோமாட்டாது. அச்சேவையை இலவசமாக பெறமுடியாததன் காரணத்தினாலும், அதிக பணம் செலுத்தி பாதுகாப்பான முறையில் செய்ய முடியாத சூழ்நிலையிலும் பொருளாதார ரீதியில் அல்லலுறும் பெண்கள் பாதுகாப்பற்ற சுகாதாரமற்ற முறைகளை நாடி சுகாதார பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன் உயிரையும் பறிகொடுக்க வேணடியும் ஏற்படுகின்றது.”**

எனினும் பொருளாதார காரணங்களுக்காகவும் சில குறிப்பிட்ட சமூகக் காரணங்களுக்காகவும் கருக்கலைப்பானது செய்யப்பட்டு வருகின்றது. குழந்தைகள் அதிகமாக உள்ள குடும்பங்களில் அல்லது மிக குறுகிய இடைவெளியில் கர்ப்பமுறும்போதும் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் கருக்கலைக்க முன்வருகின்றனர். இது அவரவர் நிலையில் அவரவர் எடுக்கும் தீர்மானமாகும். குடும்ப சூழலோ அல்லது அவர்களுக்குள்ள

ஏனைய பிரச்சினைகளையோ தீர்க்க முடியாது பரிதவிக்கும் நிலையில் இத்தகைய முடிவுகளுக்கு வருகின்றனர். இது சில நாடுகளில் அனுமதிக்கவும் செய்கின்றது.

எவ்வாறிருந்தாலும் அது ஒரு கொலை. அந்த முதிர்கருவுக்கு உணர்வு இருக்கின்றது. வலியை அதனால் உணரமுடியும் என்பதனால் அதனை கொலை செய்வதற்கு பதிலாக முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளலாம் என்பது மற்றும் சிலரின் வாதமாகும். தனது குடும்ப சூழல் அல்லது மற்றொரு குழந்தை பெற விருப்பமின்மை, அல்லது சற்று தாமதமாக்க நினைப்பவர்கள் அதற்கான முன்னெச்சரிக்கையுடன் நடக்கலாம் என்றும் அதற்கு இன்று பல்வேறு வழிமுறைகள் மற்றும் வகையறாக்களை சுலபமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதனாலும் அவை இலகுவான முறைகள் என்பதனாலும் அவற்றை பயன்படுத்தி தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் கருக்கலைப்பினை சட்டரீதியாக்க முன்னர் ஒரு மில்லியன் கருக்கலைப்பு சட்டரீதியற்ற முறையில் நடைபெற்று இருப்பதாகவும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் உயிரிழந்திருப்பதாகவும் கணக்கெடுப்புகளிலிருந்து தெரியவருகிறது. எனவே சட்டரீதியற்றது என்பதனால் கருக்கலைப்பு கட்டுப்படுத்தப்படவோ, நிறுத்தப்படவோமாட்டாது. அச்சேவையை இலவசமாகப் பெறமுடியாததன் காரணத்தினாலும், அதிக பணம் செலுத்தி பாதுகாப்பான முறையில் செய்ய முடியாத சூழ்நிலையிலும் பொருளாதார ரீதியில் அல்லலுறும் பெண்கள் பாதுகாப்பற்ற சுகாதாரமற்ற முறைகளை நாடி சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன் உயிரையும் பறிகொடுக்க வேண்டி ஏற்படுகின்றது.

முற்போக்கு சிந்தனை உடையவர்கள் கருவளம் பெண்களின் உடலுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அது அவர்களின் உரிமை சார்ந்த விடயம் எனவும் தாயாகுவது தொடர்பாக தீர்மானம் எடுப்பதுற்கு அவர்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் இருக்கவேண்டும் எனபதும் அவர்களின் வாதமாகும். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் தாயாகுவதற்கு தயாராகாத நிலையில் அதனை கட்டாயமாக சுமந்திருப்பது அவர்கள் மீதான ஒரு வகைத் திணிப்பு எனக் கருதுவதோடு அவர்களின் நடமாட்டத்தினையும் அது கட்டுப்படுத்துவதோடு தொழிலில் பின்னடைவையும் ஏற்படுத்தும் என்கின்ற கருத்துக்களும் உண்டு. அதேவேளை குடும்பம் என்று வருகின்ற போது அது ஆண்களின் உரிமையும் கூட அதனால் பெண்கள் தனியாக அது தொடர்பாக முடிவெடுக்கக் கூடாது என்றும் வாதிடப்படுகிறது.

இவ்வாறு கருக்கலைப்பை சட்டமாக்குவது நல்லதா இல்லையா என்பது பற்றி அறிவுபூர்வமான ஆரோக்கியமான கருத்தியல் ரீதியான விவாதங்கள் இன்னும் நீடித்துக்கொண்டே செல்கின்றன. ■

**ஹைர்சாந்தி**



# இது சதி!!!

"நான் கீழே குனிந்து என் கால்களுக்கு நடுவில் பார்த்தேன். மருத்துவிச்சி உட்கார்ந்து கொண்டிருந்தாள். பிளேடின் ஓரங்கள் காய்ந்து போய் இரத்தக்கறை படிந்திருந்தன."

"த்துப்"


பிளேடின் மீது எச்சில் துப்பினாள் மருத்துவிச்சி

அடுத்த நொடி "சர்ர்க்" என்று ஒரு சத்தம்.

படக்கூடாத இடத்துல பிளேடு பட்டு, என் பிறப்புறுப்பு கிழிவது நன்றாகத் தெரிந்தது. நரநரவென்று முன்னும் பின்னுமாக இழுத்தாள். அந்தக் கிழவியின் அருகில் அக்கேசியா மரத்தின் முட்கள், குவியல் குவியலாகக் கிடந்தன. அவள் கைகள் முழுக்க ரத்தம்.

ஒரு கோழியை வெட்டி, மீதியை விட்டிருந்தால் எப்படி இருக்குமோ அப்படி இரத்தச் சகதியோடு இருந்தது பாறை. என் பிறப்புறுப்பின் உணர்ச்சி மிக்க பாகங்கள் வெயிலில் காய்ந்து கொண்டிருந்தன."

ஏதோ கிலு கிலுப்பான கதையை எழுதப் போகின்றேன் என்று நினைத்து வாசிக்க ஆரம்பிக்காதீர்கள். சில மாதங்களுக்கு முன்னதாக இப்படித்தான் நானும் "தொடைகளுக்கு நடுவே ஒளிந்திருக்கும் நரகம்" என்ற தலைப்பை வலைத்தளமொன்றில் பார்த்து ஆர்வமாக வாசிக்க ஆரம்பித்தேன்.



cdn2.blogs.babble.com

அந்தக் கட்டுரையின் ஒவ்வொரு சொல்லும் ஆழமானது. வழமையாக நான் அறிந்திராத ஆச்சரியத்தை நோக்கிய நகர்வை உணர்ந்தேன். சில வார்த்தைகளின் அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியவில்லை. அவை உடலுறவுடன் தொடர்புபட்டவையாக இருந்தன. இது குறித்து நான் எழுதப்போவதில் வெட்கப்படவில்லை. ஆபாசத்தை நோக்கியதாக நான் எதையும் பார்க்கவில்லை "என்னடா இவ்வளவு பில்டப்பா இருக்கு" என்று யோசிக்கிறீர்களா?

வேலைவாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் சமவுரிமை தரவில்லை என்று பெண்கள் போராடுகிறார்கள். குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, துஷ்பிரயோகம் என்று போர்க்கொடி தூக்குகிறார்கள். அவ்வளவு ஏன் அரசியலில் 30 சதவீதம் இட ஒதுக்கீடு தரவேண்டுமென்றும் படையெடுப்புக்களைச் செய்தனர். ஒரு பெண்ணூடாக பெண்ணுக்கு செய்யப்படும் அநீதி இப்படிச் சொல்வதை விட 3000 ஆண்டுகளுக்கு மேலாக பெண் சமூகத்திற்கெதிராக புரியப்படும் காலத்தின் சதி என்பதே பொருத்தமாக இருக்கும். நான் படித்த கட்டுரை உலகப்புகழ் பெற்ற சோமாலிய மொடல் அழகியான வாரிஸ் டேரியின் (Waris Dirie) சுயசரிதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. அவள் உலகிற்குக் கறுப்பழகியாகத் தோன்றினாலும் அவளின் வாழ்க்கையின் கறுப்பு அத்தியாயங்கள் யாருக்கும் தெரியாது. அவள் மூலமே உலகின் ஊனக்கண்களுக்கு அந்த உண்மை தென்பட்டது.

"என் வாழ்நாளில் ஒரு போதும் நான் செக்ஸ் இன்பத்தை அனுபவித்ததில்லை. அனுபவிக்கவும் முடியாது. நாங்கள் ஆண்களுக்காக, அவர்களின் தேவைக்காக மட்டுமே படைக்கப்பவர்கள். அவர்களுக்குக் கன்னிப்பெண் வேண்டும் என்பதற்காக ஐந்து வயதுக்குள்ளாகவே எங்கள் உறுப்பை அறுத்து, க்ளிட்டோரியஸை வெட்டி எறிந்து விடுகிறார்கள். மீண்டும் எப்போது அவர்களுக்குத் தேவையோ, அதாவது முதலிரவுக்கு முன்பு வெட்டித் திறந்து விடுகிறார்கள்"

இவை வாரிஸின் வார்த்தைகள். என்ன தான் இவள் சொல்ல வருகிறாளென்று குழம்பிப்போயிருப்பீர்கள். பெண் பிறப்புறுப்பு சிதைப்பு (Female genital mutilation) பற்றியே என்னுடைய கட்டுரை அலசப் போகிறது. இதைப்பற்றி அறிந்தவர்களுக்கு அடச்சீ இவ்வளவு தானா? என சலிக்கத் தோன்றும். அறிவியல் ரீதியாகவும், சமூகவியல் ரீதியாகவும் இது குறித்து தேட ஆரம்பித்தேன். வாரிஸ் டேரியின் வாழ்க்கையை விபரிக்கும் Desert Flower என்ற ஆவணப்படத்தையும் பார்த்தேன். மனுசனுக்கு இருக்கிற ஆயிரம் பிரச்சினைகளில் எங்கேயோ நடக்கிற இதையெல்லாம் கணக்கில சேர்க்க விரும்பாதவர்கள் தயவு செய்து படிக்காதீர்கள். மனிதாபிமானம் மிக்க உங்களுக்காக என்னால் செய்யக் கூடிய சிறிய உதவி இது மட்டுமே - இது குறித்து அறியத் தருவது.

## பெண் பிறப்புறுப்பு சிதைப்பு என்றால் என்ன?

பெண்ணின் நரம்புகள் குவிந்த கந்து முனையை வெட்டி அகற்றுவதே பெண் பிறப்புறுப்பு சிதைப்பு ஆகும். இது சோமாலிய உள்ளிட்ட ஆபிரிக்கப் பழங்குடி மக்களிடையே சிறுமிகளுக்கு நடைபெறும் ஒரு சடங்கு. எங்கள் ஊர்களில் பூப்புனித நீராட்டு விழா செய்வது போல மகிழ்ச்சிகரமாக அரங்கேற்றப்படும் கொடூரமான சடங்கு இதுவாகும். 28 ஆபிரிக்க நாடுகளில் நடைமுறையிலுள்ளது. அத்தோடு மட்டும் நின்றுவிடாது மத்திய கிழக்கு, இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலும் சில இனக்குழுக்கள் மத்தியில் நடைபெறும்.

இதுவரை உலகில் சுமார் 13 கோடிப் பெண்களுக்கு கந்து அகற்றல் நடத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. மேலும் நாளொன்றுக்கு 6000 பெண்கள் ஆட்படுவதாகவும் சொல்கிறது. அநேமாக 10 வயதுக்குட்பட்ட பெண்களுக்கே செய்யப்படுகிறது. தவறினால் 15 வயதிலும் செய்யப்படுகிறது. பெண் உறுப்பு சிதைப்பில் மூன்று வகையான முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஒன்று பெண்ணின் கந்து முனையை மட்டும் வெட்டி விடுதல். இரண்டாவது கந்து முனை மற்றும் புழையின் (Vagina) இரு பக்கத்திலுமுள்ள இதழ்களையும் (labia minora) வெட்டி விடுதல். இவற்றிலும் கொடுமையானது மூன்றாவது ரகம் அது தான் வாரிஸிற்கு நடைபெற்றது. அதாவது கந்து முனையை அறுத்து, இதழை அறுத்து, புழையின் மேல்பகுதியை நூலினால் தைத்து விடுதல். சோமாலியப் பழங்குடிப் பெண்ணான வாரிஸிற்கு 5 வயதில் பெண்ணுறுப்புச் சிதைப்பு செய்யப்பட்டது.

"பிறப்புறுப்பு தையல் போடப்பட்டிருந்த பொத்தல்களின் வழியே தீக்குச்சி இறைத்தாற் போல சிறுநீர் வெளியேறியது.

மரண வேதனை: இதனால் சிறுநீர் வந்து விடுமோ என்கிற பயத்தில் தண்ணீர் குடிக்கவே பயந்தேன்"

"ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும் போதும் எனக்கு பத்துப் பதினைந்து நிமிடங்கள் தேவைப்பட்டது. மாதவிடாய் நேரம் என்றால், இந்தக் கொடுமை பல மடங்கு வீரியத்தோடு இருக்கும்" என்று வாரிஸ் சொல்வதிலிருந்து அவள் அனுபவித்த நரகவேதனை புரியும். இவற்றில் மிக அநியாயம் என்னவென்றால் இந்த சிதைப்பு பிளேடு, கத்தி, உடைந்த கண்ணாடிச் சில்லுகள், முட்கள் இவை கிடைக்கா விட்டால் கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டும் செய்யப்படுகின்றன. மயக்க மருந்து கூட கொடுக்காமல் மருத்துவிச்சிகளே மும்முரமாக இவற்றை செய்கிறார்கள். தற்காலத்தில் சில வைத்திய அதிகாரிகளும் பணத்திற்காக செய்கிறார்கள்.

## ஏன் இதைச் செய்கிறார்கள்

என்னால் திரட்டப்பட்ட தகவல்களின் படி சில்லறைத்தனமான அர்ப்ப நம்பிக்கைகளைக் கொண்டிருந்த மூதாதையர்களின் கதைகளை நம்பி ஆபிரிக்கப் பழங்குடியினர் இதை இன்றும் செய்து வருகின்றனர். முஸ்லீம்களாலேயே அதிகமாக பெண்ணுறுப்புச் சிதைப்பு செய்யப்படுகிறது. அப்படியென்றால் குர்-ஆன் தான் இதைச் சொல்கிறதா? இந்நடைமுறை பின்பற்றப்படும் இஸ்லாமிய நாடுகளில் முகம்மது நபி அவர்களின் வார்த்தைகளும் செயல்களும் (சுன்னா-Sunna) இதற்கு ஆதரவாகவுள்ளதாக குறிப்பிடுகிறார்கள். முகம்மது நபி அவர்கள் தனது மனைவி உம் ஹபிபா (Um habibah) அவர்களுக்கு இத்தகைய துண்டித்தல் செயல்முறை முகத்தில் பிரகாசத்தை ஏற்படுத்துவதாகவும், கணவனுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளதாகவும் தெரிவித்ததாகக் கூறுகின்றனர். ஆனால் குர்ஆனில் இதை ஆதரிப்பதாக எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை. உடலுறவின் போது கணவனால் பெண் மகிழ்ச்சிப்படுத்தப்படும் கோட்பாட்டையும், சிதைக்கப்பட்ட பெண்ணுறுப்பு உடலுறவின் போது பெண்ணின் சந்தோசத்தை குறைக்குமெனவும் குர்ஆனில் மறைமுகமாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் எதியோப்பிய யூதர்கள் (Falasha), வேறு சில சிறு குழுக்களிடையேயும் இந்நடைமுறை காணப்படுகிறது.



ஆண்குறியின் முன் தோல் அகற்றப்படும் சுன்னத் சடங்கினை சுகாதாரம் கருதி யூதர்கள், முஸ்லீம்கள் செய்கின்றனர். விறைப்பின் போது பின்னுக்குத் தள்ளப்படாத நிலையிலும் எந்தவொரு ஆணும் முன்தோலை வலியின்றி அகற்ற முடியும். ஆனால் பெண்ணுக்கு எதற்காகச் செய்யப்படுகின்றது? சுகாதாரம் இதன் நோக்கமல்ல.

இதனால் பெண்ணின் உடலுறவு இச்சையைக் குறைப்பதுடன் திருமணத்திற்கு முன்னதாக வெளி ஆணுடன் உடலுறவு கொள்வதை தடுக்கலாம். அவளின் குடும்ப கௌரவத்தைப் பேணுவதாக அமையும்.

சிலர் கந்துமுனை, புழை ஆகியவை ஆணின் பாகங்கள் என்றும் அவற்றை அகற்றினால் பெண்மை அதிகரிக்குமென்றும் கருதுகின்றனர். அப்படியென்றால் ஏன் கடவுள் அவற்றை பெண்களுக்கு படைத்தான் என்பதை சிந்திக்கத் தெரியாத கூட்டத்தின் கட்டுக்கதையே இதுவாகும்.

பெண்ணுறுப்பு சிதைப்புக்குட்படுத்தப்படாத பெண் தூய்மையற்றவளாகவும் அவள் உணவுகளையோ, நீரையோ தீண்டத்தகாதவளாக கணிக்கப்படுகிறாள்

சிலர் பெண்ணின் கந்துமுனையில் ஆண்குறிபட்டால் ஆண் இறந்து விடுவானெனவும், பிறக்கும் குழந்தை மீது கந்துமுனைபட்டால் குழந்தை இறந்து விடும் அல்லது தாய்ப்பால் விஷமாகிவிடுமெனவும், பெண்ணுறுப்பு சிதைக்கப்படாத பெண்களால் கர்ப்பமடைய முடியாதெனவும் அஞ்சி இதைச் செய்கின்றனர்.

பிறப்புறுப்பிலிருந்து வீசும் துர்நாற்றங்கள் இல்லாமல் போகும், பிறப்புறுப்பில் ஏற்படும் புற்றுநோயை (Vaginal Cancer)

இல்லாதொழிக்கும் எனும் அவநம்பிக்கையிலும் இச்செயன்முறை நடைபெறுகிறது.

சிதைக்கப்படாத பெண்ணுறுப்புக்கள் லெஸ்பியனிஸம் (Lesbianism), சுய இன்பம் (masturbation) போன்றவற்றுக்கு வழிவகுப்பதலாகும். 1950 வரை இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் பெண்ணுறுப்பு சிதைப்பு இவற்றுக்கான சிகிச்சையாகக் கருதப்பட்டது.

முகம் மஞ்சளாக மாறுவதை தடுக்கமுடியுமென நம்பினர். அத்தோடு வயதான கணவன்களும் மனைவியுடன் உடலுறவு கொள்ள இயலுமானதாகவும் இருந்தது.

இத்தகைய உப்புச்சப்பில்லாத அர்ப்ப காரணங்களுக்காக பெண்களை வாட்டுவது சரியானதாக அமையுமா? இதனால் பெண்களுக்கு ஏற்படும் பாரதூரமான விளைவுகளை சிந்தித்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. பெண்களே இதனை கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய சடங்காக ஏற்றுக் கொண்டுள்ளமை கவலையை தருகிறது. 2012ஆம் ஆண்டில் பெண்கள் ஆண்களுக்கு நிகராகவுள்ள நிலையில் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் இவர்களை எந்தப் பட்டியலில் சேர்ப்பது? விலங்கிலிருந்து பிறந்தவன் மனிதன். ஆனால் விலங்குகள் கூட இப்படிச் செய்வதில்லை. அப்போது ஆறாம் அறிவு இருந்து என்ன பயன்?

## பெண்ணுறுப்புச் சிதைப்பினால் ஏற்படும் பாதிப்புக்கள்

கந்து அகற்றம் செய்யப்பட்ட ஒரு பெண், வாழ்வில் ஒரு போதும் கலவி இன்பத்தை அனுபவிக்கவே முடியாது. அவள் கலவிக்குத் தகுதியானவளாயினும் அப்பெண்ணால் புணர்ச்சிப் பரவச நிலையை (Orgasm) அடைய முடியாது. சிறு வயதில் எதுவித மருத்துவ அறிவுமின்றி செய்யப்படுவதால் இரத்தப்பெருக்கு ஏற்பட்டு பல பெண்கள் இறந்துள்ளனர். கத்தி, பிளேட், கண்ணாடிச்சில்லு போன்றவற்றால் செய்யப்படுவதால் காயங்கள் ஏற்பட்டு ஆறாமல் காணப்படும் நிலையில் சிறுநீர் பட்டு வைரஸ் தொற்றுக்கள் ஏற்படும். காய்ச்சல் ஏற்பட்டும் சிறுமிகள் உயிரிழக்கின்றனர்.

பெண்ணுறுப்புச் சிதைக்கப்படுவதால் பெண்களுக்கு நீண்ட காலப் பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. கர்ப்பமடைய முடியாத சூழ்நிலை உருவாகும். சூடானில் பெண்ணுறுப்புச் சிதைக்கப்பட்டோரில் 20% -25% பெண்களால் கர்ப்பமடைய முடிவதில்லை. சிறுநீரகக்கல், பெண்ணுறுப்பில் கொப்புளங்கள் (cysts), மனநோய் (Hysteria), எப்பிலேப்ஸி ( Epilepsy) போன்ற நோய்கள் ஏற்படலாம். எயிட்ஸ் இலகுவிலும் தொற்றிக் கொள்ளும். மேலும் குழந்தை பிறக்கும் போது இறக்கவும் சாத்தியக்கூறுகள் உள்ளன. மேலே குறிப்பிட்டதைப்போல மூன்றாவது முறையில் பெண்ணுறுப்பை தைத்து விட்டு பின்பு அடிக்கடி திறத்தல் மீளத் தைத்தல் போன்ற செயன்முறைகளும் நடக்கின்றன. அவை மிகவும் பயங்கரமானவை.

## சர்வதேசத்தின் பார்வையில்

பெண்ணுறுப்புச் சிதைப்பு என்பது அடிப்படை மனித உரிமைக்கெதிரான மீறலாகும். சுகாதார பால்நிலை ரீதியாக பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

1997ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) யுனிசெவ் (UNICEF) UNFPA ஆகியவற்றுடன் இணைந்து பெண் பிறப்புறுப்பு சிதைத்தலுக்கெதிராக அறிக்கையொன்றை வெளியிட்டது. புதிய அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் 2008 மாசி மாதம் வெளியிடப்பட்டது. 1997ஆம் ஆண்டு வாரிஸ் டேரி பெண்ணுறுப்பு சிதைத்தலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

2008ஆம் ஆண்டு அறிக்கையானது கடந்த பல நூற்றாண்டு கால நடைமுறைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. கடந்த காலங்களிலான இச்செயன்முறையின் அதிகரிப்பும் இனங்காணப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனம் சுகாதார அதிகாரிகள் பெண்ணுறுப்புச் சிதைத்தலை செய்வதை தடுக்கும் உலகளாவிய திட்டத்தை (Global strategy to stop health care providers from performing female genital mutilation) வெளியிட்டது. உலக சுகாதார ஸ்தாபனம் சர்வதேச மட்டத்திலும் உள்நாடுகளிலும் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

கோடைகால விடுமுறைகளின் போது பிரித்தானியாவில் 2000 இற்கு மேற்பட்ட சிறுமிகளுக்கு பெண்ணுறுப்பு சிதைக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. 1985ஆம் ஆண்டின் பெண் மொட்டு முனைத்தோல் வெட்டுதலை தடுக்குஞ் சட்டமானது (UK Prohibition of Female

Circumcision Act 1985) இதை முன்னெடுத்தல், வேறு நபரின் பெண்ணுறுப்புச் சிதைப்பைப் புரிய உடந்தையாக இருத்தல், உதவி செய்தல் ஆகிய குற்றங்களாகும். 2003ஆம் ஆண்டின் பெண் பிறப்புறுப்பு உருச்சிதைவு சட்டமானது (Female Genital Mutilation Act 2003) இங்கிலாந்தை வாழிடமாகக் ( Resident) கொண்ட எவரும் பெண்ணுறுப்புச் சிதைப்பை உலகின் எந்த மூலைகளிலும் புரிவதைத் தடை செய்கிறது. அதற்கு தண்டனையாக 14 ஆண்டுகளுக்கு அதிகரிக்காத சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் இதுவரை காலமும் எந்த குற்றச்சாட்டுகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. எந்தவொரு ஐரோப்பிய நாடுமே பெண்ணுறுப்பு சிதைத்தலுக்கான அச்சுறுத்தலை புகலிடம் (Asylum) வழங்குவதற்கான காரணியாக ஏற்கவில்லை.

சர்வதேச நாடுகளின் அழுத்தங்களும், சட்டங்களும், அறிக்கைகளையும் வருடாவருடம் பெருகிக் கொண்டே போகின்றன. ஆனால் பெண்ணுறுப்புச்சிதைப்பு நடைமுறை குறைவதற்கு மாறாக பெருகிய வண்ணமே உள்ளது. மதவாதிகள் பெண்ணுறுப்பு சிதைப்பை ஆதரித்து வருகின்றமையால் எத்தகைய கல்வி நிலையின் உச்சத்தை நோக்கிச் சென்றாலும் மூடநம்பிக்கைகளுக்குளிருந்து மீளும் மனப்பாங்கு அவர்களுக்குள் இன்னும் முளை கட்டவில்லை. வாரிஸ் போல துணிச்சல்கரமான பெண்கள் அவர்களின் சமூகத்திலிருந்து உருவாகவில்லை. அவள் என் கண்களுக்கு தேவதையாகத் தெரிகிறாள்: ஒரு சமூகத்தைக் காக்க வந்த கடவுளின் தூதுவராகத் தெரிகிறாள். 2002ஆம் ஆண்டு ஆஸ்திரியாவிலும், வியன்னாவிலும் Desert flower foundation எனும் அமைப்பை ஆரம்பித்து பெண்ணுறுப்புச் சிதைத்தலுக்கெதிராக போராடி வருகிறார். 2009ஆம் ஆண்டு பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க PPR Foundation எனும் அமைப்பை ஸ்தாபித்தார். உண்மையில் அவள் கறுப்பழகி தான் என்னைப் பொறுத்தவரை அவள் உலக அழகி ஐஸ்வர்யா ராயை விட அவள் 100 மடங்கு அழகானவள். என்னடா ஏதோ பைத்தியம் போல பேசுவதாக நினைக்காதீர்கள் அவளின் ஒவ்வொரு வார்த்தைகளாலும் நான் பாதிக்கப்பட்டுள்ளேன்.

“நான் பிழைத்து விட்டேன். ஆனால் லட்சக் கணக்கான என் சகோதரிகள்?” "அவர்களை யார் காப்பாற்றுவது?" வாரிஸின் இந்த வினாவின் விடை எப்போது தெரியும்? புரட்சிக்கவி பாரதி பெண்ணடிமைத்தனையை போக்கினான் என்று எல்லோரும் சொல்கிறீர்கள். அவன் உலகை கவிதைகளால் செதுக்கினான் என்றார்கள் சிலர். மாஜினியின் சபதம், பெல்ஜியத்துக்கு வாழ்த்து, புதிய ரசியா என்று உலகை சுற்றி வந்தவன் : கரும்புத் தோட்டத்திலே எனும் பாடலில் பிஜித் தீவில் பெண்கள் படும்பாட்டை உரைத்தவன் செவிகளுக்கு இந்த மாபெரும் அக்கிரமம் எட்டாமல் போனதன் மாயம் என்ன? அல்லது தெரிந்திருந்தும் அதை ஆமோதித்து கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டானா? கடும் கோபம் வருகிறது. மாண்டவனைத் திட்டி என்ன பயன்?

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

ஞான நல்லறம் வீர சுதந்திரம்

பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்" ■

**மாதினி விக்னேஸ்வரன்**


References

- http://www.bbc.co.uk/news/health-18900803
- http://www.dailymail.co.uk/news/article-2133427/100-000-women-undergo-brutal-sexual-mutilation-illegally-Britain.html
- http://www.who.int/mediacentre/factsheets/fs241/en/
- http://www.guardian.co.uk/society/2010/jul/25/female-circumcision-children-british-law
- FemaleGenitalMutilation Female Genital Mutilation-Amnesty International
  The Female Genital Mutilation Education and networking project
  Female Genital Mutilation-At the crossroads of women's health and human rights.
- The US bill to prohibit female genital mutilation
- WHO, UNICEF and UNFPA, Female Genital Mutilation: A joint WHO/UNICEF/UNFPA statement, World HealthOrganization, Geneva, 1997

# உயிர் உருகும் சத்தம்!

கருச்சிதைவு (Abortion) என்பது முளையத்தை அல்லது முதிர் கருவைக் கர்ப்பிணிப் பெண்ணின் கருப்பையில் இருந்து அகற்றி அதனை அழித்து விடுதலாகும். கருச்சிதைவானது இரண்டு முறைகளில் நடைபெறுகின்றது. ஒன்று, தானாகவே முளையம் முதிர் கருப்பையின் உள்ளே இருக்கும் போது அழிந்து விடுகின்றது. அவ்வாறு நிகழுமாயின் அது பொதுவான கருச்சிதைவு அல்லது தானாகவே நிகழும் கருச்சிதைவு எனப்படும். மற்றையது தாயின் உடல் நிலை கருதி சட்டப்படி கருச் சிதைவு செய்வதாகும் இது வேண்டாத கர்ப்பமாக கருதப்படுகின்றது. முற்காலத்தில் பலவகையான முறைகள் மூலம் கருச்சிதைவு செய்து வந்தனர். கருக்கலைக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தியும், கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தியும் , உடற் காயங்களை உண்டாக்கியும் மற்றும் பல மரபு சார்ந்த முறைகளைப் பயன்படுத்தியும் கருச்சிதைவு செய்யப்பட்டது. தற்கால மருத்துவத்தில் மருந்துகளை கொடுப்பதினாலும், அறுவைச் சிகிச்சை மூலமும் கருச்சிதைவுகள் செய்யப்படுகின்றன.

கருச்சிதைவுக்கான காரணங்களாக, வேலையில் ஏற்படும் குழப்பங்கள், அளவுக்கு அதிகமான மனக்குழப்பம், படிப்பில் ஏற்படக் கூடிய இடைஞ்சல்கள், நிரந்தரமற்ற பொருளாதார நிலை ,உறவுகளில் உறுதியற்ற தன்மை, அத்தோடு மரபணுப் பிரச்சினைகளால் தாயின் கருவில் ஏற்படும்



"**கருக்கலைக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தியும், கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தியும், உடற் காயங்களை உண்டாக்கியும் மற்றும் பல மரபு சார்ந்த முறைகளைப் பயன்படுத்தியும் கருச்சிதைவு செய்யப்பட்டது.**"

குறைபாடு , தாயின் கருப்பையில் ஏற்படும் சில குறைபாடு, தாயின் உடம்பில் திடீர் கிருமித் தாக்குதல் ஆகியவற்றோடு அளவுக்கு அதிகமான பிரயாணம், அதிக எடை, பலம் குறைந்திருப்பது போன்றனவே பொதுவான காரணங்களாகின்றன. அத்தோடு 35 வயதுக்கும் மேற்பட்ட பெண்கள் கர்ப்பமாகும் போது கூட கருக் கலைந்து விடும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

தற்காலத்தில் வளர்ந்த நாடுகளில் பொதுவாக ஒவ்வொரு நாட்டினதும் சட்ட நடைமுறைக்கு உட்பட்டு மருத்துவத்தில் பாதுகாப்பான முறைகளைக் கையாண்டே கருக்கலைப்பு செய்யப்படுகின்றது. ஆனாலும் உலக அளவில் ஆண்டுக்கு சுமார் 70000 கர்ப்பிணிப் பெண்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் இறக்கின்றனர். இலங்கையில் நாளொன்றுக்கு 750 இற்கும் 1000இற்கும் இடைப்பட்ட கருச்சிதைவுகள் செய்யப்படுகின்றன. இதில் 5 தொடக்கம் 6 வீதமான கர்ப்பிணித் தாய்மார்கள் இறக்கின்றனர். மேலும் பலர் பக்க விளைவுகளால் நோயாளர்களாகின்றனர். இலங்கையில் கருச்சிதைப்பு சட்டப்படி குற்றம் என்கின்ற காரணத்தினால் தகுதியற்ற மருத்துவர்களை நாடிச் செல்கின்றனர்.

கருச்சிதைவினால் ஏற்படும் பாதிப்புக்களை பார்ப்போமானால், முதல் இரு மாதங்களுக்குள் கருச்சிதைவு ஏற்பட்டால் வழமையான மாதவிலக்கைப் போன்று வலியுடனும், இரத்தம் போதலும் இருக்கும். இதையடுத்து மூன்று மாதங்களுக்கு பிறகு நிகழும் கருச்சிதைவானது கருவானது உருவத்தைப் பெற்றிருப்பதால் இது பிரசவத்தைப் போன்று மிகவும் வலியும் வேதனையும் இருக்கும். நான்கு மாதங்களுக்கு பிறகு கருச்சிதைவு ஏற்படுமாயின் தாய்க்கு தசைப்பிடிப்பு , வலி மிதமான நிலையிலிருந்து அதிகமாக இருக்கும். கூடுதலான தீட்டுப்போதல், தாய்க்கு மரணம் ஏற்படக்கூடிய வாய்ப்பும் கூட உண்டு. ஐந்து மாதமளவில் கருச்சிதைவானது தாயின் அதிக இரத்த அழுத்தம், அதிக வாந்தி, சல ரோகம், குருதிச்சோகை வலிப்பு ஏற்படுகின்றது. இதனால் அதிகளவு இரத்தம் போதலுடன் உயிர் ஆபத்துக் கூட ஏற்படுகின்றது. ஆறுமாதங்களுக்குப் பிறகு கருச்சிதைவானது தாயின் அதிக வேலைப்பழு காரணமாகவும் போசாக்கின்மை காரணமாகவும் ஏற்படுகின்றது. இக்காலப்பகுதியில் வெளிவரும் கருவானது உயிருடன் இருந்தாலும் சிறிது வேளையில் உயிர் இழந்து விடும். ஏழாம் மாத முடிவில் ஏற்படும் கருச்சிதைவானது

"**அடிக்கடி கருச்சிதைவு செய்து கொள்ளும் பெண்கள் தொற்று நோய்க்கிருமிகளின் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.**"

குழந்தையானது உயிர் பிழைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம் கொண்டதாக இருக்கும். இந்நிலையில் பிறக்கும் குழந்தைகளை முதிராக் குழந்தைகள் என்பர். இக்குழந்தைகளின் பாலின உறுப்புக்கள் விருத்தியடையாத நிலையில் காணப்படும். இதனால் தாயின் சூல் பாதிப்படையும் நிலை கூட ஏற்படும். இக்குழந்தைகள் *1500* கிலோகிராமுக்கு குறைவான எடையுடனே இருப்பதோடு நிறக் குறைபாடு, 180mT க்கு குறைவான இதயத்துடிப்புடனே இருக்கும். இக்குழந்தைகளை வோமர் அறையில் வைத்து இரண்டு கிலோ வரும் வரை வைத்து பாதுகாக்கப்படும். இக்குழந்தைகளுக்கு சுவாசம் தொடர்பான நோய்கள் அதிகம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

கருச்சிதைவானது ஏற்படும் போது கருவானது முற்றாக வெளிவராது விட்டால் தாய்க்கு தொற்றுக்கள் அதிகம் (காய்ச்சல், இரத்தச் சோகை) ஏற்பட வாய்ப்புண்டு. இதனைத் தடுக்க கருப்பையை DNC முறையில் துப்பரவு செய்வதன் மூலம் இதன்மூலம் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்கலாம்.

இவர்கள் மீண்டும் கருத்தரிக்கும் போது இரத்தச் சோகை நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு.

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிப் பெண்கள் சரியான உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி மற்றும் மருத்துவரின் ஆலோசனைப் படி சர்க்கரை வியாதியையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல சத்தான உணவு மற்றும் இரும்புச்சத்து மாத்திரைகளை உட்கொண்டு பின் விளைவுகளைக் கொண்டு வரும் இரத்தச் சோகையைத் தடுக்கலாம். அடிக்கடி கருச்சிதைவு செய்து கொள்ளும் பெண்கள் தொற்று நோய்க்கிருமிகளின் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

ஆகவே, இன்று உலக நாடுகளில் மக்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு மற்றும் கருத்தடை பற்றிய அறிவு பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்ததன் விளைவாக அண்மைய ஆண்டுகளில் கருச்சிதைவானது ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக அறியமுடிகின்றது.■

**லோகமலர் ஜெயக்குமார்**

# 15-44 வயதிற்குட்பட்ட பெண்களின் கருக்கலைப்புத் தரவுகள் (1000களில்)



# சட்டம் சொல்கிறது....

கருக்கலைப்புத் தொடர்பான சட்டங்களும், பண்பாட்டு நோக்குகளும் உலகம் முழுவதிலும் பெருமளவுக்கு வேறுபடுகின்றன. கருக்கலைப்பிற்கு ஆதரவானவர்களுக்கும் எதிரானவர்களுக்கும் இடையிலான விவாதங்கள் உலகம் முழுவதிலும் நடைபெறுகின்றன. கருக்கலைப்பிற்கு எதிரானவர்களோ கருவோ அல்லது முளையோ அல்லது முதிர்கருவோ மனித உயிருக்கு சமமானது என்றும், அதனை அழிப்பது கொலைக்கு சமமானது என்றும் வாதிடுகின்றனர். கருவை வளர விடுவதும், அழிப்பதுவும் அதனைச் சுமக்கும் பெண்ணின் உரிமை என்போரும் உள்ளனர். இவர்கள் கருக்கலைப்பிற்கு ஆதவானவர்கள். கலாசார பண்பாட்டு இறுக்கம் மிக்க இலங்கையிலும் கருக்கலைப்புத் தொடர்பாக மிகச் சரியான தரவுகள் இல்லை. பலதரப்பட்ட ஆய்வுகளின் படி தூண்டல் கருச்சிதைவு ஆண்டொன்றுக்கு 1,50 000 – 1, 75 000 ஆக உள்ளது. சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி அரசாங்க மருத்துவமனைகளுக்கு அனுமதிக்கப்படுகின்ற பெண்களில் 7-14 வீதமானவர்கள் தூண்டல் கருச்சிதைவின் பிரச்சினை காரணமாக அனுமதிக்கப்படுபவர்களாக உள்ளனர்.

அரசாங்க அறிக்கைகளின்படி 90 வீதமான பெண்கள் திருமணமானவர்களாகவும், 10 வீதமான திருமணமாகாத பெண்களும் கருக்கலைப்பைச் செய்பவர்களாக உள்ளனர். ஆயினும் 18-25 வயதுக்குட்பட்ட திருமணமாகாத பெண்கள் கருக்கலைப்பு செய்வது அதிகரித்துள்ளது. இதற்கு காரணம் பூப்பெய்துவதற்கும் திருமணத்திற்குமான கால இடைவெளி அதிகரித்து உள்ள காரணத்தினால் திருமணத்திற்கு அப்பாலான கருக்கலைப்பு அதிகமாக உள்ளது.



rxlist.com

> **“இலங்கையின் 1883 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கத் தண்டனைச் சட்டக் கோவையின் 303 ஆம் பிரிவின் கீழ் கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் நன்னோக்கத்தினால் அன்றி, கருச்சிதைவை ஏற்படுத்தல் 03 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது இரண்டிற்கும் பொறுப்பாக்கப்படக் கூடிய குற்றமாகும்.”**

இலங்கையின் 1883 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கத் தண்டனைச் சட்டக் கோவையின் 303 ஆம் பிரிவின் கீழ் கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் நன்னோக்கத்தினால் அன்றி, கருச்சிதைவை ஏற்படுத்தல் 03 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது இரண்டிற்கும் பொறுப்பாக்கப்படக் கூடிய குற்றமாகும். மேலும் அப்பெண் கருவுடையவளாய் இருந்தால் (எட்டு வாரங்களையுடைய கரு) (I Foetal Muvement) 7 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையுடன் தண்டப்பணமும் விதிக்கக் கூடிய குற்றமாகவும் உள்ளது. இச்சட்டத்தின் 304 ஆம் பிரிவின் படி பெண்ணின் சம்மதம் இன்றி கருச்சிதைவை ஏற்படுத்தல் 20 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையுடன் தண்டப்பணமும் விதிக்கக் கூடிய குற்றமாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் கருச்சிதைவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலினால் மரணம்

விளைத்ததல், பிள்ளை உயிருடன் பிறப்பதைத் தடுக்கும் என்ற கருத்துடன் அல்லது பிறந்த பின்னர் இறக்கச் செய்யும் என்ற கருத்துடன் செய்யப்படும் செயல், குற்றத்துக்கு இடமான மனித உயிர்ப் போக்கலாகக் கூடிய செயல் ஒன்றினால் உயிர்ப்புள்ள பிறக்காத பிள்ளையின் மரணத்தை ஏற்படுத்தல் எனவும் இச்சட்டத்தின்படி குற்றமாவதுடன் சிறைத் தண்டனை தண்டனை விதிக்கக் கூடிய குற்றங்களாகவும் உள்ளது.

ஆயினும் கருச்சிதைவு தொடர்பிலான புதிய சட்டங்களோ அல்லது சட்டத்திருத்தங்களோ கொண்டுவரப்படவில்லை. காலத்தின் மாற்றத்திற்கேற்பவும் சமூக பொருளாதார கலாசார வளர்சிக்கு ஏற்பவும் கருச்சிதைவு தொடர்பிலான சட்ட திருத்தம் அல்லது புதிய சட்டங்கள் ஆக்கப்பட வேண்டும்.

தற்காலத்தில் வளர்ந்த நாடுகளில் பொதுவாக ஒவ்வொரு நாட்டினதும் சட்ட நடைமுறைக்கு உட்பட்டு மருத்துவத்தில் பாதுகாப்பான முறைகளைக் கையாண்டே கருக்கலைப்பு செய்யப்படுகின்றது. ஆனாலும் உலக அளவில் ஆண்டுகளுக்கு சுமார் 70, 000 கர்ப்பிணிப் பெண்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் இறக்கின்றனர். உலகளவில் ஆண்டொன்றுக்கு நிகழும் 4.4 கோடி கருக்கலைப்புகளில் கிட்டத்தட்ட அரைவாசிப் பங்கு பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளாகவே உள்ளன. மக்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கருத்தடை பற்றிய அறிவு இன்மையும் இதற்கொரு காரணமாகும்.

கர்ப்பிணிப் பெண்ணின் உயிர் காக்கும் பொருட்டும், உடல் மற்றும் மனநலன் கருதியும், பிறவு நோய்களுடன் பிறக்கப்போகும் குழந்தைகளைத் தடுக்கும் பொருட்டும் தூண்டல் கருச்சிதைவினை மேற்கொள்ள முடியும். இதில் ஒவ்வொரு நாட்டினதும் சட்டங்கள் மற்றும் தனிநபர் விருப்பத்தைப் பொறுத்தும் சரியான முறை தேர்வு செய்யப்படலாம். இத்துடன் பாலியல் பலாத்காரம் போன்ற வன்முறைகளால் ஏற்படும் வேண்டத்தகாத கருத்தரிப்புத் தொடர்பிலும் கருச்சிதைவு தொடர்பான சட்ட மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். ■

**கிசாந்தினி பாலன்**

# ஏமாற்றமாகிப்போன உணர்வுகள்

என் உணர்வுகள் மதிக்கப்படாது
சீரழிக்கப்படுகின்றன
எப்போதும்
அவர்களுக்குத் தேவையானதை மட்டுமே
என்னிடத்தில் இருந்து பிழிந்தெடுக்கின்றனர்.
ஏமாற்றமாகிப்போன
உணர்வொன்றிப்பற்ற
உடல்களின் உரசலாக மட்டுமே உள்ளதால்
என் உணர்வுகளைக் கூட நான் மதிப்பதில்லை
சதைப் பிண்டமாகப்பட்ட
எனது உடலும் உயிரும்
புறக்கணிக்கப்பட்ட
உணர்வுகள் வற்றிய
உயிர்ப்பின்றிச் செத்தவைகளாகவே...
இந்தத் தொடுகையும் உறவும்
இன்னும் தொடர்கின்றன...



**குகா**



# கருவுறல் = பெண்ணின் பாலுணர்வு ?

shutterstock

இலங்கையைப் பொறுத்தரையில் அண்மைக்காலமாக கைவிடப்படுகின்ற மற்றும் சடலமாக மீட்கப்படுகின்ற சிசுக்களின் தொகை அதிகரித்து வருகின்றது. குறிப்பாக யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் சிலவற்றின் விளைவாகவே இதனைக் கொள்ளலாம். அதாவது யுத்தத்தினால் தனிமையாக்கப்பட்ட பெண்களது பொருளாதாரச் சிக்கல் நிலையும் இவ்வாறான சிசுக்களின் மரணங்களிற்குக் காரணமாகிவிடுகின்றன. வடக்கைப் பொறுத்தவரையில் தொழில் தெரிவென்பது மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே காணப்படுகின்றது. பெண்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வது பெரும் சிரமமான ஓர் விடயமாகும். ஆண் அங்கத்தவர்கள் இல்லாத குடும்பங்களில் பெண்கள் தமது குழந்தைகளுடன் வருமானமின்றி அல்லல்படுகின்றனர். அதனை சில ஆண்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். குறிப்பிட்ட பெண்களிடம் தமது பாலியல் தேவைக்காக நெருக்கமாக இருந்து கொள்கின்றனர். நெருங்கிய உறவுகள், அயலவர்கள் என நன்கு தெரிந்தவர்களாலேயே பாதிக்கப்பட்ட பல பெண்கள் கர்ப்பமாகி உள்ளனர். இவ்வாறான உறவினை எமது சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. இதன் காரணமாக இந்த உறவுநிலையானது இரகசியமாகவே இருந்து வருகின்றது. இவ்வாறு உறவு வைத்துக் கொண்ட பெண்கள் பற்றிப் பார்த்தால் அவர்கள் ஏற்கனவே திருமணமாகி கணவனை இழந்த அல்லது கணவன் காணாமல் போன இல்லது கணவன் தடுப்பில் உள்ள பெண்களாகவும், காதல் என்ற விடயத்தினால் ஏமாற்றப்பட்ட பெண்களாகவுமே காணப்படுகின்றனர்.

பெண்களது பாலியல் உரிமை பற்றியும் அவர்களது பாலியல் தேவை பற்றியும் நாம் சிந்திக்காதவர்களாகவே இருக்கின்றோம். ஏனெனில் பெண்ணிலைவாதிகளோ அல்லது உள்ளூர் நல சுகாதார உத்தியோகத்தர்களோ கணவனை இழந்த அல்லது தனித்து வாழ்கின்ற பெண்களது குடும்ப சுகாதார நலனில் அக்கறை காட்டுவதில்லை. ஏனெனில் எமது சமூகத்தைப் பொறுத்தவரை கணவனை ஒரு பெண் இழக்க நேரிட்டால் அவளுக்கு பாலியல் உணர்வோ அல்லது பலுறவு கொள்ளும் தேவையோ அவசியமில்லை என்ற கருத்தைளே கொண்டுள்ளது. மனைவியை இழந்த ஆண்களுக்கு இவ்வாறான பக்கச்சார்பான ஓரங்கட்டல் இருப்பதில்லை. ஆண் திருமணமாக முன்போ அல்லது பின்போ அல்லது மனைவியை இழந்த பின்போ எவ்வாறாகினும் இருந்து கொள்ளலாம். ஆனால் பெண் கணவனுடன் மாத்திரமே தனது பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்ற எழுதாத விதியை எமது சமூகக் கட்டமைப்பு உருவாக்கியுள்ளது. பெண்களது பாலியல் உரிமை பறிக்கப்படுகின்றது. இதனில் இருந்து மாற்றங்காண முற்படும் போது எமது பெண்கள் பல நெருக்கடிகளில் சிக்கிக் கொள்கின்றனர். அதற்கு எமது

நாட்டில் உள்ள இறுக்கமான சட்டங்களும் காரணமாகிவிடுகின்றன. தனித்த பெண்கள், பாலியல் உணர்வினால் உந்தப்படுகின்ற பெண்கள் தமது பாலியல் தேவையைப் பூர்த்தி செய்ய விளையும் வேளையில் எதிர்பாராத கர்ப்பத்தை தாங்குகின்றார்கள். இவர்களுக்கு ஏற்கனவே குழந்தைகள் இருக்கும். சமூகத்தின் அந்தஸ்து நிலைக்காக பிறக்கும் குழந்தை அவர்களுக்கு தேவையற்றதாகி விடுகின்றது. அவ்வாறன்றி பிறக்கும் குழந்தையை அவர்கள் வளர்க்க நினைத்தாலும் குறிப்பிட்ட பெண்களை எமது ஆணாதிக்க மற்றும் ஒழுக்கம் என்ற விடயத்தைக் கடைப்பிடிக்கும் பலரும் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் மேலும் தமது வாழ்நாள் முழுவதுமே நடத்தை ரீதியில் ஓரங்கட்டப்படுவார்கள். இதனால் அவர்களது பிள்ளைகளது எதிர்காலம் வீணாகிப்

> **“ பெண்ணின் உடலமைப்பு காரணமாக பாலியல் உறவின் பின்னரான வேண்டாத கர்ப்பத்தின் முழுவதுமான பாதிப்பை பெண்களே எதிர்கொள்கின்றனர். ஆண்கள் தப்பித்துவிடுகின்றனர். ”**

போய்விடும். இவ்வாறான சமூக நிலையைக் கருத்தில் கொண்ட பலர் தமது வேண்டாத கர்ப்பத்தை சட்ட ரீதியற்ற முறையில் தடை செய்ய முயற்சிக்கின்றனர். ஏனெனில் எமது நாட்டில் கருக்கலைப்பு என்பது சட்ட ரீதியாக இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை. இதனால் பெண்கள் தமது வேண்டாத கர்ப்பத்தைக் கலைப்பதற்கு பல விதமான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். சட்ட ரீதியற்ற வகையில் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடிய வகையில் கருக்கலைப்புகளில் ஈடுபடுகின்றனர். குடும்பக் கட்டுப்பாடு, கர்ப்பத் தடுப்பு விதிமுறைகள் பற்றிய போதிய விழிப்புணர்வின்மையானது சிசுக்களின் மரணத்திற்கு பெரிதும் காரணமாகி விடுகின்றன.

கருக்கலைப்பினை சட்ட ரீதியாக மாற்றினால் சமூகத்தின் கட்டுக்கோப்புக் குலைந்து விடும் என்றும், இளம் பெண்கள் கருக்கலைப்பில் ஈடுபட வாயப்பு உண்டு என்ற வாதத்தை முன் வைப்போரும் எம்மில் உள்ளனர். ஆனால் சட்ட ரீதியற்ற முறையில் கருக்கலைப்பில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலானோர் ஏற்கனவே திருமணமாகிப் பிள்ளைகள் பெற்றவர்களாகவே அதிகம் உள்ளார்கள். இவர்கள் தமது வேண்டாத கர்ப்பத்தைக் கலைப்பதற்கே முயல்கின்றனர். அத்தோடு இளம்பெண்களின் கர்ப்பம் எனக் குறிப்பிடப்படும் போது காதலினால், காதலினால் ஏற்படுகின்ற நம்பிக்கையினால், அன்பினால் உண்டாகிய கர்ப்பங்களாகவே காணப்படுகின்றன. காதலின் மேல் உள்ள நம்பிக்கை மற்றும் இருவரிடையே ஏற்படுகின்ற நெருக்கம் போன்றவற்றின் காரணமாக நம்பிக்கையின் அடிப்படையில் பாலுணர்வு கொள்ளும் பெண்கள் கர்ப்பம் தரிக்கும்போது ஆண்களால் ஏமாற்றப்படுகிறார்கள். இவ்வாறான பெண்களும் பாலியல் உறவின் போதோ அல்லது கர்ப்பம் தரித்த ஆரம்ப காலத்திலோ தமது உடல் பற்றியோ அல்லது உடலில் ஏற்படப் போகின்ற மாற்றங்களைப் பற்றிச் சிந்திப்பது குறைவு. அவ்வாறான விழிப்புணர்வு கிடைப்பதுமில்லை. அவற்றை இளஞ்சமூகத்திற்கு சொல்லிக் கொடுப்பதுமில்லை. பாதுகாப்பான உடலுறவு பற்றி சிந்திக்காத பலரே இன்று வேண்டாத கருவைச் சுமந்தவர்களாகவும், சிசுக்களின் மரணத்திற்குக் காரணமானவர்கள் எனக் கொண்டு தண்டனை பெற்றும் வருகின்றார்கள்.

பாதுகாப்பான உடலுறவு பற்றி சிந்தித்தாலும் தனித்த மற்றும் இளம் பெண்கள் அவற்றை நாடிச் செல்வதும் அவ்வளவு சுலபமல்ல. ஏனெனில் கிராமப்புறங்களில் வாழ்கின்ற திருமணமாகாத அல்லது தனித்த பெண்கள் பாதுகாப்பான உடலுறவிற்கான மருத்துவ வசதிகளையோ அல்லது ஆணுறை, மருந்துவில்லைகளையோ வெளிப்படையாகப் பெறுவது சுலபமல்ல. ஏனெனில் எமது சமூகம் இவ்வாறான விடயங்களில் உன்னிப்பாகக் கவனம் செலுத்துகின்றது. இவ்வாறான நிலைமைகளிலேயே வேண்டாத தவிர்க்க முடியாத கர்ப்பங்கள் குழந்தைகளாகும் போது தவிர்க்க முடியாத சூழலில் கைவிடப்படும் போக்கு அதிகரித்துள்ளது. பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆணோ பெண்ணோ விருப்பத்தின் பேரில் உடலுறவு வைத்துக் கொள்ளலாம் என்ற சட்டம் எமது நாட்டில் உள்ளது. அதற்கான கல்வி, இணைய வசதிகளும் உள்ளன. இவையனைத்தும் இருந்த போதிலும் இருப்பினும் சட்டரீதியான

கருக்கலைப்பு இல்லாத காரணத்தால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டுமே. பெண்ணின் உடலமைப்பு காரணமாக பாலியல் உறவின் பின்னரான வேண்டாத கர்ப்பத்தின் முழுவதுமான பாதிப்பை பெண்களே எதிர்கொள்கின்றனர். ஆண்கள் தப்பித்துவிடுகின்றனர்.

மேற்கூறப்பட்ட விடயம் தவிர, இன்றையகாலகட்டத்தில் வயது வந்த ஆண்களால் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதனால் கர்ப்பம் தரிக்கின்றனர். இச்சிறுமிகளது கர்ப்பத்தைக் கூட கலைப்பதற்கு எமது நாட்டில் சட்டம் இல்லை. இதனால் பாதிக்கப்பட்ட சிறுமிகள் உடல் உள ரீதியில் பக்குவப்படாத நிலையில்

> **“யுத்தத்தின் பின்னர் ஆண்கள் இல்லாத பெண்களது பொருளாதாரம் மற்றும் பாலியல் தேவைகளை அனாவசியமென அவ்வளவு சுலபமாக ஓரங்கட்டிவிட முடியாது.”**

கூட அவர்கள் பிள்ளையைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையினது சிறுவர் உரிமைகளைப் பின்பற்றுகின்ற எமது நாட்டில் இன்னமும் சிறுவர்கள் மீதான வன்முறைகளை ஒழிக்க முடியாதும் அவர்கள் மீதான அத்துமீறிய நிர்ப்பந்தங்களை நிறுத்த முடியாதும் உள்ளது. பெண்கர் சிறுவர்ளுக்கான தனியான அமைச்சு ஒன்று இருக்கின்ற போதும் பாதிக்கப்படுகின்ற பெண்கள் சிறுவர்கள் மீதான கரிசனை குறிப்பிடப்படும்படி இல்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும். கோள்கை ரீதியில் மாத்திரமே பெண் சுதந்திரம், சிறுவர் உரிமைகள் பற்றி நாம் பேசுகின்றோம். நடைமுறையில் பெண்கள் சிறுவர்கள் நாளாந்தம் துன்புறுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்கான தகுந்த பாதுகாப்பையும் அதேநேரம் சந்தேக நபர்களுக்கு அல்லது குற்றவாளிகளுக்கு காலம் கடத்தாத துரிதமான அதிகபட்ச தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் எமது நாட்டில் பெண்கள் சிறுவர்கள் மீதான வன்முறைகளைக் குறைப்பது கடினமானதாகவே இருக்கும்.

அண்மைக் காலங்களில் வேண்டாத கர்ப்பத்தின் வாயிலாகப் பிறந்து இறந்த குழந்தைகளது தாய்மார்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். சிலர் இன்னமும் விளக்கமறியலில் உள்ளார்கள். இவ்வாறான குறிப்பிட்ட தாய்மார்களது சூழ்நிலை பற்றிப் பார்த்தால் பொருளாதார வசதியில் பெரும் பின்னடைவில் உள்ளோராகவும் அவர்களே அந்தக் குடும்பத்தைக் கொண்டு நடாத்துவோராகவும் உள்ளார்கள். இந்தத் தாய்மார்கள் கைது செய்யப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கின்ற ஏனைய குழந்தைகளது பாதுகாப்பு அவர்களது எதிர்காலம் குறிப்பிட்ட பிள்ளைகள் மீதான எமது சமூகத்தின் பார்வை, பாதிக்கப்பட்ட பெண்ணினது உளத் தாக்கம் என்பன பற்றி சிந்திப்பது அவசியம். யுத்தத்தின் பின்னர் ஆண்கள் இல்லாத பெண்களது பொருளாதாரம் மற்றும் பாலியல் தேவைகளை அனாவசியமென அவ்வளவு சுலபமாக ஓரங்கட்டிவிட முடியாது.

சில நாட்களுக்கு முன்னர் இணையத்தில் முன்னாள் போராளிப் பெண் ஒருவர் தனது செவ்வியில் பொருளாதாரத்திற்காகவும் தனது பிள்ளைகளை வளர்ப்பதற்காகவும் பாலியல் தொழிலில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டிருந்தார். தனக்கு தமிழ் அரசியல்வாதிகள் எவரும் உதவி செய்யவில்லை என்ற கருத்தையும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதனை எத்தனை பேர் உளப் பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளோம். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரணத்தை வழங்க முற்படுவதை விடுத்து அரசியல்வாதிகள் மறுப்பறிக்கை விடுவிப்பதிலும் அவ்வாறு யாரும் செவ்வி வழங்கவில்லையென்றும் அதிலே குறிப்பிட அனைத்தும் பக்கச்சார்பானவை என்றுமே சில ஊடகங்கள் விமர்சித்தன. குறிப்பிட்ட பெண் போல யாருமே எமது சமூகத்தில் இல்லை என்றே கருதுவோமானால் எங்கிருந்து மரணித்த சிசுக்களின் உடல்களும், உயிருடனான குழந்தைகளும் கண்டெடுக்கப்படுகின்றன? அவற்றிற்கான காரணம் என்ன? இது பற்றி என்றாவது நாம் ஆக்கபூர்வமாகச் சிந்தித்துள்ளோமா? இதற்கு நாம் சமூக அங்கத்தவர்கள் என்ற ரீதியில் என்ன செய்யப்போகின்றோம் என்பதே எம் முன்னால் உள்ள மிகப் பெரிய கேள்வியாகும்.■

**வடக்குக் கிழக்குப் பெண்கள் அமைப்பு**

# கருக்கலைப்பு

நீ அறிந்திருந்தாயா?
உனக்கு அனுமதியில்லையென
கருக்கலைப்பதற்கு
உனது கருவறையிலிருந்த அச்சிசுவை
நீ அறியாவிட்டாலும்
இந்த நாகரீக சமூகம்
கட்டுப்பட்டிருந்தது பாதுகாப்பதற்கு
அந்தக் கருவை - அந்தச் சிசுவை
இருப்பினும் நீ அழித்தாய்
அந்த உயிரை
மன்னிப்புக் கிடையாது உனக்கு சட்டத்தில்
விடுதலை கிடையாது இப் பாவத்தில்

மன்னியுங்கள்...
கருவைச் சுமந்து ஈன்றால் நான்
அப்பா யாரென
நான் கூட அறியாத அச்சிசுவை

வலுவுற்றதா தங்கள் சட்டம்
முழுமையானதா அவர்களது தருமம்
"வம்பிலே" பிறந்த பெயரிலிருந்து
விடுவித்துக் கொள்வதற்கு பிள்ளையை
"மணமாகா" தாயைப் போல்
மீட்டெடுக்க என்னை.

சிறைச்சாலைக்கு அல்ல நரகத்திற்கும்
செல்வேன் நான் ஒரு மனதாய்

ஆனாலும்......

கண்டுபிடிக்க முடியுமா
தங்கள் சட்டத்தால்
அவர்களது தருமத்தால்
எனது கருவறை முழுவதிலும்
பலாத்காரமாய்
விந்தணுக்களைக் கொட்டிய
அந்த ஆண் மகனை முதலில்

**அனோமா ராஜகருணா**



## சிறுகதை



# ஹிப்பொக்ரடிஸின் புத்திரன்

டாக்டர் ஜீவானந்தா மதிய உணவுக்காக தமது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகைதந்து சாப்பிடுவதற்கு முன்னர் முகத்தைக் கழுவுவதற்காக கைக்கடிகாரத்தைக் கழற்றி வைக்கும் போது அதில் நேரம் பிற்பகல் இரண்டு முப்பதெனப் பதிவாகி இருந்தது. ஏனைய நாட்களில் இந்த நேரமானது மதிய உணவைச் சாப்பிட்டு, சிறிது நேரம் ஓய்வெடுத்து, பணம் செலுத்தி சிகிச்சை பெற உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை தரும் சில நோயாளர்களையும் பார்த்துவிட்டு, மீண்டும் ஆஸ்பத்திரிக்குப் புறப்படும் நேரம்.

டாக்டர் ஜீவானந்தா முகத்தைக் கழுவிக் கொண்டு சிக்கலற்ற மனதுடன் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து இரண்டு கரண்டி சோறினை பீங்கானில் போட்டுக்கொண்டார். அறக்குளா மீன் குழம்புக் கறியையும், போஞ்சிக் கறியையும், பொன்னாங்காணி சுண்டலையும், பச்சை மிளகாயையும், சின்ன வெங்காயத்தினையும் கண்ட அவரின் பசி இரண்டு மூன்று மடங்குகளாக அதிகரித்தது.

" ரீங்...... ரீங்....... ரீங்....... "

உத்தியோகபூர்வ இல்லத்தின் மணி மூன்று தடவைகள் ஒலித்தது. "சாப்பிடுவதற்கும் சுதந்திரமில்லை" என்று அவரது மனதில் ஆத்திரம் ஏற்படாவிட்டாலும் இலேசான கோபம் எழுந்தது. அதற்கு ஏற்றவாறு வாயும் உதடும் இறுக்கமானது. பரிமாறிக்கொள்வதற்காக எடுத்த அறக்குளா மீன் துண்டை கோப்பையிலிருந்து மேலே தூக்கி ஒரு கணப்பொழுது சிந்தித்தார். மணி மீண்டும் மூன்று தடவைகள் ஒலித்தது. "மருந்துக்கு வந்துள்ள ஒரு அவசரக்காரனாக இருக்க வேண்டும். அவர் அறக்குளா மீன் துண்டுடன் கூடிய கரண்டியை கோப்பைக்குள்ளேயே வைத்துவிட்டு நாற்காலியிலிருந்து எழுந்து விறாந்தையின் கதவை நோக்கி நகர்ந்தார்.

"ஆட்களுக்குத் தெரியுமா நான் சாப்பிடத் தயாரானது" மற்றது "பணம் தந்து மருந்தெடுக்க வருகின்ற நோயாளிகள் ".. தமது நோயை விரைவாகக் குணப்படுத்திக் கொள்ளவே அவர்களுக்கு தேவைப்படுகிறது. அவர் விறாந்தையின் கதவைத் திறந்தார்". இருப்பினும் அவர் எதிர்பார்த்தவாறு அங்கு நோயாளர்கள் இருக்கவில்லை. ஆஸ்பத்திரியில் பணியாற்றும் சிற்றூழியரான சைமன் நின்றுகொண்டிருந்தான். அவரிடமிருந்து வெளிப்பட்ட பதட்டத் தன்மை டாக்டர் ஜீவானத்தாவை ஒரு நொடி மௌனமாக்கியது.

" ஐயா விஷமருந்திய நோயாளி ஒருவரை அவசரமாகக் கொண்டு வந்துள்ளார்கள். நிலைமை மோசமாகவுள்ளது. ஐயாவை உடனே அழைத்து வரும்படி மிஸ் சொன்னார்..." பதட்டத்துடனேனும் சைமன் தெளிவாக வலியுறுத்திய கூற்றுத் தொடர்பாக இரண்டாவது தடவையாகவும் சிந்திப்பதற்கு நேரம் டாக்டர் ஜீவானத்தாவுக்கு தேவைப்படவில்லை. அவர் உடனே கதவைப் பூட்டிவட்டு விரைவாக சைமனுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். நான்காம் வாட்டில் ஒரு கட்டிலைச் சுற்றி திரைச்சீலை இடப்பட்டிருப்பதை தூரத்திலிருந்தே அவர் கண்டார். வாட்டுக்குப் பொறுப்பான தாதியும் இன்னுமொரு தாதியும் நோயாளிக்குத் தேவையான முதலுதவிகளைச் சுறுசுறுப்பாக ஒழுங்குபடுத்திக்கொண்டிருப்பது காணக்கூடியதாகவிருந்தது. டாக்டர் ஜீவானந்தா திரைச்சீலைக்குள்ளால் நுழையும் போது பாடசாலை சீருடை அணிந்த ஒரு மாணவி கட்டிலில் கிடத்தப்பட்டிருப்பதைக் கண்டார். அவளது தலை இடது பக்கமாக

திரும்பியிருந்தது. அந்த முகத்தைக் கண்டவுடன் இளம் மருத்துவர் அதிர்ந்துபோனார். அவருக்கு தமது கண்களையே நம்ப முடியவில்லை. "இது குசுமலதாவா?" அது வினாவைப் போலவே பதிலாகவும் அமைந்தது. மனதில் ஏற்பட்ட அதிர்ச்சியானது மருத்துவரை ஒரு கணம் கற்சிலையாக மாற்றியது. கட்டிலுக்கு அருகில் நின்ற இரண்டு தாதிமார்களும் டாக்டர் ஜீவானந்தாவின் இந்த மாற்றத்தைத் தெளிவாகக் கண்டனர்.

" இந்தப் பிள்ளையை ஐயாவுக்குத் தெரியுமா?" ஒரு தாதி எழுப்பிய கேள்வியினால் இளம் மருத்துவர் மீண்டும் சுயநினைவுக்கு வந்தார். ஒரு பதிலும் அளிக்காத அவர், நோயாளியின் தலையை நிமிர்த்தி கண்களைத் திறந்து பார்த்தார். கருவிழி கண்களுக்கெட்டிய தொலைவில் இல்லை. அடுத்து அவர் அவளின் வலது கையைப் பிடித்து நாடித்துடிப்பைப் பார்த்தார். கழுத்தைச் சுற்றியிருந்த குழாய் இரு காதுகளில் பொருத்தப்படுவதற்கும் மற்றப் பகுதி நோயாளியின் மார்பில் வைக்கப்படுவதற்கும் ஒரு செக்கனும் செல்லவில்லை. இருப்பினும் இரு காதுகளையும் நோக்கி வருகை தந்த சப்தமின்மையானது டாக்டர் ஜீவானந்தாவின் இதயத்துடிப்பு வேகத்தினை அதிகரிக்கச் செய்தது. அவர் ஓரிரு தடவைகள் நோயாளியின் நெஞ்சுப் பகுதியை ஓரளவு அமுக்கினார். இருப்பினும் சப்தம் எழுவதற்குப் பதிலாக அமைதியே நிலவியது. மருத்துவரின் முகத்தில் தென்படுகின்ற மாற்றங்களை அவதானித்துக் கொண்டிருந்த இரண்டு தாதிமார்களும் ஒவ்வொருவரின் முகங்களைப் பார்த்துக் கொண்டனர். சகல எதிர்பார்ப்புகளையும் கைவிட்ட டாக்டர் ஜீவானந்தா ஒரு கையைப் பிடித்து மெதுவாக அவளின் வயிற்றின் மீது வைத்துவிட்டு அவ்விடத்திலிருந்து வெளியேறினார். இரண்டு தாதிமாரும் வெள்ளைத் துணியொன்றால் அவளது உடலை மூடினார்கள்.

மரணித்த நோயாளி - குசுமலதா - ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள கிராமப் பிரதேசத்திலுள்ள பிரதான மற்றும் ஒரேயொரு சந்தியில் வைத்து விஷம் அருந்தியுள்ளார். சில சிறிய கடைகளையும் ஒரு கிராம வங்கியையும் மட்டும் கொண்ட இச்சந்தியில் வைத்து இவர் அதிக விஷத்துடன்கூடிய கிருமி நாசினியையே அருந்தியுள்ளார். வீதியில் பயணித்த சிலரால் இவர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டிருந்தார். வெற்று கிருமி நாசினி போத்தலையும் அவளது புத்தகங்களையும் அவர்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்திருந்தனர். புத்தகங்களுக்குள் இருந்த கிருமி நாசினி போத்தலை கொள்வனவு செய்தமைக்கான பற்றுச்சீட்டையும், இரண்டு தோடுகளை அடகு வைத்து நூற்று ஐப்பது ரூபா பெறப்பட்டமைக்கான பற்றுச்சீட்டொன்றையும், அவளது கையால் எழுதப்பட்ட கடிதமொன்றையும் தாதிமார்கள் இளம் மருத்துவரிடம் கையளித்தனர். கடிதத்தை கையில் எடுத்த உடன் டாக்டர் ஜீவானந்தாவின் கைவிரல்கள் நடுங்கின.

"நான் இந்த உலகில் நேசிப்பதற்காகவே பிறந்தேன் என நினைக்கின்றேன். நான் காதலித்தேன். காதலிப்பதற்கு முன்னர் சம்பிரதாயங்களை பார்த்தவள் அல்ல நான். காதல் உண்மையான இனிமையையே எனக்குப் பெற்றுத் தந்தது. அந்த இனிமையான காதல் இறுதியில் இமய மலையளவிலான சுமையுடன்கூடிய வேதனையை மரபுரிமையாக்கித் தருமென நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் காதல், தாங்கிக் கொள்ள இயலாத அந்த வேதனையையே எனக்கு மரபுரிமையாக்கியது. "இன்று அதற்காக எனது உயிரைத் தியாகம் செய்வதைவிட வேறு எவ்வித தீர்வும் இல்லையென்பதை நான் புரிந்துகொண்டேன். நான் ஒருவரையும் குறைகூறமாட்டேன். பகை கொள்ளவும்மாட்டேன். சுரங்கவும் நானும் சந்தித்த, குளிர்பானம் பருகி பல பொழுதுகளை கழித்து காதல் உலகத்தினை கட்டியெழுப்பிய இந்த இடத்தில் - இந்த இருக்கையில் அமர்ந்து எனது இறுதி ஒப்புதல் வாக்குமூலத்தை எழுத வேண்டியேற்பட்டிருப்பதுவும் விதி எனக்குச் செய்கின்ற பரிகாசமாகவிருந்தாலும் அதனை ஒரு புறத்தில் பாக்கியமாகக் கருதுகின்றேன். நான் இன்னமும் காதலை தீவிரமாக காதலிப்பதே அதற்கான காரணமாகும். இறுதியாக ஒரேயொரு வேண்டுகோளை மட்டும் விடுக்க விருப்புகின்றேன். அதாவது, நீங்கள் எனக்கோ நான் முகங்கொடுத்த துரதிஷ்டவசமான விதிக்கோ ஒருபோதும் அனுதாபம் காட்ட வேண்டாம். நான் இவ்வாறு இவ்வுலகில் மரணிக்கும் இன்னுமொரு உயிரினம் மட்டுமே. நான் உயிர் வாழ்ந்த காலப் பகுதியில் அனுபவிக்காத - எனது இறுதித் தீர்மானத்தின் மீதும் செல்வாக்குச் செலுத்திய, உங்களது நடத்தைகளையும் மாற்றுச் செயற்பாடுகளையும் சிந்திக்கும் போது என்மீது கருணைமிகு பார்வையைக் கொண்டு நேசியுங்கள் என்று கேட்பதும் ஒரு நகைப்பாகும். ஆனாலும் எனது இறுதிப் பிரார்த்தனை இதுவே. என்னைப் போன்ற ஒருவரைக் கருணைக் கண்களால் நேசிக்கக்கூடிய உலகமொன்று உருவாகட்டும்.

இப்படிக்கு,
**குசுமலதா**

கடிதத்தைப் படித்து முடித்த டாக்டர் ஜீவானந்தா எதுவித பேச்சுமின்றி அதனை மீண்டும் தாதியிடம் ஒப்படைத்தார். குசுமலதாவின் புத்தகங்களுக்கு மத்தியில் இருந்த ஒரு சிறிய பெட்டியில் மடிந்து கிடந்த அவளது கைக்குட்டையும், நீல நிற போல்பொயின்ட் பேனாவொன்றும், தபால் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டையொன்றும், ஐம்பது ரூபா தாளொன்றும் இன்னும் சில நாணயக் குற்றிகளும் இருந்தன.

அவர் அவளின் கைக்குட்டையை விரித்துப் பார்த்தார். சில மணித்தியாலங்களுக்கு முன்னர் அவள் இறுதியாகத் தம்முடன் உரையாடும் போது, அவளது கண்களால் வடிந்த நீரை உறுஞ்சிக்கொண்ட அந்தக் கைக்குட்டையின் ஒரு முனையில், போல்பொயின்ட் பேனாவால் ஒன்றாக இணைத்து வரையப்பட்ட இரு இதயங்கள் காணப்பட்டன. இரு இதயங்களினதும் நடுவில் சிவப்புக் கறைகள். அவை இரத்தக் கறைகளென இளம் மருத்துவர் ஒரு நொடிப்பொழுதில் புரிந்து கொண்டார். இது கட்டாயமாக குசுமலதாவினதும் சுரங்கவினதும் குருதியால் வைக்கப்பட்ட குறிப்பாக இருக்க வேண்டும். இதுவரை நேரமும் கடுமையான உள அழுத்தத்திற்கும் பாரிய அதிர்ச்சிக்கும் முகங்கொடுத்திருந்த இளம் மருத்துவரின் முகத்தில் மெல்லிய புன்னகை எழுந்தது. அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக ஆஸ்பத்திரி பணியாட்டொகுதி எழுதுநருக்கும் வாட்டுக்குப் பொறுப்பான தாதிக்கும் பொறுப்பினை ஒப்படைத்த டாக்டர் ஜீவானந்தா எதுவித நோக்கமுமின்றி ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு கொரிடோரில் தரையை நோக்கிய கண்களுடன் உலாவிக்கொண்டிருந்தார்.

அது அவரது குறுகிய கால மருத்துவ வாழ்க்கையில் கழித்த மிக நீண்டதும் விருப்பற்றதுமான மாலைப் பொழுதாக அன்றைய தினம் அமைந்திருந்தது. மாலை சுமார் ஐந்தரை மணிக்கு தமது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வரும்போதும் உருசி பார்க்க முடியாமல் போன மதிய உணவு வைக்கப்பட்டவாறே மேசையின் மீது இருப்பதைக் கண்டார். இன்னும் சிறிது நேரத்தில் இரவு உணவைக் கொண்டுவரும் ஜேமிஸ் இவற்றை அகற்றி இரவு உணவை வைத்துவிட்டுச் செல்வார். குளியலறைக்குள் நுழைந்து அவர் சூடாக இருந்த உடலை நன்கு குளிராக்கிக் கொண்டார். இருப்பினும் சிக்கல்மயமான சிந்தனைகளிலிருந்து அவரால் மீளமுடியவில்லை. எதுவுமே செய்ய முடியாத நிலையில் இறுதியாக கட்டிலில் சாய்ந்த அவர், மரணித்த குசுமலதாவின் முகத்தையும், சில மணித்தியாலங்களுக்கு முன்னர் தன்னுடன் உரையாடிய அந்த அழகான இளம் யுவதியின் உயிரோட்டமான நடத்தைகளையும் மிகவும் உயிரோட்டமான வகையில் நினைவில் தோற்றுவித்துக் கொள்வதற்கு முயற்சித்தார். அவர் அவை இடம்பெற்றவாறு படிமுறையாக தமக்கு முன்னால் ஒழுங்குவரிசைப்படுத்தி அங்கு ஏதேனுமொரு இடத்தில் தவறிழைக்கப்பட்டுள்ளதாவென வினவத் தொடங்கினார்.

அன்றைய தினம் காலைப் பொழுதில் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறுவதற்காக அதிகளவு நோயாளர்கள் வருகை தந்திருந்தனர். டாக்டர் ஜீவானந்தா வருகைதந்து அவரது இருக்கையில் அமர்ந்த பின், அழைப்பின்றி நோயாளிகள் ஒவ்வொருவராக வந்து மருந்துகளை எழுதிக்கொண்டு அறையிலிருந்து வெளியேறி மருந்து கொடுக்கும் இடத்திலுள்ள வரிசையில் சென்று சேர்ந்தனர். நோயாளர்களுடன் வரிசையில் வந்து வரிசையின் முன்னால் வெள்ளைநிற பாடசாலை சீருடையுடன் புத்தகங்கள் சிலவற்றை அரவணைத்துக்கொண்ட அழகான ஒரு யுவதி மருத்துவரைச் சந்திக்க வராமல் கதவடியில் நின்றவாறு தமது வாய்ப்பினை ஏனைய நோயாளிகளுக்கு வழங்கிக்கொண்டிருப்பது அவரது கவனத்தில் படாமலில்லை. ஆனாலும் அதைப் பற்றி சிந்திப்பதற்கான நேரத்தை ஏனைய நோயாளர்கள் பெற்றுக்கொடுக்கவும் இல்லை. பகல் பன்னிரண்டரை மணிக்கு இறுதி நோயாளியும் வருகைதந்து அறையைவிட்டுச் சென்றதன் பின் டாக்டர் ஜீவானந்தா தனது மருத்துவக் குழலையும் எடுத்துக்கொண்டு இருக்கையைவிட்டு எழும்பும் போது நாணத்துடனும் தயக்கத்துடனும் தமக்கு அருகில் வந்து நின்ற பாடசாலை மாணவியைப் பார்த்து மீண்டும் இருக்கையில் அமர்ந்து முன்னால் இடப்பட்டுள்ள இருக்கையில் அவளை அமருமாறு சமிக்ஞை செய்தார். அவள் இருக்கையின் ஒரு ஓரத்தில் மெதுவாக அமர்ந்து கொண்டாள். மருத்துவர் ஒரு தாள் துண்டை எடுத்து "பெயர்? வயது?" என எதுவித உணர்வுமின்றி இயந்திர வடிவில் வினவினார்.

"குசுமலதா ... பதினெட்டு வயது... " அவள் மெதுவாகத் தயக்கத்துடன் பதிலளித்தாள்.

"என்ன வருத்தம்?" எனக் கேட்காமல் வினாவுடன் கூடிய பார்வையை அவள் மீது செலுத்தினார். அதனைப் புரிந்துகொண்டவாறு குசுமலதா கைப்பிடிக்குள் சுருட்டி வைத்திருந்த எதையோ டாக்டர் ஜீவானந்தாவின் மேசை மீது மெதுவாக வைத்தாள்.

ஆச்சரியத்தினாலும் அறியும் ஆவலினாலும் பிரகாசமடைந்த கண்களுடன் இளம் மருத்துவர் ஒரு கணம் ஊமையானார். இரண்டு தோடுகள் மேசை மீது காணப்பட்டது. மேற்கொண்டும் அமைதி நிலவுவதற்கு இடமளிக்காது குசுமலதாவே அதனைக் கலைத்தாள்.

"என்னிடம் இவ்வளவுதான் உள்ளது. ஐயா... இதனை நீங்கள் எடுத்துக் கொண்டு" இதற்கு அப்பால் அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. அவளது வார்த்தைகள் தொண்டைக்குள் இறுகி அரவணைத்துக் கொண்டிருந்த புத்தகங்களின் பால் முகம் திரும்பியது. சொற்ப வேளையில் அவளது இதயத் துடிப்பு அதிகரித்து வேகமாக மூச்சுவிட்டாள். அத்துடன் கண்களால் வழிந்தோடிய கண்ணீர் அவளது இரு கன்னங்களால் வடிந்தோடி அவள் அணிந்திருந்த சட்டையினையும் புத்தகக் கட்டினையும் ஈரமாக்கியது.

"எதற்காக இந்தத் தோடுகள்?... ஆஸ்பத்திரியில் மருந்து இலவசமாகத்தான் வழங்கப்படுகின்றது." இளம் மருத்துவர் கருணையுடன் கூறிய வார்த்தைகளால் ஓரளவு நிம்மதியைப் பெற்றதுபோல் அவள் பெருமூச்சு விட்டாள்.

"என்ன வருத்தம்? " மீண்டும் வழக்கமான கேள்வியை அவர் தொடுத்தார். அப்போது அவள் தலையை நிமிர்த்தி கண்ணீரால் நிறைந்த பிரகாசமான கண்களால் மருத்துவரின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பிரகாசமான கண்கள் .. மூக்கு... உதடுகள். கண்ணீரால் நனைந்துள்ள கன்னங்கள். பிரகாசமான நிறம் தலைமுடியை இரண்டாகப் பிரித்து வாரி இரண்டு பின்னல்களைப் பின்னி ஒரு பின்னலை முன்பக்கம் இடப்பட்டிருந்ததன் மூலம் அவளிடமிருந்து வெளிப்பட்ட அந்த கவர்ச்சிகரமான தோற்றம் இளம் மருத்துவரின் மனதிலும் ஒரு சஞ்சலத் தன்மையை ஏற்படுத்தியது என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது. இருப்பினும் இன்னமும் அவளால் வார்த்தைகளை வெளியிடமுடியவில்லை. மனதை ஆட்கொள்ளும் கவர்ச்சிகரமான அவளது முகத்தை மேற்கொண்டும் பார்த்திருக்க முடியாமல் மருத்துவர் மேசை மீது வைக்கப்பட்டுள்ள தோடுகள் மீது பார்வையைத் திருப்பினார். இரண்டு பேரும் ஊமைகளானதால் மௌனம் ஆட்சிபுரிந்தது. அந்த மௌனத்தினுள் மருத்துவரின் கேள்விக்கான பதில் புதைந்திருந்தது. டாக்டர் ஜீவானந்தா அவ்வாறானதொன்றைப் புரிந்துகொள்ளக்கூடிய அறிவும் அனுபவமும் மட்டுமன்றி பிறப்பிலே கிடைத்த மோப்பத்துடன்கூடிய கருணை உள்ளத்தையும் கொண்டிருந்தார். அவளது மனதில் சிக்கியுள்ள பல விடயங்களை வெளியில் இழுத்தெடுப்பதற்காக பிறப்பிலே கிடைத்த மோப்ப அறிவின் ஊடாகச் செயற்படுவதற்கு அவர் மறுகணமே தீர்மானித்தார்.

" குசுமலதா எந்த பாடசாலைக்குப் போகிறீங்கள்? ".......

".. சென்றல் காலேஜுக்கு...."

"ஆகா"... எவ்வளவு நல்லது?...... நான்கூட சென்றல் காலேஜ் ஒன்றில் தான் படித்தேன்"". எத்தனையாம் வகுப்பில் படிக்கிறீங்க?...."

" உயர்தரம் முதலாம் வருடம்.. பயோ படிக்கிறன்..."

" ம் ம்..... நல்லாகப் படிச்சி பரீட்சையில் சித்தியடைந்தால் நீங்களும் இன்னும் சில வருடங்களில் என்னைப் போல் ஒரு மருத்துவராவீங்க."

**“ எதற்காக இந்தத் தோடுகள்?... ஆஸ்பத்திரியில் மருந்து இலவசமாகத்தான் வழங்கப்படுகின்றது." இளம் மருத்துவர் கருணையுடன் கூறிய வார்த்தைகளால் ஓரளவு நிம்மதியைப் பெற்றதுபோல் அவள் பெருமூச்சு விட்டாள். ”**

துக்கம் நிறைந்த அவளது முகத்தில் முதற் தடவையாக புன்னகையின் சாயல் தெம்பட்டு அது மீண்டும் கருமேகத்தினால் சூழப்பட்ட இருள் நிறைந்த வானமாக மாறியது.

"வீட்டில் உள்ளவர்களுக்கு". அம்மா. அப்பாவுக்குத் தெரியுமா இந்தப் பிரச்சினை?"

"இல்ல..." அவளது துரித பதிலாக அமைந்தது.

"அப்போ" குசுமலதாவின் நண்பருக்குத் தெரியுமா?"

இதற்குப் பதிலளிக்க முடியாமல் அவள் சற்று மௌனமானாள். ஏதோ கூறுவதற்கு முயற்சித்தாலும் அவற்றை வார்த்தைகளாக மாற்றிக்கொள்ள அவளால் முடியவில்லை. மௌனம் நீண்டதனால் அவள் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதாகப் புரிந்துகொண்ட இளம் மருத்துவர் மற்றுமொரு கேள்வியைத் தொடுத்தார்.

"அவரும் படித்துக்கொண்டிருக்கின்றாரா?......"

"இல்ல... அவர் வேலை செய்கிறார்" தனியார் கம்..பெனியொன்றில்"

மெதுவான கொன்னையும், தயக்கமும் அதில் பொதிந்திருந்தது.

"அப்படியென்றால் இது ஒரு பிரச்சினையே கிடையாது"

டாக்டர் ஜீவானந்தா தமது பேனாவை மூடி மேசையில் வைத்துவிட்டு நாற்காலியில் வசதியாக நிமிர்ந்து அமர்ந்தபடி குசுமலதாவின் முகத்தை உற்று நோக்கினார். கைக்குள் சுருட்டிக்கொண்டிருந்த கைக்குட்டையின் ஒரு விளிம்பைக் கடித்துக்கொண்டு சிந்தனையில் மூழ்கியிருந்த அவளது முகத்தில் ஒரு பிரச்சினை உள்ளதென்பது கோடிட்டுக் காட்டப்பட்டது. இன்னும் சில நிமிடங்கள் மௌனம் நீடித்தது.

"இப்ப நீங்க இதைப் பற்றி முதலில் அம்மாவிடம் சொல்லுங்கோ. அதற்குப் பிறகு அம்மாவும் அப்பாவும் சேர்ந்து இதைப்பற்றி உங்கள் நண்பனுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் அறிவிச்சிட்டு தீர்வொன்றைக் காண்பார்கள்".. ஆனால் நீங்கள் கொஞ்சம் பேச்சுவாங்க வேண்டி இருக்கும்". சில சமயம் அடி வாங்கவும் நேரிடலாம். .. ஆனால் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கு எந்தவொரு தாயும்'. தந்தையும் இப்படிப்பட்ட நேரங்களில் தமது பிள்ளையைக் கைவிட மாட்டார்கள்'."

எவ்வளவு கருணையுடன் கூறினாலும் அந்த வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த அவளது மனதில் ஒரு பெரும் புயல் உருவாகியிருப்பது இளம் மருத்துவருக்குப் புரிந்தது. தாம் பொருத்தமற்ற அநாவசியமான ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுவிட்டேனா என்ற சந்தேகம் உடனே அவர் மனதில் உருவானது. சிக்கல்மயமான உணர்வலைகளுக்குள் இரண்டு பேரும் வழிதவறி மௌனமாக இருந்தமையால் மீண்டும் விரக்தியுடன்கூடிய பெரும் அமைதி நிலவியது.

"இதைப்பற்றி அவங்களிடம் சொல்லி வேலையில்லை... யாரிடம் சொல்லியும் பயனில்லை..."

அவளது ஒலி மென்மையாயினும் அதில் ஒரு இறுக்கத் தன்மை, பிடிவாதத் தன்மை இருப்பதை முதற் தடவையாக டாக்டர் ஜீவானந்தா உணர்ந்தார். எனவே அவரது மனதில் இது வரையிலும் காணப்பட்ட அடக்கமான தன்மை கலைந்து சென்று பாரிய அமைதியின்மை படிப்படியாக உருவாகத் தொடங்கியது.

"தயவு செய்து இங்கிருந்து போங்கோ...... போய் வேறு யாராவது ஒரு டாக்டரைப் பிடித்து... தேவையான எதையும் செய்து கொள்ளுங்கோ... என்னால் கொலை செய்ய முடியாது....." எனக் கூற அவருக்குத் தோன்றியது.

அத்தகையதொன்றை இச்சிறுமிக்குக் கூறுவதனால் பயன் கிடைக்குமா? மறுபுறம் அவ்வாறானதொன்றைக் கூறுவதனால் தம்மைத் தவிர உள்ள ஏனைய அனைத்து மருத்துவர்களும் நிந்தனைக்கும் அவமானத்திற்கும் உள்ளாவார்கள் அல்லவா? மறுபுறத்தில் இரண்டு தோடுகளுடன் தம்மிடம் வந்துள்ள இந்த அப்பாவி ஏழை யுவதி அடுத்தகட்ட நடவடிக்கையாக எதனை மேற்கொள்ளலாம்? இவ்வாறான பல்வேறுபட்ட கேள்விகளுக்கு மத்தியில் அவர் பாரிய அமைதியின்மைக்கு உள்ளானாலும் அதனை குசுமலதா புரிந்துகொள்ளாத வகையில் நடந்து கொள்ளும் அளவுக்கு அவர் சாதுரியம் படைத்த மருத்துவராவார். தமது தொழிலின் மாண்பினைப் பாதுகாத்துக் கொண்டு நிர்க்கதியான இந்த பாடசாலை மாணவிக்கு வழங்கக்கூடிய உதவியைத் தேடி அவரது மனம் ஓடித்திரிந்தது. இரண்டு பேருக்கும் மத்தியில் மேலும் நீண்ட அமைதி உருவாகியது. குசுமலதா உயர்தரம் உயிரியல் துறையில் கல்வி பயில்கின்றாள். எனவே ஒரு மருத்துவரால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க நெறிகள் தொடர்பாக புரிந்துணர்வைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அவளது சிந்தனைகளில் சிறு மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென இளம் மருத்துவர் நினைத்தார்.

"குசுமலதா நீங்க சில நேரம் அறிந்திருப்பீங்கள்" மருத்துவர்களாகிய நாங்கள் சில ஒழுக்க நெறிகளைப் பாதுகாப்பதற்கு கட்டுப்பட்டுள்ளோம் என்பதை" அந்த ஒழுக்க நெறிகளின் பிரகாரம் இந்த உலகில் பிறக்கவிருக்கின்ற... மனித உடலுக்கு எவ்வகையிலும் தீங்கினை ஏற்படுத்தாத... ஆபத்தற்ற உயிர்க் கலமொன்றை" மனிதக் கருவொன்றை... அழிப்பதானது மருத்துவர் தொழிலுக்கே நிந்தனையாகும்" அத்தகைய காரியமொன்றைச் செய்வது பிறப்பதற்கும் முன்னர் மனித உரிமையை குழி தோண்டிப் புதைப்பதாகும்.

மருத்துவரின் இக்கூற்றுக்கு முன்னால் குசுமலதா மீண்டும் புத்தகங்களை மார்புடன் அணைத்தவாறு கைக்குட்டையின் ஒரு விளிம்பை கடிக்க ஆரம்பித்தாள்.

"மனித உடலுக்குள் உட்புகும் ஒரு கிரிமியை... அது ஒரு வைரஸ், பக்டீரியாவாக இருக்கலாம்... அத்தகையதொன்றை அழிப்பது மருத்துவருக்குரிய பணி... அவ்வாறானதொன்றைக் கட்டாயம் செய்ய

வேண்டும். ஆனால் இது அத்தகைய சேதம் விளைவிக்கக்கூடிய ஆபத்தான ஒரு கிருமியல்ல... உலகின் இருப்பு இதனாலேயே இடம் பெறுகின்றது... இதனால் தான் உலகிலேயே உன்னதமான பதவியாகிய தாய் எனும் பதவி உங்களுக்குக் கிடைக்கின்றது. மரபுரிமையாகின்றது.

இளம் மருத்துவர் மிகவும் கருணையுடன் அவளுக்குத் தெளிவுபடுத்தினார். அத்தோடு அவர் அவளது நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற அனைத்து மாற்றங்கள் மீதும் அவதானமாக கவனம் குவித்தார்.

குசுமலதா மென்மையான குரலில் பேசினாள்.

"ஐயா நீங்கள் கூறும் எல்லாவற்றையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்"

அவளுக்கு சில விடயங்களைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு கல்வியும் மனநிலையும் இருந்தமை டாக்டர் ஜீவானந்தாவின் மகிழ்ச்சிக்கு உண்மையாகவே காரணமானது. இந்தவாறே தொடர்ந்தும் அவளுக்கு விடயங்களைத் தெளிவுபடுத்தி நாகரீகமான முடிவை நோக்கி அவளை ஆற்றுப்படுத்தலாமென நினைத்து மகிழ்ச்சியடைந்தார்.

"அது தானே, குசுமலதாவுக்கு நன்றாக விளங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றல் இருக்கின்றது... நீங்களே சிந்தித்துப் பாருங்க". கருவறையானது ஒரு நாளும் ஒரு சவக்குழி, மயானம் ஆகக் கூடாது...அது எமது எதிர்கால உலகம் உருவாகும் பிரசவ அறை..."

"அப்படியென்றால்".. எந்தவொரு மருத்துவரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செய்யக்கூடாத ஒரு விடயமா கருக்கலைப்பு?....... செய்யாத ஒரு விடயமா?

இது வரையும் மருத்துவரின் விரிவுரைக்குச் செவிமடுத்துக் கொண்டிருந்த குசுமலதா கேள்வியொன்றைத் தொடுத்தாள். அக்கேள்வியானது அவளது புதிசாலித்தனத்தை உறுதிப்படுத்தும் ஒரு காரணியாக அமைந்துள்ளதைப் போன்றே அவள் தமது அடிப்படை நோக்கத்தை இன்னமும் கைவிடவில்லையென்பதை உறுதிப்படுத்தும் காரணியாகவும் அமைந்துள்ளதென மருத்துவர் உடனே புரிந்து கொண்டார்.

"ஏனில்லை? அத்தகையதொன்றை செய்யக்கூடிய தருணங்கள் உள்ளன குறிப்பாக கர்ப்பமாக இருக்கும் போது தாய்க்கு ஏற்படுகின்ற சில பாரதூரமான நோய்களினால் வயிற்றிலுள்ள குழந்தை பாதிப்புக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில்".. "விகாரமடைந்த பிள்ளைகளை பிரசவிப்பதற்கான பின்னணி அதன் மூலம் உருவானால்" "அதே... போன்று தான் சில சமயங்களில் தாயின் சுகாதாரம் தாயின் உயிரைக் காப்பாற்ற வேண்டியேற்படுகின்ற சந்தர்ப்பங்களில் கருக்கலைப்பு செய்வதற்கான அவகாசம் எமக்குக் கிடைக்கின்றது" "அது மருத்துவ விதிகளுக்கு அமைவானது."

அவள் அமைதியாக கைக்குட்டையைக் கடிப்பதை நிறுத்தி அதனை விரித்து நெற்றியில் எழுந்த வியர்வையைத் துடைத்தாள். அந்தக் கைக்குட்டையில் ஒன்றாக இணைந்த இரு இதயங்களின் படம் இருப்பது அவருக்கு ஓரளவு தெரிந்தது. சில வேளை இந்தக் கைக்குட்டை அவளது காதலனின் பரிசாகவும் இருக்கலாம்.

"நீங்கள் தாயாக மாறக்கூடிய சந்தர்ப்பத்தையும் இழந்து கொண்டு என்னையும் கொலைகாரனாக்கி" எனது உன்னதமான தொழிலின் மாண்பினையும் உங்களின் தாய் அந்தஸ்த்தின் நன்மதிப்பினையும் அழித்துக் கொள்வது எவ்வளவு நிந்தனையானதொரு குற்றம் குசுமலதா..."

இறுதி வாக்கியம் கூறப்படும் போது அவள் விம்மி அழ ஆரம்பித்தாள். இளம் மருத்துவர் அச்சத்துடன்கூடிய கண்களால் யாரேனும் தங்கள் இருவரையும் பார்த்துக் கொண்டுள்ளார்களா என்பதை அறிவதற்காக சுற்றிப் பார்த்தார். அதிஷ்டவசமாக சுற்றுப்புறத்தில் யாரும் இருக்கவில்லை. இருப்பினும் இடையறாது அழுது கொண்டிருக்கும் அவளை சமாதானப்படுத்துவது எவ்வாறு? அவளின் பிரச்சினைக்கு தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்கும் அளவுக்கு தாம் உயிருக்கு நிகராகப் பாதுகாக்கும் விழுமியங்களினாலோ அவற்றை அடிப்படையாகக் கொண்ட விரிவுரைகளின் மூலமாகவோ பயன்கிடைக்கமாட்டாதென்பது அவருக்கு நன்கு தெரியும்.

"இங்க பாருங்க". அடுத்த கணம் இளம் மருத்துவர் சற்று முன்னால் வளைந்து அவளது தோற்பட்டையைப் பிடித்து, இந்த அழுகையை நிறுத்துங்கோ..." என கருணையாக கேட்டுக்கொண்டார். அதற்காக அவள் உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டாள்.

"முகத்திலுள்ள கண்ணீரை துடைத்துக்கொள்ளுங்கோ... நாங்கள் இதற்கு தீர்வொன்றைக் கண்டுபிடிப்போம்."

மருத்துவரின் கருணைமிகு வார்த்தைகளின் காரணமாக அவள் வழமை நிலைக்குத் திரும்பினாள். அவள் எந்தளவு அவரது

வார்த்தைக்கு கீழ்ப்படிந்தாள் எனக் கூறுவோமானால் சிறு குழந்தையைப் போல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டும் தலைமுடியைக் கைகளால் சரிப்படுத்திக் கொண்டும் பெரும் எதிர்பார்ப்புடன் டாக்டர் ஜீவானந்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கீழ்ப்படிவினையும் நடத்தைகளையும் பார்த்திருந்த அவரது முகத்திலும் புன்முறுவல் எழுந்தது. அவளும் அதற்கு நன்றி செலுத்தும் வகையில் புன்னகையின் மூலம் உபசரித்தாள். அது அவளது முகத்தில் எழுந்த இறுதிப் புன்னகை என்பதை இளம் மருத்துவர் அவ்வேளை எள்ளளவும் நினைக்கவில்லை. அடுத்ததாக அவர் தமது நெற்றியைத் தடவியவாறு கண்களை மூடிக்கொண்டு சில நேரம் சிந்திக்கத் தொடங்கினார்.

**“முடியாவிட்டால்... ஏதாவதொரு காரணத்தால்''.. ஐயா நினைப்பது நடக்காவிட்டால்.. ஐயா.. எனக்கு... அத.. செய்.. து.. த.. ரு..வீங்.. களா?”**

"நான் ஒன்றைச் செல்லட்டுமா" இதைப் பற்றி உங்களால் வீட்டுக்குச் சொல்ல முடியாது தானே?.."

"ஓம் ஐயா..." அவள் எதிர்பார்ப்புகளுடன் கூறினாள். "நீங்க நாளைக்கு காலையில் அம்மாவையும் அப்பாவையும் கூட்டிக்கொண்டு என்னிடம் வாருங்கோ"' ஆகக் குறைந்தது அம்மாவை மட்டுமாவது கூட்டிக்கொண்டு வாங்கோ... நான் எந்தப் பிரச்சினையும் ஏற்படாதவாறு... அவர்களுக்கு எல்லாவற்றையும் தெளிவுபடுத்துவேன்... என்ன செய்ய வேண்டுமென்பதையும் சொல்லித் தருகிறேன்.."

எதிர்பார்க்கப்படாத அந்தப் பதிலால் குசுமலதாவின் அழகான முகம் கரு மேகங்களால் சூழப்பட்ட சூரியனைப் போல் இருண்டது.

"இதைத் தவிர வேறு ஒரு தீர்வும் இல்லையா ஐயா?....."

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?....... இது தான் நல்ல தீர்வு. உங்களுக்குப் பிரச்சினை ஏற்படாதவாறு நான் அவர்களுக்குத் தெளிவுபடுத்திக் கொடுப்பேன்."

மீண்டும் ஒரு சில நிமிடம் மௌனம் பரவியது.

"அவர்களுக்குத் தெளிவுபடுத்திப் போதாது ஐயா..." அவள் அடுத்து கூறவந்ததை விழுங்கிக் கொண்டாள். இருந்தும் அவருக்கு அதனை மோப்பம் கொள்ள முடிந்தது.

"சரி நான் லீவொன்றைப் போட்டுவிட்டு வந்து உங்கள் நண்பரையும் சந்தித்து அவருக்கும் உங்கள் நிலைமையைப் பற்றி தெளிவுபடுத்துகின்றேன். அதேபோன்று நீங்கள் இரண்டு பேரும் ஒன்றாக இணைவதற்காகவும் - உங்கள் திருமணத்திற்காகவும் என்னால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்து தருகின்றேன் என்ன சொல்றீங்கள்?"

டாக்டர் ஜீவானந்தா அவளது பதில் கிடைக்கும் வரை சற்று நேரம் அமைதியாக இருந்து சடுதியாக மாற்றமடைகின்ற அவளது அசைவுகளை மிகவும் அவதானத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். புரிந்துகொள்ள முடியாத அந்த உணர்வலைகள் இளம் மருத்துவரை மீண்டும் சிரமத்தில் தள்ளியது. அவர் எவ்வளவு நேரம் இப்படி இருந்தார் என்பது அவருக்கு நினைவில்லை. திடீரென.."ஐயாவின் தீர்வு அதுவானால்''.. நான் அதனை ஏற்கிறேன்."

மருத்துவருக்கு பெரும் நிம்மதியாக இருந்தது. அவரது முயற்சி தற்போது வெற்றியளித்துள்ளது. அவள் கைகளை நீட்டி மேசையின் மீது வைக்கப்பட்டிருந்த இரண்டு தோடுகளையும் கைக்குள் சுருட்டிக்கொண்டாள்.

"சரி இவையொன்றும் சரிவராவிட்டால்?......."

"பயப்பட வேண்டாம் பிள்ளை, எல்லாம் சரி வரும்... நான் எப்படியாவது உங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருவேன்.." பெரும் எதிர்பார்ப்புடன் மருத்துவர் பதிலளித்தார். அவள் இருக்கையைவிட்டு எழுந்தாள்.

"முடியாவிட்டால்... ஏதாவதொரு காரணத்தால்''.. ஐயா நினைப்பது நடக்காவிட்டால்.. ஐயா.. எனக்கு... அத.. செய்.. து.. த.. ரு..வீங்.. களா?

சற்றுத் தயக்கத்துடனேனும் அவள் ஓரளவு வலியுறுத்திக் கூறிய அந்த விடயத்தினால் மருத்துவர் கோபாவேஷம் கொண்டார். அவள் கூறுவது சிலவேளை உண்மையாக அமையலாம். ஏதாவது ஒரு காரணத்தினால் தமது எண்ணத்தை நிறைவேற்ற முடியாமல் போகலாம். அப்படி நடந்தால் அவளின் விதியைத் தீர்மானிக்கும் பிரதான காரணி தாமே. மனச்சாட்சிக்கிணங்கக் கருக்கலைப்புச் செய்ய தம்மால் ஒரு போதும் முடியாது

என்பதை அவர் அறிவார். அடுத்த பிரச்சினை யாதெனில் இவ்வாறானதொரு பணியின் போது துரதிஷ்டவசமாக மேலதிக பிரச்சினைகள் எழுந்தால் அது அவருக்கும், அவரது தொழிலுக்கும், உன்னதமான மருத்துவத் தொழிலுக்கும் அவமானமாகும். சில சமயம் அது அவரது மருத்துவத் தொழிலின் முடிவாகவும் அமையலாம். இதற்கும் மேலாக எழக்கூடிய சமூக ரீதியான நிந்தனைகள், மறுபுறத்தில் சிறைவாசம் செல்லக்கூடிய பாரிய குற்றச் செயலாகவும் அது அமையலாமென அவரது சிந்தனைக்கு வந்தது. இதிலே தமது நிலைப்பாட்டினை நேரடியாகவே அவளுக்குத் தெரிவிப்பது பொருத்தமானது. இல்லாவிட்டால் அவள் மேற்கொண்டும் பாரதூரமான எதிர்பார்ப்புகளை மனதிலே கொள்வாள். ஆனால் ஒரேயடியாக இவற்றை அவளிடம் கூறுவது எப்படி?

"நீங்கள் எந்த சந்தேகத்தையும் கொள்ள வேண்டியதில்லை. எமது திட்டம் கட்டாயமாக சரிவரும்' நாம் ஆபத்தான வேலைகளைச் செய்ய வேண்டி ஏற்படமாட்டது..."

"ஏன் ஐயா எனது கேள்விக்கு நேரடியாக பதில் தராமல் இருக்கின்றீர்கள்?"

"நான் ஏற்கெனவே கூறிவிட்டேன், உங்களுக்கு செய்ய வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வேன் என்று... எனக்கு ஒரு நாளும் அதைச் செய்ய முடியாது. ஆனால் நீங்கள் பின்னடைய வேண்டாம். தைரியமாக இருங்கள்.. நீங்க இப்ப போய் அம்மாவைக் கூட்டிக்கொண்டு நாளைக்கு வாங்கோ'.. இது நல்ல முறையில் தீரும்... எனக்கு நூற்றுக் நூறு வீத நம்பிக்கை உள்ளது..."

பெரும் எதிர்பார்ப்புகளுடன் டாக்டர் ஜீவானந்தா குறிப்பிட்டார். குசுமலதா மருத்துவரை ஒரு சில நிமிடம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது பதில் என்னவாக அமையும் என சிந்தித்துக் கொண்டிருந்த மருத்துவருக்கு அந்த நொடிப்பொழுது பல மில்லியன் வருடங்களைப் போன்று நீண்டதாகத் தெரிந்தது.

"நான் போய்ட்டு வாரன் ஐயா..."

அவள் அவர் மீது நன்றி பூர்வமான பார்வையைச் செலுத்தி அவ்விடத்தை விட்டகன்று கதவடிக்கு வந்து மீண்டும் டாக்டர் ஜீவானந்தா அவர்களைத் திரும்பிப் பார்த்தாள்.

"உங்களுக்கு பெரும் புண்ணியம் ஐயா..."

அவள் இறுதியாக அந்த வார்த்தைகளைக் கூறி அந்த இடத்திலிருந்து வெளியேறினாள்.

சில மணித்தியாலங்களிலிலான தமது முயற்சி வெற்றியடைந்தமையினாலும், அதன் மூலம் உண்மையான மருத்துவராக ஒரு நோயாளிக்கு - அப்பாவிப் பிள்ளையொன்றுக்கு வழிகாட்ட முடிந்தமையினாலும், உன்னதமான மருத்துவத் தொழிலின் ஒழுக்க நெறிகளை பாதுகாக்க முடிந்தமையினாலும் அவர் பெருமைப்பட்டார்.

அதன் பின்னர் அவர் சுமார் அரை மணித்தியாலம் சில சிறு கடமைகளில் ஈடுபட்டு பிற்பகல் இரண்டரை மணிக்கு மதிய உணவுக்காகச் சென்ற வேளை வரையிலான காலப்பகுதியில் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் அமைந்துள்ள அடகுக் கடை வர்த்தகரும் விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரும் அவர்களது தொழிலுக்குத் தனித்துவமான விழுமியங்களைப் பாதுகாத்து உச்ச மட்ட பாவனையாளர் சேவையை வழங்கி, குசுமலதாவை உச்ச மட்டத்தில் திருப்தியடையச் செய்திருந்தார்கள்.

அடுத்ததாக நாளைய தினம் டாக்டர் ஜீவானந்தா பிரேத பரிசோதனையொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டும். இத்தகைய கிராமிய ஆஸ்பத்திரியொன்றில் ஒரு விசேட சட்ட மருத்துவர் இருக்கமாட்டார். எவ்வாறாயினும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு மரணிக்கும் ஒருவரது மரணத்திற்காக பிரதான மருத்துவர் என்றவகையில் அவரது சிபார்சு போதுமானது. விஷம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டமையை உறுதிப்படுத்த போதுமான அளவு சாட்சிகள் உள்ளன. சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய இயலுமையும் உள்ளது. குசுமலதாவின் உடலை வெட்டி பரிசோதிப்பதன் மூலம் (அவளுக்கும் அவருக்கும் இரகசிய மற்றதாகவிருந்த) அவளின் கர்ப்பிணித் தன்மையே வெளிக்கொணரப்படும். தம்மைச் சந்திக்க வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்து தீர்வினை வேண்டி நின்ற அந்த அப்பாவிப் பெண்ணுக்கு அதன் மூலம் அவமானத்தைத் தவிர வேறு எது கிடைக்கும்? இதே வேளை அது கட்டாயமாக அவளது குடும்பத்தாருக்கு சமூகத்திற்கு முகங்கொடுக்க முடியாத அவமானத்தைப் பெற்றுக்கொடுக்கும். எனவே அத்தகைய விடயமொன்றை வெளிப்படுத்துவதானது மரணித்த குசுமலதா மீது மற்றவர்களை பகைகொள்ளச் செய்யும் செயற்பாடாகவும் அமையும். தமக்கு முன்னால் அப்பாவியாக மன்றாடிய அதிஷ்டமற்ற அந்தப் பிள்ளைக்கு அத்தகைய அவமானத்தை பெற்றுக் கொடுக்க வேண்டுமா?

காலை சுமார் 9.00 மணியளவில் பிரேதப் பரிசோதனை ஆரம்பமானது. தமது விதப்புரை பிரதான எழுதுநரின்

ஊடாக பிரேதப் பரிசோதகருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தாலும் குசுமலதாவின் குடும்பத்தாரிடமிருந்து அவளைப் பற்றிய இன்னும் பல தகவல்களை அறிந்துகொள்ளும் விருப்பத்தில் டாக்டர் ஜீவானந்தா பிரேத பரிசோதனை நடத்தப்படும் இடத்திற்கு வருகை தந்தார்.

பிரேத பரிசோதகர் வழக்கம் போல் தமது கடமையை நிறைவேற்றிக்கொண்டு குசுமலதாவின் தாயை விசாரிக்கின்றார். அவரது கணவன் பத்து வருடங்களுக்கு முன்னர் தம்மையும் தமது மூன்று மகள்மாரையும் விட்டுச் சென்று வேறொரு பெண்ணுடன் வாழ்வதாகவும், குசுமலதாவை உள்ளிட்ட ஏனைய இரண்டு மகள்மாரைப் பாதுகாத்துக்கொண்டு கூலி வேலை செய்வதாகவும், அவளது காதல் தொடர்பாக தாம் எதனையும் அறிந்திருக்கவில்லையெனவும், படிப்பில் மிகவும் கெட்டிக்காரியான அவள் மீது ஒரு துளி சந்தேகமும் இருக்கவில்லையெனவும் குசுமலதாவின் தாய் குறிப்பிட்டாள்.

அவருக்கு அருகில் வாடிய முகங்களுடன் இரண்டு சிறுமிகள் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் இரண்டு பேரும் பாடசாலை சீருடைகளையே அணிந்திருந்தார்கள். பழைய சீத்தையொன்றையும் மங்கிய வெண்ணிற ஜாகெட் ஒன்றையும் அணிந்திருந்த குசுமலதாவின் தாயார், நாற்பது வயதெனக் குறிப்பிட்டாலும் அவரது தோற்றம் எழுபது வயதுடைய முதியவரின் தோற்றத்திற்குச் சமமானது. வாழ்க்கையின் அதிக காலம் பல்வேறுபட்ட துன்ப துயரங்களுக்கு முகங்கொடுத்தமையினால் என்னவோ மரணித்த குசுமலதாவுக்காக சிந்துவதற்கு ஒரு துளி கண்ணீரும் அவளது கண்களில் இருக்கவில்லை. குசுமலதா தமது குடும்பத்தின் உண்மையான தகவல்களை தம்மிடம் மறைத்தாள் என்ற சிறு கோபம் டாக்டர் ஜீவானந்தாவிற்குள் ஏற்பட்டது. நேற்றைய தினம் இரவு தூக்கமின்றிப் பாரிய மனப் போராட்டம் நடத்தி குசுமலதாவின் கர்ப்பிணித் தன்மையை இரகசியமாக வைப்பதற்கு தாம் மேற்கொண்ட தீர்மானத்தினால் அவளுக்கும், அவளது இரு சகோதரிமாருக்கும், அவர்கள் சார்பாக சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கும் தாய்க்கும் ஏற்படவிருந்த பாரதூரமான நிந்தனையிலிருந்து அவர்களைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தமையையிட்டு அவர் நிம்மதியடைந்தார்.

பிரேத பரிசோதனையை வழிநடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் விஷக் குப்பியையும், தோடுகளை அடகு வைத்த பற்றுச்சீட்டையும், கிருமி நாசினி கொள்வனவு செய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டையும் அவள் இறுதியாக எழுதிய கடிதத்தையும் பிரேதப் பரிசோதகரிடம் சமர்ப்பித்து அவற்றை மீண்டும் தமது பொறுப்புக்குப் பெற்றுக்கொண்டார்.

"இது.. கிருமி நாசினியை வேண்டுமென்றே அருந்தியதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலையாகும்'" என பிரேதப் பரிசோதகரின் தீர்ப்பு வெளியிடப்பட்டது. மரணத்தை நல்லடக்கம் செய்வதற்கு எவ்வித வசதியும் கொண்டிருக்காத அவர்களுக்கு மரண உதவிச் சங்கமொன்றின் அனுசரணை கிடைத்தது. டாக்டர் ஜீவானந்தா நினைத்த வாறாகவே சடலம் புதைக்கப்படுவதற்கு முன்னரே குசுமலதா பற்றிய உண்மை சட்ட ரீதியாகவே புதைக்கப்பட்டுவிட்டது.

அன்றிரவு டாக்டர் ஜீவானந்தாவிற்கு முன்பு எப்போதுமில்லாதவாறான மன அமைதி தெரிந்தது. இரவுச் சாப்பாட்டுக்குப் பின்னர் கட்டிலில் சாய்ந்த அவர் படுக்கையறையின் ஒரு சுவரில் பிரேம் போட்டு தொங்கவிடப்பட்டிருந்த ஹிப்பொக்ரடிஸின் புகைப்படத்துடன்கூடிய சத்தியப் பிரமாணத்தை நிம்மதி நிறைந்த மனதுடன் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நொடிப் பொழுதில் ஹிப்பொகிரடிஸ் உயிர் பெற்று அவருக்கு அருகில் வந்து நின்றார். இந்த உயர்ந்த திடகாத்திரமான உடற்கட்டைக்கொண்ட மனிதனைக் கண்டவுடன் டாக்டர் ஜீவானந்தாவின் மனதில் பெரும் கௌரவம் உருவானது. "இந்த நேரத்தில் என்னை ஏன் தேடி வந்தீர்கள்? குசுமலதாவின் மரணத்தையும், அத்துடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களையும் மருத்துவராக தாம் ஆற்றிய பதிற் செயற்பாடுகளையும் பற்றிச் சந்தேகம் கொண்டு அவர் இங்கு வந்தாரா?..." சிக்கலான நிலையில் மனம் இருந்தாலும் அவர் அடுத்த நிமிடம் தமது குருவின் காலடியில் பெரும் பக்தியோடு வணங்கி விழுந்தார். தமது புத்திரனின் சந்தேகங்களைப் புரிந்துகொள்ளும் சிறந்த ஆற்றல் ஹிப்பொகிரடிசுக்கு இருந்தது.

"மகனே உன்னைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்.. நீ எனதும்.. உன்னதமான மருத்துவக் கலையினதும் மாண்பினையும் விழுமியங்களையும் உள்ளவாறே பாதுகாத்தாய். உன்னைப் போன்ற பிள்ளைகள் இந்த உலகில் துன்பப்படுகின்ற மக்களின் வாழ்க்கையில் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வருவார்கள்.." என ஹிப்பொகிரடிஸ் குறிப்பிட்டார்.

அப்பதங்கள் டாக்டர் ஜீவானந்தாவின் இரு செவிகளால் உட்புகுந்து மின்சாரமாக உடல் முழுவதிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அவை அவர் தமது ஒட்டுமொத்த வாழ்க்கைக் காலப்பகுதியிலும் கேட்ட இனிமையான, இதமான, சுவையான வார்த்தைகளாகும். அளவு கடந்த அன்புடனும் நன்மதிப்புடனும் அவர் மீண்டும் ஒரு முறை ஹிப்பொகிரடிஸின் கால்களை முத்தமிடும்போது குருதேவர் பெரும் சிரமத்துடன் சுவாசிப்பதை உணர்ந்தார். அதனோடு பெண்ணொருத்தியின் பித்துப்பிடித்த சிரிப்பொலியும் எதிரொலித்தது. டாக்டர் ஜீவானந்தா மண்டியிட்டுக்கொண்டே தலையைத் துக்கி ஹிப்பொகிரடிஸின் முகத்தைப் பார்த்தார். ஆச்சரியம் குசுமலதா ஹிப்பொகிரடிஸின் கழுத்தை நெரித்துக் கொண்டுள்ளாள். அவளது பித்துப்பிடித்த சிரிப்பிலும் முகத்திலும் பெரும் பரிகாசமே காணப்படுகின்றது. இளம் மருத்துவர் உடனடியாகச் செயற்பட்டு குருதேவரை அவளின் பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு அவளுடன் கட்டிப்புரண்டார்.

"இவனைக் கொன்று.. இவனது பெயரை இந்த உலகத்திலிருந்தே முழுமையாக அழித்துவிட வேண்டும்.."

"குசுமலதா.. அதைச் செய்ய உன்னால் முடியாது.. இந்த உலகில் பிறக்கவிருந்த அப்பாவிக் குழந்தையொன்றைக் கொன்று மடித்த கொலைகாரப் பெண் நீ.."

டாக்டர் ஜீவானந்தாவின் அந்தக் கூற்றுடன் ஹிப்பொகிரடிசைக் கைவிட்ட குசுமலதா முதற் தடவையாக இளம் மருத்துவர் மீது பித்துப்பிடித்த பார்வையைச் செலுத்தினாள்.

"வெளியிலிருந்து மனித உடலுக்குள் உட்புகும் கிருமிகளை அழிக்க முடியுமானால் ஏன் உம்மால் ஒரு பிள்ளைக் கருவை அழிக்க முடியாது? அது ஒரு பெண்ணின் முழு ஜென்மத்தையே அழிக்கின்றதொன்று.. ஒட்டுமொத்த சமூகத்தினது அவமானமும், நிந்தனையும் தாய்க்கும்.. பிள்ளைக்கும்.. குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும்.. உமது குருதேவருக்கு அது புரியவில்லை.. உமக்கும் அதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை.."

குசுமலதா இவ்வாறு பித்துப்பிடித்துப் பேசியவாறு டாக்டர் ஜீவானந்தாவை நெருங்கினாள். அவளது கண்கள் சிவப்பு நிறமாக மாறி, பெரிதாகி முன்பிருந்ததைவிட பயங்கரமான வேஷம் அவளினுள் புகுந்துள்ளதாக இளம் மருத்துவருக்குத் தெரிந்தது.

"தவறு குசுமலதா.. நான் அதனைப் புரிந்து கொண்டதனால் தான் நீ கர்ப்பிணி என்பதனை பிரேதப் பரிசோதனையில் வெளிப்படுத்தவில்லை.."

டாக்டர் ஜீவானந்தா அதனைக் கூறும் போதே குசுமலதா அவர் மீது பாய்ந்து அவரின் கழுத்தை இறுகப் பிடித்தாள். அவர் தமது முழு சக்தியையும் கொண்டு அவளது பிடியிலிருந்து விடுபட கட்டிப்புரண்டார்.

"நான் மரணித்த பின் என்ன மண்ணாங்கட்டிக்காக எனது சுயமரியாதையைப் பற்றிச் சிந்தித்தாய் பிசாசே.. நீ அதனை நான் உன்னிடம் வந்த வேளை செய்திருக்க வேண்டும்.. நான் இப்போ மூடத்தனமாகக் காதலித்து விஷம் அருந்திய ஒரு பெண் மட்டுமே. எனது மரணத்தின் மூலம் உயிர் வாழ்கின்ற எனது தங்கைகளும் ஒட்டுமொத்த பெண் இனமும் கற்றுக்கொள்ளவிருந்த பாடத்தை நீ குழி தோண்டிப் புதைத்து விட்டாய்.. வஞ்சக ஆண் ஒருவனைக் காப்பாற்றிவிட்டாய்...

படிப்படியாக அவளது பிடி தீவிரமானது. சுவாசிப்பதில் கடுமையான சிரமத்தை அவர் உணர்ந்தார். தமது குருதேவரை அவளின் கழுத்துப்பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டாலும் இப்போது அவருக்குப் பலியாக வேண்டியுள்ளது. அவருக்கு தமது குருதேவரைத் தவிர உதவி கோருவதற்கு வேறு யாரும் கிடையாது.

"குருதேவனே" நான் தங்கள் விழுமியங்களைப் பாதுகாத்தேன். இந்த தீய பெண்ணிடமிருந்து தங்களைக் காப்பாற்றினேன். ஐயோ, எனக்கு உதவி புரியுங்கள்.. என்னைக் காப்பாற்றுங்கள் குருதேவனே.."

கட்டிப் புரண்டுகொண்டே டாக்டர் ஜீவானந்தா குருதேவரைப் பார்த்தார். அவருக்கு தமது கண்களை நம்பமுடியவில்லை. அடகுக்கடை வர்த்தகரும், கிருமிநாசினிப் பொருள் வியாபாரியும் ஹிப்பொகிரடிசை நிர்வாணமாக்கி, அந்த ஆடைகளை அணிந்துகொண்டு குருதேவரையும் தன்னையும் பார்த்துப் பரிகாசத்துடன் சிரித்து கேலி செய்கின்றனர். குருதேவர் வெட்கத்தினாலும் வேதனையினாலும் நெலிந்த தமது நிர்வாணத்தை மறைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகின்றார். இதற்கிடையில் படிப்படியாக குசுமலதாவின் கழுத்துப்பிடி மென்மேலும் தீவிரமடைந்ததால் டாக்டர் ஜீவானந்தா முழு உடல் பலத்தையும் கொண்டு அவளது பிடியிலிருந்து விடுபட அவளுடன் கட்டிப்புரண்டார். ■

**விபுல சுமணசேகர**

இச்சிறுகதை சிங்கள மொழியில் அய(அவள்) எனும் சஞ்சிகையில் 2012 முதலாம் அரையாண்டில் வெளிவந்தது.

# வகுப்பறையில் பாலியல் கல்வி சில குறைபாடுகள்




4.bp.blogspot.com

புத்த தர்மம் எனப்படுகின்ற அஹிம்சைவாத தத்துவத்தைக் கொண்ட பெரும்பான்மையையும், பல்லின, பல்மத நல்லிணக்கத்தையும் கொண்டமைந்த இலங்கைக் கலாசாரமானது பல்வகைத் தன்மையைக் கொண்டிருந்தாலும் கீழைத்தேய பண்பாடு எனப்படுகின்ற ஒற்றை வடிவத்தினால் அது ஒன்றாக இணைந்துள்ளது. இதிலே பால்நிலையும் இயல்பான நடத்தைகளும் கலாசார பண்பாட்டினை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும் தற்போது பூகோள அரசுக்கான எண்ணக்கரு மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுக்கு முன்னால் இந்நாட்டு சமுதாயத்திற்கு தனிமையாக கலாசாரமயமாவதற்கு ஆற்றல் கிடையாது. எனவே உலகளாவிய போக்குகளின் முன்னிலையில் எழுந்து வருகின்ற சவால்கள் கலாசாரத்தினையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. அதன் விளைவாக இதுவரை காலமும் இயற்கையின் நியதிகளுக்கமைவாக இடம்பெற்ற, வெளிப்படையாகக் கலந்துரையாடப்படாத சிற்சில சம்பவங்கள் மிகவும் காரசாரமாகவும் வெளிப்படையாகவும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளன.

பாலியல் என்பது அத்தகையதொரு பிரதான தொனிப்பொருளாகக் கருதப்பட வேண்டியேற்பட்டுள்ளது. மிக வேகமானதும் விரக்திமிக்கதுமான மனித செயற்பாடுகளினுள் இதன்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வகைப்பட்ட சவால்கள் உயிரின் இருப்புக்கு பாரிய சிக்கல்களையும்

தாக்கங்களையும் ஏற்படுத்தியிருப்பதே அதற்குக் காரணமாகும். இங்கே பாலியல் கல்வி எனும் துறை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பாலியலை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட சிக்கல்கள் ஊடகங்களின் வாயிலாக வெளிக்கொணரப்படும் போது நேரடியாகவே பாலியல் கல்வி மற்றும் அதில் காணப்படுகின்ற சிற்சில குறைபாடுகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. குறிப்பாக இந்த நாட்டின் அடிப்படைக் கல்வியின் மையமாகிய பாடசாலை முறைமையின் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. எனவே, தற்கால இலங்கையின் பாடசாலை பாடத்திட்டமானது உலகளாவிய ரீதியில் எம்முன்னாலுள்ள பாலியலை

**"தற்கால இலங்கையின் பாடசாலைப் பாடத்திட்டமானது உலகளாவிய ரீதியில் எம்முன்னாலுள்ள பாலியலை அடிப்படையாகக் கொண்ட சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியதாகவுள்ளதா?"**

அடிப்படையாகக் கொண்ட சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடியதாகவுள்ளதா? அதனுள் பொதிந்துள்ள குறைபாடுகள் யாவை என்பன தொடர்பாக நாம் தெளிவினை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இந்நாட்டின் இன்றைய பாடசாலைப் பாடத்திட்டங்களை பகுப்பாய்வு செய்யும் போது பாலியல் கல்வி எனப்படுவது பிரதானமாக விஞ்ஞானம் மற்றும் சுகாதாரமும் உடற் கல்வியும் ஆகிய இரண்டு பாடங்களின் ஊடாக கலந்துரையாடப்படுவது தெளிவாகின்றது. குறிப்பாக இன்றைக்கு சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன்பிருந்து பாலியலை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமானது சுகாதாரமும் உடற் கல்வியும் எனும் பாடத்தினூடாக மிகவும் விரிவாக கலந்துரையாடப்படுவது தெளிவாகின்றது. இதேவேளை, இது தொடர்பாக மேலதிகமாகவும் குறிப்பிடுவோமாயின் விஞ்ஞான பாடத்தை இரண்டாம் இடத்தில் வைத்து இத்தலைப்பினை சுகாதாரமும் உடற் கல்வியும் எனும் பாடத்தினூடாக கலந்துரையாடுவது வெற்றியளிக்குமென கல்வி வெளியீட்டு அதிகாரிகள் ஊகித்துள்ளனர் என்பதை உரிய பாடத்திட்டங்களைப் பரிசோதிக்கும் போது நாம் தீர்மானிக்கக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக உரிய பாடவிதானங்கள் தொடர்பாக ஆசிரியரின் நோக்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பது சம்பந்தமாக உரிய ஆசிரியர் கைநூல்களில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இங்கு கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆறாம் வகுப்பில் இப்பாடத்திற்குரிய திறனாக உடலின் அழகினை சிறப்பாகப் பேணிக் கொண்டு வினைத்திறன்மிகு வாழ்க்கையில் இணைவது காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இனத்தைப் பெருக்கச் செய்வதற்காக இனப்பெருக்கத் தொகுதி முக்கியமானது எனும் செய்தி மாணவக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது. இதிலேயே உள்ளடக்கப்பட்டுள்ள மற்றுமொரு பாடத்தின் மூலம் சவால்களை வெற்றிகொள்ளல் எனும் திறனின் ஊடாக எயிட்ஸ் போன்ற தொற்று நோய்கள் தொடர்பாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. துஷ்பிரயோகங்கள் மற்றும் அது பற்றிய விழிப்பூட்டல் இதன் கீழ் தரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் 7 ஆம் வகுப்புக்கான சுகாதாரப் பாடத்தில் உடலின் அழகினை பேணுதலும் வினைத்திறன் மிகு வாழ்க்கையை உறுதிப்படுத்தலும் என்ற தலைப்பின் ஊடாக சமிபாட்டுத் தொகுதி, சுவாசத் தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி, மலத் தொகுதி, தசைகள், என்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டாலும் இனப்பெருக்கத் தொகுதி தொடர்பாக கலந்துரையாடப்படாதது ஏனென சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இருப்பினும் நல்ல வாழ்க்கை முறையின் பொருட்டு தொற்று நோய்களைத் தடுப்பதற்காக பங்களிப்பு நல்க வேண்டுமென்பதை எடுத்துக்காட்டி பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகளின் மூலம் ஏற்படக்கூடிய நோய்கள் தொடர்பாக காட்டப்பட்டுள்ளன. இதேவேளை, சவால்களுக்கு முகங்கொடுத்தல் எனும் திறன் மட்டத்தின் கீழ் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக

அறிமுகஞ் செய்து தவறான தொடுகை, ஆபாச நூல்களுக்குப் பழக்கப்படுதல், முறையற்ற தொடர்புகள், ஆபாச படங்கள் மற்றும் வெளியீடுகள் காட்டப்படுவது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளன. 8 ஆம் வகுப்பில் உடலின் அழகினை பேணிக்கொண்டு மகிழ்ச்சியான வாழ்க்கையினைக் கழித்தல் எனும் திறன் மட்டம் தொடர்பாக விளக்கமளித்து உயிரினங்களின் வாழ்க்கை முறைக்கு அதிலுள்ள முக்கியத்துவம், துஷ்பிரயோகம், போலியான கருத்துகள், இனப்பெருக்கத் தொகுதியின் அழகினைப் பேணுவதற்கான தமது பொறுப்பு மற்றும் பங்களிப்பு, சரியான விழிப்பூட்டல்கள் மற்றும் சமூக விழுமியங்கள் ஆகிய பல்வேறுபட்ட தோற்றப்பாடுகளின் ஊடாக விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஒன்பதாம் வகுப்பு மற்றும் அதன் பின்னர் 11 ஆம் வகுப்பு வரை பாடத்திட்டங்களின் மூலம் பால்நிலையினுள் பொறுப்புடன் செயற்பட்டு அதனுடன் இணைந்துள்ள சவால்களுக்கு சிறப்பாக முகங் கொடுப்பது தொடர்பாக பல்வேறுபட்ட தோற்றப்பாடுகளின் ஊடாக கலந்துரையாடப்பட்டுள்ளன. குறிப்பாக மானிட பாலியல், திருமணத்தின் கலாசார மற்றும் சமூக ரீதியான முக்கியத்துவம், பால்நிலை, கருத்தரித்த சந்தர்ப்பம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் ஆண்களின் பொறுப்புகள், தொற்று நோய்களைத் தவிர்த்துக் கொள்ளுதல், பாலியல் துஷ்பிரயோகம் ஆகிய தலைப்புகளும் தொனிப்பொருள்களும் அவற்றுக்கு மத்தியில் உள்ளன.

கல்வியைப் பெறுகின்றனர் என அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பது இதற்குக் காரணமாகும். ஒரு பாடத்திற்கான தொனிப்பொருளின் மூலம் கல்வி அதிகாரிகள் எதிர்பார்க்கும் வகையில் குறித்த விடயம் நிறைவேறுகின்றதா என்பது தொடர்பாகவே நாம் இங்கு பகுப்பாய்வு செய்ய வேண்டும். பாலியல் கல்வி எனும் தொனிப்பொருளை சுருக்கமாக ஆராய்ந்து பார்ப்போமானால் இனப்பெருக்கம் மற்றும் மனித உடல் பற்றிய அறிவின் மூலம் சிறந்த பாலியல் வாழ்க்கையைக் கழித்தல், பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிவூட்டப்படுதல் மற்றும் தடுத்தல், பாதுகாப்பான பாலியல் நடத்தை மூலம் சமூக ரீதியான நோய்களைத் தடுத்தல் மற்றும் அதனூடாக சமூக ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல் மற்றும் அத்தகைய சவால்களை வெற்றி கொள்ளுதல் மற்றும் உயிரின் இருப்புக்காக திருமணம் போன்ற பல்வேறுபட்ட கலாசார பிணைப்புகளின் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் மீது கவனம் குவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் மேற்படி விடயத் தொனிப்பொருளை நடைமுறைப்படுத்தும் போது பல்வேறுபட்ட தொழில்நுட்பத் தவறுகளின் காரணமாக உரிய இலக்குகளையும் அபிலாசைகளையும் நோக்கி பாடசாலை முறைமை பயணிக்கின்றதாவென ஆராய்ந்து பார்க்க வேண்டும். தனிப்பட்ட முறையில் 6 ஆம் வகுப்புக்கான பாடப் புத்தகங்களைப்

> **"ஆறாம் வகுப்புக்கான பாடப் புத்தகங்களைப் பயின்ற எனக்கு இனப்பெருக்கத் தொகுதி எனும் தலைப்பினை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியானது தொண்டைக்குத் தெரியாமல் மாத்திரை சாப்பிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகவே உணரக்கூடியதாகவிருந்தது."**

பயின்ற எனக்கு இனப்பெருக்கத் தொகுதி எனும் தலைப்பினை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியானது தொண்டைக்குத் தெரியாமல் மாத்திரை சாப்பிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகவே உணரக்கூடியதாகவிருந்தது. அதாவது ஒரு வகையான ஐயப்பாட்டுடனேயே அது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை மேலதிகமாகவும் தெளிவுபடுத்திக் கூறுவேனாயின் ஒரு செல்லப் பாலகன் தனது தாயிடம் அம்மா, நான் எப்படிப் பிறந்தேன்

ஏதேனுமொரு பாடவிதானம் பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்ட சபையொன்றினது ஆலோசனையின் பிரகாரம் முறையான பதிப்பின் பின்னர் பாடப் புத்தகங்களின் வடிவில் மாணவர்களது கரங்களை அடையும் என்பது பொதுச் சமூக ஏற்றுக்கொள்ளலாகும். இதில் உள்ளடக்க ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் குறைபாடுகள் ஆகக் குறைவாகவே இருக்கும் என்பது பெற்றோர்களினதும் ஏற்றுக்கொள்ளலாகும். ஏனெனில் தமது பிள்ளைகள் பாடசாலையில் முழுமையான

என்று கேட்கும் போது கடவுள் தந்தார் என்று தாய் மழலைப் பதில் சொல்வதைப் போல் உள்ளது. தற்காலப் பிள்ளைகளை இருளில் தடவித் திரியும் நிலைமைக்கு இட்டுச் செல்லலாகாதென்பதை கல்வி வெளியீட்டு விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள் அறிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டுப் பாடசாலைப் புத்தகங்களில் காணப்படுகின்ற தொழில்நுட்பக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி கடந்த மே 25 ஆம் திகதி மாத்தறை நூப்பே றுஹுணு கலாசார நிலையத்தில் சிறுவர் நோய் மருத்துவ நிபுணர் திரு. அஜித் அமரசிங்ஹ அவர்கள் மிகச் சிறந்த சமர்ப்பணமொன்றை மேற்கொண்டிருந்தார். ஒன்பதாம் வகுப்பு விஞ்ஞானப் புத்தகத்தின் பட இலக்கம் 9-4 இல் பெயரிடப்பட்டுள்ள விந்தணுவானது எட்டாம் வகுப்பு விஞ்ஞானத்திற்கான 2008 ஆம் ஆண்டுப் பதிப்பின் 18 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள ஒரு நாக பாம்பின் படத்தின் அளவுக்கு நிகரானதென அவர் குறிப்பிடுகின்றார். ஒன்பதாம் வகுப்புக்கான உரிய பாடத்தின் உரிய விந்தணுவினது படத்தின் கீழ் நுணுக்கக் காட்டியால் பார்க்கும் போது என அடிக் குறிப்பு (caption) திருத்தப்பட வேண்டுமல்லவா என அவர் வினவுகின்றார். அது அவ்வாறு அமையாததன் காரணமாக பிள்ளைகள் உறுப்புக்களின் அளவு சம்பந்தமாக தவறான புரிந்துணர்வைப் பெறுகின்றனர் அல்லவா என அவர் வினவுகின்றார். அதே புத்தகத்தில் சூலகத்தைக் காட்டுகின்ற படத்திலும் அடிக் குறிப்பு (caption) "நுணுக்கக் காட்டியால் பார்க்கும் போது" என சரிசெய்யப்படுதல் வேண்டுமெனவும் பாடசாலைப் புத்தகங்களை எழுதும்போது மிகவும் பொறுப்புடன் எழுத வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றார். (ரஜின, 2012 யூலை 5, பக்கம் 18-19). சாதாரணமாக விடலைப் பருவத்திலுள்ள பாடசாலைப் பிள்ளைகள் உடலின் இனப்பெருக்க உறுப்புகளை ஆபாசக் கதைகளுக்காகப் பயன்படுத்துவதும் அவற்றை சிரிப்புடன் பார்ப்பதும் நடைமுறை ரீதியில் உண்மையென நாம் அறிவோம். இதன்படி மேற்படி மருத்துவர் குறிப்பட்ட தொழில்நுட்பத் தவறுகள் பிள்ளைகளை பொறுப்புடன் கூடிய பாலியல் கல்வியிலிருந்து அகற்றி மேற்கூறிய சிரிப்பூட்டும் சந்தர்ப்பத்திற்கு இட்டுச் செல்கின்றதென்பது உண்மையாகும்.

இதேவேளை, பாலியல் கல்வி தொடர்பான பாடங்கள் 8, 9, 10 ஆம் வகுப்புகளுக்கான விஞ்ஞான பாடத்தின் கீழ் இடையறாது பேணப்படவில்லை. இது தொடர்பாக ஆராய்வதற்காக 09 ஆம் வகுப்பிற்குக் கற்பிக்கும் விஞ்ஞான பாடத்திற்குப் பொறுப்பான ஓர் ஆசிரியையைச் சந்தித்தேன்.

"இவர்களது வயதுக்குத் தான் இந்தப் பாடங்கள் இருக்க வேண்டும். இவற்றைப் பற்றி அறிந்துகொள்ள பெரிய ஆர்வம் காட்டுகின்றார்கள், இருந்தாலும் பாடப் புத்தகங்களில் இவை தரப்படாமல் இருக்கும் போது நாங்கள் வெளிவிடயங்களைக் கற்பிக்க முடியாது."

**"பாலியல் தொடர்பான விடயங்கள் அநாவசியமான முறையில் மூடி மறைக்கப்பட்டிருப்பதும், இதன் விளைவாக மூட நம்பிக்கைகள் மற்றும் தவறான கருத்துக்கள் இலகுவாக பிள்ளைகளின் மனங்களை ஆக்கிரமித்துக்கொள்வதும் எமது சமூகத்தில் பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கு மூல காரணமாக அமைந்துள்ளது."**

பொருளியல் ரீதியாக கேள்விக்கு ஏற்ற நிரம்பல் இல்லாதவிடத்து அது பணவீக்கத்திற்கு வழி ஏற்படுத்தும் என நாம் அறிவோம். உடல் ரீதியான மாற்றங்களைக் காட்டும் வயதிலுள்ள பிள்ளைகளுக்கு அதற்கு ஒப்பாக உள ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து ஏற்படக்கூடிய எதிர்கால சமூகத் துன்பியல் தொடர்பாக அதிகாரிகளைவிட ஆசியர்களுக்கு புரிந்துணர்வு உள்ளதென்பது இதன் மூலம் உறுதியாகின்றதல்லவா?

பாலியல் தொடர்பான விடயங்கள் அநாவசியமான முறையில் மூடி மறைக்கப்பட்டிருப்பதும், இதன் விளைவாக மூட நம்பிக்கைகள் மற்றும் தவறான கருத்துக்கள் இலகுவாகப் பிள்ளைகளின் மனங்களை ஆக்கிரமித்துக்கொள்வதும் எமது சமூகத்தில் பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கு மூல காரணமாக அமைந்துள்ளதென பெண் நோய் மருத்துவ நிபுணர் திரு.

ஹேமந்த தொடம்பஹல குறிப்பிடுகின்றார். (தருணி, 2012.05.30, பக்கம் 6) இதே பக்கத்தின் பொருட்டு கருத்துத் தெரிவிக்கும் நாடகக் கலைஞர் திருமதி சோமலதா சுபசிங்ஹ அவர்கள், வீட்டில் பாலியல் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொடுப்பது கடினமென்பதால் பாடசாலையானது அதனைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் இனப்பெருக்கச் சுகாதாரம் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொடுக்கும் போது அதனை ஒரு விசேட விடயமாகக் கருத்திற் கொள்ளாமல் கற்பிக்க வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றார்.

இதன்போது எனது நினைவுகள் நான் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய 1990 இன் இறுதி கால கட்டத்தை நோக்கிச் செல்கின்றன. அப்போது 11 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞானப் புத்தகங்களிலும் பாலியல் கல்வி தொடர்பாக ஒரு பாடம் உள்ளடக்கப்பட்டிருந்ததோடு பாடசாலைப் புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டவுடன் நாங்கள் அப்பாடத்தை வாசிப்பதையே முதலில் செய்வோம். இத்தகையதொரு பாடம் பதினோராம் ஆண்டில் உள்ளதென நாங்கள் பத்தாம் ஆண்டுக்கு சித்திபெற முன்பதாகவே அறிந்திருந்தோம். இப்பாடமானது புத்தகத்தின்படி வருடத்தின் நடுப்பகுதிக்கு உரியதாக அமைந்திருந்தாலும் விஞ்ஞான பாட ஆசிரியை இதனை எப்போது கற்பிப்பார் என்பதை அறியும் ஆவலுடன் பார்த்திருந்தோம். அழகிய இளம் ஆசிரியை மேலோட்டமாக பாடத்தைத் தொட்டுச் சென்ற போது விஞ்ஞான பாடத்திற்கான பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் மீது பெரும் நம்பிக்கை கொண்டோம். ஏனெனில் அவர் எங்கள் உள ரீதியான தேவையை அனுபவ ரீதியாகவே அறிந்திருந்தமையால் பாடத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே "அந்த பாடத்தை குறித்த நாளில் நடத்துவேன்" எனும் அறிவித்தலை எமக்கு ஏற்கெனவே வழங்கியிருந்தமையே காரணமாகும்.

> **“இந்தப் பிள்ளைகளோடு இதெல்லாம் செய்ய டியாதப்பா. ஒவ்வொரு நாளும் கேட்கிறார்கள்.. "மிஸ் அந்தப் பாடத்தைப் படிப்பிக்கமாட்டீங்களா" என்று...”**

மாணவர்களின் கேள்விகள், விளக்கம் பெறல் மற்றும் ஓய்வில்லாமல் வருகின்ற கேள்வித் துண்டுகள் என்பவற்றின் காரணமாக ஏனைய பாடங்களைவிட அதிகமான காலத்தை இப்பாடம் சுவீகரித்துக்கொண்டது. பாலியல் தொடர்பாக வெளிப்படையாகக் கலந்துரையாடுவதற்கு பிரத்தியேக வகுப்பு, அன்று எமக்கு வாய்ப்பினைப் பெற்றுத் தந்தது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். கேள்விகளிலிருந்து தப்பிச் சென்ற பாடசாலை ஆசிரியை எம்மை சந்தேகத்திலும் மேடைக்கூச்சத்திலும் மூழ்கடித்தாரேயொழிய எம்மைச் சரியாக விழிப்பூட்டவில்லை. அதே அனுபவத்தையே இன்று நான் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுப் பெறுகின்றேன். தொடர்புடைய எமது தலைப்பின் பிரகாரம் 11 ஆம் வகுப்பு விஞ்ஞான பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியை ஒருவரை சந்தித்த நான் உரிய பாடங்கள் தொடர்பாக மாணவர்களின் பதில்கள் எவ்வாறு உள்ளதென வினவினேன்.

"இந்தப் பிள்ளைகளோடு இதெல்லாம் செய்ய முடியாதப்பா. ஒவ்வொரு நாளும் கேட்கிறார்கள், "மிஸ் அந்தப் பாடத்தைப் படிப்பிக்கமாட்டீங்களா" என்று. அந்தப் பாடத்தைப் பற்றி உங்களுக்கு என்னைவிடத் தெரியும் தானே, என்று நான் நளுவிப் போய்விட்டேன்."

இந்த ஆசிரியையும் ஒரு அழகான இளம் ஆசிரியை. கொழும்பு மாவட்டத்தின் கலவன் பாடசாலையொன்றின் மாணவர்களுக்கு பாலியல் பற்றிய பாடத்தினை தாம் கற்பிப்பது முக்கியமல்ல, பெறுமதியல்ல எனும் நிலைப்பாட்டில் அவர் உள்ளார்.

இதன் பிரகாரம் 90 ஆம் தசாப்தத்தின் சம்பவத் தொடர் இன்றுகூட இப்பாடசாலைக் கட்டமைப்பில் இடம்பெற்று வருகின்றதெனக் குறிப்பிட்டால் யாரும் பிழை கொள்ளமாட்டார்கள். எனவே, நாடகத் தலைவர் திருமதி சோமலதா சுபசிங்ஹ கூறியவாறு பாடசாலையில் வெளிப்படையாகக் கலந்துரையாடப்பட வேண்டியவற்றை மூடி மறைத்து அதனை முறைசார்பற்ற முறைகளின் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு பிள்ளைகளுக்கு இடமளிப்பதானது ஆசிரியர்களின் கடப்பாடு அல்ல என்பதுடன் அது பாரதூரமான துஷ்பிரயோக நிலைமைக்கும் வழிசமைக்கும். ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் பாலியல் உடலுறவு வரையிலான செயன்முறையே பாலியல் கல்வியென, கற்பித்தல் செயன்முறையில் ஈடுபட்டுள்ளவர்களே தவறாக பொருள்கோடல் செய்துகொள்வார்களாயின்

அக்கல்வியின் முதன்மை நோக்கமே அற்றுப் போயுள்ளதெனக் குறிப்பிடலாம். காலம் முன் நோக்கிப் பயணித்தாலும் பிள்ளைகளினதும் இளைஞர்களினதும் சிந்தனைகளும் தேவைகளும் சிறிதளவிலேயே மாற்றமடைகின்றன.

பாலியல் தொடர்பாக கற்றுக்கொள்வதற்கு அன்று எமக்குள் இருந்த அவா இன்றைய பிள்ளைகளுக்குள்ளும் அவ்வாறே காணப்படுகின்றது. கல்விச் செயன்முறையானது உரிய முறையில் ஒட்டம் பெறாவிட்டால் தேவைகள் உருவாகும் போது ஏற்படுகின்ற பால்ய திருமணங்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் பாலியல் ரீதியாகக் கடத்தப்படுகின்ற மரணத்தை ஏற்படுத்தக்கூடிய தொற்று நோய்கள் என்பவற்றின் மூலம் பல்வேறுபட்ட சமூக பொருளாதார, கலாசார சிக்கல்கள் என்பவையே தோற்றம் பெறும்.

பாலியல் தொடர்பான திறந்த கலந்துரையாடல்களின் மூலம் சமூகத்தில் காணப்படுகின்ற பாலியல் ரீதியான துன்புறுத்தல் நிலைமைகள் அகன்று செல்லும் என்பது பெரும்பாலான விமர்சகர்களின் கருத்தாகும். தனிப்பட்ட முறையில் இத்தகைய கலந்துரையாடலின் அனுபவத்தை ஒரு கிராமத்தின் பிரபல்யம் வாய்ந்த தேசிய பாடசாலையொன்றின் மாணவியாகப் பாடசாலைப் பருவத்திலேயே அதாவது 90 ஆம் தசாப்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் பெறமுடிந்தமையானது நான் பெற்ற பாக்கியமாகும். தேசிய கல்வி நிறுவகத்திலிருந்து வருகைதந்த ஆசிரிய ஆலோசகர்கள் சிலரால் இக்கல்விக் கருத்தரங்கு பாடசாலை வளாகத்தில் ஒழுங்கு செய்யப்படடிருந்ததோடு தகவல்கள் வெளிப்படையாகவும் கலந்துரையாடப்பட்டது. ஆரம்ப கட்டம் மேடைக்கூச்சத்துடன் காணப்பட்டது. நேரடியாக யாரும் கேள்விகளை எழுப்பவில்லை. படிப்படியாகக் கலந்துரையாடல் வெளிப்படைத் தன்மையைப் பெற்றதுடன், அறிந்திருக்காத பல விடயங்களை அறியக்கூடியதாகவிருந்தது. ஒரே நதியில் அல்லது குளத்தில் ஆண்களும் பெண்களும் ஒன்றாக நீராடுவதன் மூலம் கருத்தரிக்கப்படுகின்றதென்பது கருத்தரித்தல் தொடர்பாக அன்று எம்மை ஆர்வத்திற்குட்படுத்திய ஒரு தலைப்பாகும்.

எவ்வாறாயினும் அன்று நடத்தப்பட்ட கருத்தரங்கின் மூலம் யௌவனத்தின் வாசல்படி அருகாமையில் இருந்த நாம் கொண்டிருந்த தவறான கருத்துக் களையப்பட்டது. இது ஒரு உதாரணம் மட்டுமே. இருப்பினும் இத்தகைய வாய்ப்புகள் இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் சரிநிகராக கிடைப்பதில்லை என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக்குறைகள் காணப்படுகின்ற கஷ்டப் பிரதேச பாடசாலைகள் இலங்கையில் ஏராளமாக உள்ளன. எனவே, ஆசிரியர் எனும் தனிப்பட்ட ஆளுமையின் ஊடாக மாணவர்களை இத்தகைய கலந்துரையாடல்களுக்கு இழுத்தெடுக்கும் ஆற்றல் இருக்க வேண்டும். ஆசிரியர், மேடைக்கூச்சத்தில் நெளிந்து வளைகின்ற போது மாணவர்களைப் பற்றி என்ன தான் பேசுவது?

**“ஆசிரியர் எனும் தனிப்பட்ட ஆளுமையின் ஊடாக மாணவர்களை இத்தகைய கலந்துரையாடல்களுக்கு இழுத்தெடுக்கும் ஆற்றல் இருக்க வேண்டும். ஆசிரியர், மேடைக்கூச்சத்தில் நெளிந்து வளைகின்ற போது மாணவர்களைப் பற்றி என்ன தான் பேசுவது?”**

தற்கால பாடசாலைப் பாடத்துறையில் (ஆரம்ப மற்றும் உயர்தர விஞ்ஞானத்துறை தவிர்ந்த) பாலியல் கல்வி தொடர்பாக மாணவர்களுக்கு வழங்கத் தயாராகவுள்ள மற்றும் அவ்வாறு வழங்கப்படவுள்ள பாட உள்ளடக்கமானது சிற்சில தொழில்நுட்பக் குறைபாடுகளுடனேனும் கணிசமான அடைவு மட்டத்தைப் பெறுகின்றதென இதன்படி தெளிவாகக் குறிப்பிடலாம். பாலியல் தொடர்பாக எம்மால் பேசப்பட வேண்டிய எல்லாத் தொனிப்பொருள்களும் பாட உள்ளடகத்தில் உள்ளடங்கியுள்ளதென்பது பாடத்திட்டத்தை நன்கு அலசிப்பார்க்கும் போது தெளிவாகின்றது. குறிப்பாக சுகாதாரம் மற்றும் உடற் கல்வி சம்பந்தமான ஆசிரிய ஆலோசகரொருவருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது, பாலியலின் சமூக ரீதியான முக்கியத்துவம் மற்றும் பொறுப்புவாய்ந்த தன்மை என்றால் என்னவென்பதை வலியுறுத்தி மாணவர்களை இப்பாடத் தொடர்களில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆக்கவிளைவு அதிகமாகுமென

அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இத்தகைய பாடங்களைக் கற்பிக்கும் போது குறிப்பாக ஆண் பிள்ளைகள் காட்டுகின்ற பொறுமையின்மை, ஆர்வம் என்பவற்றையும், பெண் பிள்ளைகள் காட்டுகின்ற மேடைக்கூச்சம், வெட்கத் தன்மை என்பவற்றையும் இது சாதாரணமாக உலகில் இடம்பெறுகின்ற மற்றும் கட்டாயமாக பகுத்தறிவற்ற சமுதாயத்தில் இடம்பெற வேண்டிய ஒரு செயற்பாடு என்பதனை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் கற்பிப்பதன் மூலமே இல்லாதொழிக்கலாம்.

பாலியல் கல்வி எனப்படுவது வெறுமனே பாலியல் உடலுறவு மட்டுமல்ல அது

> **பாலியல் கல்வி எனப்படுவது வெறுமனே பாலியல் உடலுறவு மட்டுமல்ல அது அச்செயற்பாட்டின் ஒரு முக்கியமான கட்டம் மட்டுமே என்பதை மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்**

அச்செயற்பாட்டின் ஒரு முக்கியமான கட்டம் மட்டுமே என்பதை மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டுமென அவர் குறிப்பிடுகின்றார். இதனை விரிவாகக் கலந்துரையாடும் போது உடலுறவுக்காக உடல் மற்றும் சுகாதார ரீதியாகவும், உள, சமூக, கலாசார ரீதியாகவும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளதென்பதையும், அவற்றை விஞ்ஞான ரீதியாகப் பயில்வதன் மூலம் உயிரினத்தின் இருப்புக்காக பொறுப்புவாய்ந்த மனித நடத்தையை உருவாக்கிக் கொள்ளலாமென்பதையும் மாணவர்கள் புரிந்துகொள்வார்கள். அப்போது பாலியல் உடலுறவானது மென்மேலும் மூலைமுடுக்குகளில் உரையாடப்படுகின்ற விடயமாக அமைய மாட்டாது. இத்தகைய திறந்த மனநிலைக்கே நாம் பிள்ளைகளை இட்டுச் செல்ல வேண்டும் என்பது தெளிவு.

குறிப்பாகப் பாடசாலை வாழ்க்கையின் பின்னர் உயர் கல்வியில் அல்லது பல்கலைக்கழக கலாசாரத்தில் பாலியல் தொடர்பாக வெளிப்படையாகக் கலந்துரையாடும் ஒரு போக்கு உள்ளதென்பதை நாம் அறிவோம். பாலியல் தொனிப்பொருள்களைக் கொண்ட உயர் தரத்திலான செவ்வியல் திரைப்படங்களைக் கையாளுதல், பாலியலை சௌந்தரியத்துடன் அனுபவித்தல் என்பன அங்கு இடம்பெறுகின்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர் இளமாணி மாணவர்களுடன் ஒன்றாக அமர்ந்திருந்து சினிமாப் படங்களைப் பார்ப்பதாலும் அதனை விமர்சனம் செய்வதாலும் துஷ்பிரயோகமோ வல்லுறவோ இடம்பெறுகின்றதா? இல்லை. இந்த இடத்தில் நாம் கலந்துரையாடுவது உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்ற சிறிதளவு மாணவர்கள் தொடர்பாகவெனின் பாடசாலைக் கல்வியின் பின்னர் படிப்பை முடித்துவிட்டு சமூகமயமாகும் பெரும்பான்மையான மாணவர்கள் தமது கலந்துரையாடல்களை எங்கே நடத்துவது? என்ற வினா எழுகின்றது. திறக்கப்படாத நிலையில் உள்ள இவர்கள் தமது வேட்கையை பல முறைகளில் வெளியிடலாம். கலாசாரத்தினால் வடிவமைக்கப்பட்ட சிறுபான்மையினரைத் தவிர்ந்த ஏனையோர் பாலியல் மனநிலையின் பலவீனத் தன்மைக்கு உள்ளாவார்கள் அல்லவா? அறியாமையின் காரணமாக பரவி வருகின்ற சமூக ரீதியான நோய்கள், பாலியல் தொழில், சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம், பலதார விவாகங்கள், இல்லற வாழ்வில் பாலியல் செயற்பாடுகள் மற்றும் அதன் பல்வேறுபட்ட சிக்கல்கள், செழிப்பு, மலட்டுத் தன்மை பற்றிய சிக்கல்கள் தொடர்பான அறிவின்மை என்பன முழுமையான பாலியல் கல்வி கிடைக்கப்படாததன் விளைவுகளாகும்.

யௌவனத்தில் பாலியல் தொடர்பாக வெளிப்படையாகக் கலந்துரையாடாத பெண் பிள்ளைகள் பெரியவர்களாகி மனைவிமார், தாய்மார் ஆனாலும் பாலியல் தொடர்பாக பயில்வது சிறுபிள்ளைத் தனமான மகளிர் பத்திரிகைகள் மூலமாகவும், நண்பிகளின் அனுபவங்களின் மூலமாகவும் என்பது மனவருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும். இது எதிர்கால சந்ததியினர் மீது பாதகமான தாக்கத்தையே ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக தற்கால இலங்கையின் பாடசாலைப் பாடத்திட்டத்தில் பாலியல் கல்வி தொடர்பாக கோட்பாட்டு ரீதியில் மாணவர்களுக்கு வழங்கத் தயாராகும் பாட உள்ளடக்கத்தில் போதுமான தன்மை காணப்படுகின்றதென்பது நாம் முன்வைக்கும் தீர்மானமாகும். இருப்பினும்

எமது சமூகம் கொண்டுள்ள பாலியல் தொடர்பான மனோபாவங்களினதும், துஷ்பிரயோகங்களினதும் மூலக்கரு காணப்படுவதும் பாடசாலைக் கல்வியினுள்தான் என்பது தெளிவாகின்ற ஏராளமான விடயங்கள் உள்ளன. கோட்பாட்டு ரீதியான பாடங்கள் நடைமுறை ரீதியில் கலந்துரையாடப்படாதமை, சில ஆசிரியர்கள் குறிப்பாக ஆசிரியைகள் இத்தகைய பாடங்களின் போது காட்டுகின்ற மேடைக்கூச்சம், மாணவர்கள் இவ்விடயங்களை அறிவதற்காக கொண்டுள்ள ஆர்வத்தை அவர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர் எனத் தவறாகப் புரிந்துகொண்டு பாடத்தை விட்டு நளுவிச் செல்லுதல், வகுப்பறைக் கற்பித்தலுக்கு மேலதிகமாக திறந்த கலந்துரையாடல்களிலும் கருத்தரங்குகளிலும் மாணவர்களை பங்கேற்கச் செய்யாமை, பாடசாலைப் புத்தகங்களில் காணப்படுகின்ற ஆவண ரீதியான, தொழில்நுட்ப ரீதியான மற்றும் பதிப்பு ரீதியான சில குறைபாடுகள் சில காலமாக பெருகி வளர்ச்சியடைந்து பாடசாலை பாலியல் கல்வியில் பாரதூரமான குறைபாடுகளை தோற்றுவித்துள்ளமை என்பன மாணவர்கள் என்ற வகையிலும் ஆசிரியர்கள் என்ற வகையிலும் இரண்டு வகிபங்குகளை ஏற்று அன்று தொடக்கம் இன்று வரை நாம் கண்டறிந்த உண்மைகளாகும்.

மாணவர்களை சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமாயின் ஆசிரியரானவர் காலத்திற்கேற்ற ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் மாற வேண்டும். பாலியல் கல்வி எனப்படுவது மேற்கொண்டும் ஆசிரிய - மாணவர் தொடர்பினை தூரவிலத்தும் பாடப் பகுதியாக அமையலாகாது. மேற்படி இடைவெளியை குறைத்துக் கோட்பாட்டு ரீதியான விடயங்கள் விபரமாகவும் வெளிப்படையாகவும் கலந்துரையாடப்படும் பட்சத்தில் எமது சமூகத்தில் காணப்படுகின்ற பாலியிலை அடிப்படையகாக் கொண்டுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கும். ■

**வத்சலா கமகே**

இச்சிறுகதை சிங்கள மொழியில் அய(அவள்) எனும் சஞ்சிகையில் 2012 முதலாம் அரையாண்டில் வெளிவந்தது.

● ● ● ● ●

## வெறுமையான கனதி

என்வயிற்றில்
வெறுமையான கனதி
இரத்தமும் சதையும் கலந்த கலவை
அவ்வளவுதான்.
எதற்காக?
ஏன் எனக்கு?
வெறும் அருவெருக்கத்தக்க சுமையாக...
நிகழ்ந்ததை மறப்பதற்கு
என்னை நான் நிச்சயப்படுத்திக் கொண்ட
பின்னர்
மீண்டும் பின் தொடர்கின்றது...
சுமப்பதுவும்,
பெறுவதுவும்
சுகமான தாய்மை என்போரிடத்தில்
உருக்குலைக்கப்பட்ட
என்னிடத்தில்
சுகம் இல்லை
சுமை மட்டுமே...

**குணா**



## நிகழ்கால தரிசனங்கள்

இப்பொழுதோ நான்
சுற்றத்தின் பார்வையில்
தீண்டத்தகாதவள்.
கணவனை இழந்தவுடன்
மரத்துவிட வேண்டுமாம் என்
உணர்வுகளும்.

பிள்ளைகளோ
பட்டினிப் போரால்
நாவறண்டு
கண்செருகி படாதபாடுபடும்போது
கடனாக அரிசி கேட்டு
அயல் வீட்டுக் கதவு தட்டினேன்
அரிசிக்குப் பதிலாக
அயலவனோ
விறைத்துப் பார்த்தான் என் உடலை

பட்டினியுடன் போராடும்
என் பிள்ளைகளுக்குப் பாயோடு
பாயாகிப் போனேன்
அன்று தொட்டு நானோ

தீட்டுப்பட்டவள்
தீண்டத்தகாதவள்
அவர்களின் பார்வையில் மட்டுமே

**செந்துருத்தி**

# கூப்பாடு வேண்டாம் கண்டனம் வேண்டாம்



கவிஞர், எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர்

## ஸர்மிளா ஸெய்யித்

கவிஞராக, எழுத்தாளராக அறியப்பட்டிருந்த ஸர்மிளா ஸெய்யித் அண்மையில் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியின் பின்னர் சமூக ஆர்வலராகவும், செயற்பாட்டாளராகவும் அறியப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த இவர், எத்தகைய பெரிய பின்னணிகளும், விளம்பரப்படுத்தல்களும் இன்றி தன்னார்வத்துடன் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபடுகின்றவர். பெண்கள் தொடர்பான ஆய்வுகளிலும், பெண்கள், சிறுவர்களது அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்டவர். சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவியாகவும், வேறு பல நிலைகளிலும் இருந்து சமூக அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வருபவர். பல்வேறு சமூக எதிப்புக்கும், விமர்சனத்திற்கும் முகம்கொடுத்த நிலையிலும் எந்தவித தளர்வுமின்றி, நம்பிக்கையோடும் தெளிவோடும் "சொல்" சஞ்சிகைக்கு அவர் அளித்த செவ்வி.

**■ தற்காலத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களும் வல்லுறவுகளும் அதிகரித்துள்ளதற்கான காரணம் என்று நீங்கள் எதனைக் கருதுகின்றீர்கள்?**

பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் துஷ்பிரயோகங்கள் வல்லுறவுகள் என்பதனைவிட சிறுமிகள் எதிர்கொள்ளுகின்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் குறித்து நாம் அதிகம் கவனம் செலுத்தவேண்டும் என நான்

கருதுகின்றேன். தற்காலத்தில் இந்த நிலை அதிகரித்துள்ளதாக நான் கருதவில்லை. சிறுமிகள், பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவுகள், துஷ்பிரயோகங்கள் காலாகாலமாக இடம்பெற்று வருகின்றன. முன்னர் இவை செய்திகளாக வெளிவருவது மிகவும் அரிதாகக் காணப்பட்டது. அத்தோடு, பாதிக்கப்பட்ட பெண்களும், சிறுமிகளும் தனிப்பட்ட கௌரவம் எதிர்காலம் கருதி தமக்கு நேர்ந்த அவலத்தை வெளிக்கொணர விரும்புவதில்லை. ஆனால் இன்று இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெண்கள் தங்களுக்கு எதிரான அநீதிகளுக்கு நியாயகம் கிடைக்கவேண்டும் என திடமாக விரும்புகிறார்கள். எனவே, முறைப்பாடுகளைச் செய்கிறார்கள். சட்டத்தின் வழியில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கிறார்கள். இந்த வெளிப்படையான செயற்பாடே அண்மைக்காலங்களில் பாலியல் வல்லுறவுகள் அதிகரித்துள்ளதாக நம்மை நம்பச் செய்கிறது. மற்றும்படி பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களும், வல்லுறவுகளும் உலகம் தோன்றியது முதல் இன்றுமுதல் மாற்றத்திற்கு உள்ளாகாத நிலையிலேயே காணப்படுகின்றது.

## பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான தனியான அமைச்சிருந்தும் இவற்றைத் தடுக்க முடியவில்லையே, ஏன்?

இந்தப் பிரச்சினை அமைச்சுகளால் தீர்க்கக்கூடியதில்லை. அடிப்படை மனநிலைகளில் மாற்றத்தைக் கொண்டு வருவதனூடாக ஏற்படுத்த வேண்டிய மாற்றமாகத்தான் நான் இதனைப் பார்க்கிறேன். பால் - பால்நிலை தொடர்பான வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள முடியாத, பெண் எனப்படுபவள் உடல் திண்மம் என்ற புரிதலுக்கு ஆளாக்கும் மிகப் பின்தங்கிய சமூகக் கட்டமைப்பும், பாலியல் கல்வி அல்லாத பாரம்பரிய கல்வி முறையும் மாறாத வரை அமைச்சும், சட்டமும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியாது.

## இலங்கையில் கருச்சிதைவுச் சட்ட அமுலாக்கமின்மையால் பெண்கள் பாரிய நெருக்கடிகளை எதிர் கொள்கிறார்களா? எவ்வாறு?

கருச்சிதைவுச் சட்ட அமுலாக்கம் குறித்து நீண்ட காலமாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. சமய ரீதியாகக் கருக்கலைப்பு ஏற்றுக்கொள்ளவே முடியாத ஒரு விடயம். கருக்கலைப்பு ஒரு உயிரைக் கொலை செய்வதற்கு சமமாகப் பார்க்கப்படுகின்றது. இந்த அடிப்படைகளை மறுக்கமுடியாத போதும், கருச்சிதைவு சட்ட அமுலாக்கம் குறித்து நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய தேவையும் சமகாலத்தில் உள்ளது. கருச்சிதைவு சட்டம் அமுலாக்கம் இல்லாத காரணத்தினால் காப்பகங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வல்லுறவுக்கு உள்ளான பெண்கள் வேறு வழியின்றி குழந்தைகளைப் பிரசவித்து காப்பகங்களில் சேர்த்துவிடுகின்ற துர்ப்பாக்கிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். இத்தகைய குழந்தைகளின் எதிர்காலம், பெற்றோரின் அரவணைப்பற்ற சூழலில் குழந்தைகளின் உடல், உளவியல் தேவைகளை சமூகம் பொறுப்பேற்க வேண்டிய, பதிலளிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. குழந்தைகளின் நிலை இப்படியென்றால், சில பெண்களோ பிரசவித்த குழந்தையை விட்டுச் செல்லவும் முடியாமல் "லேபல்" இல்லாத குழந்தையுடன் உளவியல் ரீதியான பாரிய தாக்கத்திற்கும், சமூகப் புறக்கணிப்பிற்கும் ஆளாகின்றனர்.

## வல்லுறவு மூலம் கர்ப்பம் தரிக்கும் சிறுமிகளது கர்ப்பம் பற்றி உங்களது கருத்து யாது?

மிகக் கொடுமை. ஏற்றுக்கொள்ளவே முடியாத சமூகம் அவலங்களில் மிக முக்கியமானது, முதன்மையானது. அறியாத வயதில் யாரோ செய்த குற்றத்திற்காக சின்னஞ்சிறு வயதில் தான் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாது வாழும் காலம் முழுதும் சுமையும், துயருமாக ஒரு சிறுமியை வாழ நிர்ப்பந்திப்பதை எந்த அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. இத்தகைய நிலைக்குள்ளான சிறுமிகளை சந்திக்க நேரும்போதும் எனக்குள் பொங்கி எழுகின்ற கேள்விகளுக்கு பதில்களே கிடைப்பதில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவேண்டும். நீதி கிடைக்கவேண்டும். விமோசனம் கிடைக்கவேண்டும். ஆனால் சில பெண்களும், சிறுமிகளும் துரதிஷ்டவசமாக சுமைதாங்கிகளாக மாறிவிடுகின்றனர். இது பற்றி எமது சமூகம் சிந்திக்கவேண்டும். சில நிபந்தனைகளின் அடிப்படையில் கருச்சிதைவைச் சட்டமாக்குவதன் மூலமாக இவ்வாறான பாதிப்புகளிலிருந்து சிறுமிகளையும் பெண்களையும் காப்பாற்றமுடியும். அண்மையில்

ஆய்வொன்றிற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பிரதேசத்திற்குச் சென்றிருந்தபோது சித்தசுவாதீனமற்ற இளம் பெண் ஒருவர் குழந்தையைப் பிரசவித்திருந்ததைப் பார்த்தேன். அந்தப் பெண்ணின் வீட்டுக்கு முன்னால் கடை நடாத்தி வந்த ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டிருந்தாள். அவள் வல்லுறவுக்குள்ளானதை வயிறு உப்பிய பின்னர்தான் மற்றவர்களால் அறிந்து கொள்ளமுடிந்துள்ளது. தான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதும் தெரியாமல், ஒரு குழந்தையைப் பிரசவித்திருக்கிறோம் என்ற உணர்வும் இல்லாமல் இருந்த பெண்ணின் மார்பைப் பிடித்து பிறந்த குழந்தையின் வாயில் திணித்து பால் அருந்தச் செய்வதில் பாதிக்கப்பட்ட பெண்ணின் தாயும், இன்னொரு பெண்ணும் ஈடுபட்டிருந்தனர். அந்தக் குழந்தை என்ன பாவம் செய்தது? சித்த சுவாதீனமற்ற அந்தப் பெண்ணினால் தனது குழந்தையின் எதிர்காலத்தை எப்படிப் பொறுப்பேற்க முடியும்? சித்த சுவாதீனமற்ற அந்தப் பெண் தந்தையை இழந்தவள். தாய் ஆடு மேய்க்கின்ற வறியவள். அந்தக் குடும்பத்திற்கே இன்னல்கள் நிறைந்த நிலை. இப்படி ஒரு பெண் அல்ல. பல பெண்கள் எம்மத்தியில் உள்ளனர். பல நூறு குழந்தைகளும் உள்ளனர்.

**அண்மையில் பாலியல் தொழிலாளர்களின் தொழில் உரிமை சட்டமாக்குவது தொடர்பாக வெளியாகிக் கொண்டிருக்கும் வாதப் பிரதி வாதங்கள் பற்றியும், இவ்விடயத்தில் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டவர் என்ற அடிப்படையிலும் சமூக ஆர்வலரான தாங்கள் எத்தகைய கருத்தை முன்வைக்க விரும்புகிறீர்கள்?**

பாலியல் தொழில் சட்டரீதியாக்குவது தொடர்பாக நீண்ட காலமாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுவந்தபோதும், அண்மையில் இதுபற்றிய கருத்தாடல்கள் அதிகரித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. முஸ்லிம் பெண்ணாக பி.பி.சியில் நான் அளித்த செவ்வியினால் முஸ்லிம் சமூகத்திற்குள்ளிருந்து பல்வேறு எதிர்ப்புகளும், கண்டனங்களும் எழுந்திருந்தன. பாலியல் செயற்பாட்டை தொழிலாக அதுவும் சட்டபூர்மான தொழிலாக மேற்கொள்ள இஸ்லாமிய சமூகம் மட்டுமல்ல எந்தவொரு சமூகமும் அங்கீகரிக்காது என்பது வெளிப்படையான உண்மை. ஆனபோதும், பாலியல் தொழில் என்பது நாம் விரும்பாத போதும், நாம் அங்கீகாரம் அளிக்காதபோதும் பல்வேறு நிலைகளில், பல்வேறு தளங்களில் இடம்பெற்றுவருவதனை நாம் யாரும் மறுக்கமுடியாது. பாலியல் தொழிலை இல்லாதொழிப்பதற்குப் பதிலாக சட்ட அந்தஸ்த்தைப் பெற்றுக்கொடுத்து மேலும் அதிகரிக்க நான் முயற்சித்ததாகவும், மிகப் பெரிய சமூகத்திற்கு எதிரான செயற்பாட்டை நான் புரிந்ததாகவும் அண்மையில் விமர்சிக்கப்பட்டேன். பாலியல் தொழிலை ஒழிப்பதற்கு நமது சமூகத்திடம் எவ்வாறான தீர்வுகள் உள்ளன என்று எனக்குத் தெரியவில்லை. என்னை எதிர்த்தவர்களும், கண்டனம் தெரிவித்தவர்களும் அதுபற்றித் தெளிவாக விரிவாகக் கூறவில்லை. கண்டனமும் எதிர்ப்பும் தெரிவிக்கத் தெரிந்த அளவுக்கு அவர்களிடம் சமூகப்பிரச்சினைக்கான தீர்வு இல்லை என்பது மற்றுமொரு வெளிப்படையான உண்மை. பாலியல் தொழில் மறைமுகமாக இடம்பெறுகின்ற ஒன்றாவும், யாரும் கண்காணிக்காத ஒன்றாகவும் இருக்கின்றபடியால்தான் அது அதிகரிக்கின்றது என்பது எனது கருத்து. பாலியல் தொழிலுக்கு சட்ட அங்கீகாரம் அளிப்பதனால் அதில் அனைவரும் ஈடுபடலாம் என்பது அர்த்தமில்லை. ஹலால் அங்கீகாரமற்ற உணவுகள் விற்கப்படும் இடங்கள் இருந்தாலும், ஹலால் சான்றிதழ் வழங்கப்பட்ட கடைகளைத் தேடி உண்பதில் முஸ்லிம்கள் ஆர்வம் காட்டுவது யாவரும் அறிந்த உண்மை. அது சமயக் கடமையாகக் கருதப்படுகின்றது. அதுபோன்றே, சைவம் மட்டும் சாப்பிடுகின்றவர்களும் தமக்குப் பொருத்தமான உணவுகளைப் பெறக்கூடிய கடைகளைத் தேடிச் செல்வதும் இயல்பு. இங்கே, பாலியல் தொழிலுக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கப்படும்போது, அது சட்டத்தினால் கண்காணிக்கப்பட்ட ஒழுங்கமைப்பில் இடம்பெறுவது உறுதி செய்யப்படும்போது பல மாறுதல்கள் ஏற்பட வழியுண்டு. பெண் வியாபாரம் நிறுத்தப்படவும் சாத்தியமுண்டு. பாலியல் தொழில் ஒழிக்கப்படவேண்டும் என்று குரல் எழுப்புவர்கள், தீர்வுகளை முன்வைக்கவேண்டும். எமக்கும் பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதைத்

தடுக்கவேண்டும் என்று விருப்பம்தான். அதற்காக ஒரு இடத்தில் குந்தியிருந்து ஒழிக்கவேண்டும் ஒழிக்கவேண்டும் ஹராமாக்கப்பட்டது, சமயம் ஏற்றுக்கொள்ளாதது என்று கூப்பாடு இட்டுக்கொண்டிருந்தால் மட்டும் ஒழித்துவிட முடியாது. காரியமாற்ற வேண்டும்.

**■ சமூகம் பெண்களை மத கலாசார மற்றும் ஆணாதிக்கத் தளையில் இருந்து விடுவித்து விட்டது என்று நினைக்கின்றீர்களா?**

நிச்சயமாக இல்லை. மதங்களின் கூற்றுக்கும், மதவாதிகளின் விளக்கத்திற்குமிடையே பாரிய இடைவெளிகளிலும், நிரப்பமுடியாத பள்ளங்களும் காணப்படுகின்றன. இதில் எந்த மதமும் விதிவிலக்குக் கிடையாது. பெண்களுக்கு சுதந்திரத்தை, உரிமையை வழங்கிய உலக மார்க்கம் இஸ்லாம் என்று முஸ்லிம்கள் - நான் உட்பட கொண்டாடுகின்றோம். நம்புகின்றோம். ஆனால், அடிப்படைவாதிகள் என்ன சொல்லுகின்றார்கள்? உலகின் பல்வேறு மாறுதல்களையும், முன்னேற்றங்களையும், பின்னடைவுகளையும் எதிர்கொள்ள முடியாமல் கூறியதையே கூறிக்கொண்டு சத்தமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை நடைமுறைப் பிரச்சினைகளோடும், சமூகத்தின் தேவைகளோடும் ஒப்புநோக்கி சரியான வழிகளையும், தீர்வுகளையும் முன்வைக்கவும், வழிகாட்டவும் அவர்களால் முடியவில்லை. எனவே, இன்னமும் கண்டிப்பதும், தண்டிப்பதுமாகவே இருக்கிறார்கள். பெண்களை அலங்கார பொம்மைகளாக கைபிடித்து நடப்பதையே ஆண்கள் விரும்புகின்றார்கள். பெண்களை ஒரு இளவும் தெரியாத முட்டாள்களாகவும், புத்தி சாதுரியம் ஆண்களின் பிறப்புரிமை என்றும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பெண்களின் கருத்துக்களை சமூகம் இன்னமும் சமயத்தின் தராசுகளில்தான் நிறுக்கிறது. உலக அறிவும், மார்க்க அறிவு மனிதனை சமநிலைப்படுத்த வேண்டும். ஒன்றை ஒன்று மிஞ்சும்போது பிரச்சினைகள்கள் தோன்றுகின்றன. சமய அறிவில் மேலோங்கியவர்கள் உலக அறிவைப் புறந்தள்ளும் நிலை தொடரும்வரை பெண்கள் ஆணாதிக்க, சமூக கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடமுடியாது. ஆண்கள் மட்டும்தான் பெண் எதிர்ப்பாளர்கள் என்று கொள்ளமுடியாது. ஆண்களை விடவும் மோசமான பெண்கள் இருக்கின்றனர் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**■ யுத்தத்தின் பின்னர் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றதே ?**

நான் அப்படிக் கருதவில்லை. இன்று பெண்கள் மத்தியில் எழுந்துள்ள விழிப்புணர்வு காரணமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வெளிக்கொணரப்படுகின்றன. முன்னர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை மறைக்க வேண்டியதாகவும், குடும்ப கௌரவத்திற்கு இழுக்காகவும், வெளிக்கொணர்வது ஆகாத காரியமாகவும் கருதப்பட்டது. இன்றும் அந்த நிலை காணப்படுகின்றது. முன்னருடன் ஒப்பிடுகையில் இப்போது பெண்கள் தமக்கு எதிரான வன்முறைகளை வெளிக்கொணர்கின்றனர்.

**■ இறுதியாக ஒரு கேள்வி. உங்கள் எழுத்துகள்கூட கடுமையாக விமர்சிக்கப்படுகின்றதே. குறிப்பாக தங்களின் "சிறகு முளைத்த பெண்" என்ற கவிதைத் தொகுதியை இஸ்லாமியவர்கள் கேள்விக்குட்படுத்தியுள்ளது பற்றி...?**

அது பற்றி நான் கண்டு கொள்ளவேயில்லை. பெண்ணை முந்தானையால் மூடி மூடி புனிதப்பொருளென பேணுவதுபோல வெளிவேசம் போடுகின்றவர்களின் விமர்சனத்திற்கு நாம் ஏன் செவிசாய்க்க வேண்டும்? பெண்ணைப் பவ்வியமாகவும், மிகத்தூய்மையாகவும் கருதுவதாக இருந்தால் அவளை யாரும் தீண்டக்கூடாதே. இங்கே, எல்லாமே தலைகீழ். மூடி மூடி பக்குவமாகப் பேணுவது மட்டுமே. பசியாறும் சுயலத்தோடுதான்... பெண்ணை உயிரற்ற சதைப்பிண்டமாக நோக்குபவர்களின் விமர்சனங்களுக்கு நான் தலைசாய்ப்பதில்லை.■

நேர்காணல்

**குகநிதி குகநேசன்**

# பெண்ணை விரும்பாத உலகு ஆனால்.....

உலகம் முழுவதிலும் வருடமொன்றிற்கு பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் 19 மில்லியன் இடம்பெறுவதோடு இதன் போது மரணிக்கும் பெண்களின் எண்ணிக்கை 70,000 ஆகும். இரகசியமாக இடம்பெறுகின்றதும், மேற்கொள்ளப்படுகின்றதுமான பாதுகாப்பற்ற கருக்கலைப்புத் துன்பியலின் காரணமாக உலகம் இழக்கின்ற பெண்களின் உயிர்கள் எவ்வித பெறுமதியும் இன்றி அகாலத்தில் மாண்டு செல்வதை பொருட்படுத்தாமல் இருப்பதென்பது அப்பெண்களுக்கு விளைவிக்கப்படுகின்ற அநீதியாகும். இது சுகாதாரம் மற்றும் மனித உயிர்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களின் கண்களுக்குப் புலப்படாதிருப்பது ஏனென நாம் வினவுகின்றோம்.



www.stockfreeimages.com

பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளை மேற்கொள்வதற்காக உலகின் பல்வேறுபட்ட நாடுகளிலும் இலங்கையிலும் பாதுகாப்பான முறைகளெனச் சிந்திக்கின்ற - இருப்பினும் பாதுகாப்பற்ற பல முறைகள் கையாளப்படுகின்றன. வாய்மூலமாக பயன்படுத்தப்படுகின்ற மாத்திரைகளும் ஆயுள்வேத மருந்து வகைகளும் எவ்வித தரமும் இன்றி பயன்படுத்தப்படுகின்றன. பயிற்சி பெறாத நாட்டு வைத்தியர்கள் ஏற்புவலி மற்றும் கருப்பை, யோனி மடல் ஆகியவற்றில் தொற்று ஏற்படக்கூடிய வகையில் மேற்கொள்கின்ற கருக்கலைப்பு முறைகள் இவை அனைத்தையும்விட ஆபத்தானவை. யோனி மடலின் ஊடாக சிற்சில கருவிகளை உட்புகுத்தி கருவை அழிப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியானது மற்றுமொரு ஆபத்தான, பாதுகாப்பற்ற முறையாகும். நுண்ணுயிர் அகற்றப்படாத இந்த ஆரம்ப மட்ட கருவிகளின் மூலம் கருவை அழித்து குருதி வெளியேறச் செய்து கருக்கலைப்புகளை மேற்கொள்ளும்போது அதிகளவிலான குருதி வெளியேற்றத்தின் காரணமாக கருக்கலைப்புக்குள்ளான பெண்ணின் மரணம் நிகழலாம். இதனைத் தவிர கருப்பையிலும் யோனி மடலிலும் காயங்கள் ஏற்பட்டு தொற்று உருவாகி ஏற்புவலி மற்றும் வேறு பாரதூரமான நோய் நிலைமைகள் ஏற்படக்கூடிய அபாயத் தன்மை அதிகமாக காணப்படுகின்றது. இங்கே பெரும்பாலானோர் மறந்து விடுகின்ற ஒரு விடயம் உள்ளது. அதாவது, குருதி வெளியேறுவதன் மூலம் மட்டும் கருக்கலைப்பு முழுமையாக இடம்பெற்றுவிட்டதென நம்புவதாகும். இத்தகைய பெரும்பாலான கருக்கலைப்புகள் பரிபூரணமற்ற கருக்கலைப்புகளாகவும் அமையலாம். பரிபூரணமற்ற கருக்கலைப்புக்குப் பின்னர் குறித்த பெண்ணுக்கு அபாயகரமான நிலைமைகளுக்கு கட்டாயம் முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.

பாதுகாப்பான முறையில் கருக்கலைப்புகளை மேற்கொள்வதன் பொருட்டு கருக்கலைப்பை சட்ட ரீதியாக்குவதற்கு எதிர்புத் தெரிவிக்கின்றவர்களுக்கு இதன் அத்தியாவசியத் தன்மையையும் சட்டத்திற்கு முரணான கருக்கலைப்புகளின் பாரதூரமான

தன்மையையும் சுட்டிக்காட்டுவதற்காகவே இந்த விடயங்கள் சம்பந்தமாக மேலோட்டமாக கலந்துரையாடப்பட்டது. இது பெண்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்ற ஒரு விடயமென்பதையும் பெண்களுக்கெதிரான வன்முறையின் மற்றுமொரு வடிவம் என்பதையும் வலியுறுத்தி நினைவூட்ட வேண்டும்.

எவ்வாறாயினும் இக்கருக்கலைப்புகள் தொடர்பாக மேலதிகமாகவும் கலந்துரையாடுவதை ஒரு புறம் வைத்துவிட்டு பெண்களுக்கெதிரான வன்முறையானது கருக்கலைப்பிலிருந்து செயற்படுகின்ற விதம் தொடர்பாக கவனம் குவிப்பது மிகவும் பொருத்தமாக அமையும்.

எவ்வாறாயினும் ஆசியாவில் மரபுரீதியான கருத்தியல்களைப் பாதுகாப்பதற்காக புதிய விஞ்ஞான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற பெண் சிசுக் கருக்கலைப்புகளினால் இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளின் பெரும்பாலான பிரதேசங்களின் மக்கள் தொகையின் கட்டமைப்புகளைப் பார்க்கும் போது பெண்களைவிட ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதென்பதைக் காணலாம். இத்தகைய கருக்கலைப்புகளின் காரணமாக சீனாவில் தற்போது இடம்பெறுகின்ற பிள்ளைப்பேறுகளின் விகிதாசாரத்தை எடுத்துப் பார்க்கும் போது எல்லா 100 பெண் குழந்தைப்பேறுக்கும் 120 ஆண் குழந்தைப்பேறுகள் இடம்பெறுவதைக் காணலாம். 1980 ஆம் ஆண்டு இந்த விகிதமானது 100 பெண் குழந்தைகளுக்கு 108 ஆண் குழந்தைப்பேறுகள் எனக் காணப்பட்டது. இது பால்நிலையில் சமத்துவமின்மையைக் காட்டுவதோடு ஓர் அதிகரிப்பினையும் காட்டுவதாக "எக்கொனமிஸ்ட்" சஞ்சிகை சுட்டிக்காட்டுகின்றது.

"அல்ட்ரா சவுண்ட்" ஸ்கேன் பரிசோதனையின் மூலம் கருவறையிலுள்ள சிசுவின் பால்நிலையை அடையாளம் காணமுடியுமென்பதால் அதனை பெண் சிசுவென அடையாளம் காணப்படுமிடத்து கருக்கலைப்பானது இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்றது. சீனாவில் சனத்தொகையானது கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் ஒரு குடும்பத்தில் இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறமுடியாது. எனவே முதற் பிள்ளை பெண் பிள்ளையாக அமையும் பட்சத்தில் பல பெற்றோர்கள் குறிப்பாக விவசாயத் துறையில் தொழிலில் ஈடுபடுகின்ற அல்லது கமக்காரக் குடும்பங்களில் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஒரு பெண் பிள்ளையைவிட ஆண் பிள்ளையானது விவசாய நடவடிக்கைகளின் அதிக ஆக்க விளைவுக்கு காரணமாக அமையுமென்ற எதிர்பார்ப்பே அதற்கான காரணமாகும்.

கிராமியப் பிரதேசங்களில் மேற்படி விகிதமானது இதனைவிட அதிகமாக உள்ளது. சீனாவைச் சேர்ந்த பெரும்பாலான கிராமங்களில் இந்த விகிதமானது 100 இற்கும் 130 ஆகும். எக்கொனமிஸ்ட் சஞ்சிகை சுட்டிக்காட்டும் வகையில் இதற்கு காரணகாரணியாய் அமைகின்ற மூன்று பிரதான விடயங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஆண் பிள்ளைகளையே பிரார்த்திக்கும் மனோபாவமாகும். இரண்டாவது, நாம் இருவர் நமக்கிருவர் எனப்படுகின்ற நவீன மனோபாவமாகும். மூன்றாவது, "அல்ட்ரா சவுண்ட்" ஸ்கேன் பரிசோதனையின் மூலம் கருவிலுள்ள பிள்ளையின் பால் நிலையை கண்டறியக்கூடிய ஆற்றலாகும்.


இந்தியாவிலும், இத்தகைய கருத்தியல்கள் வேரூன்றியுள்ள இன்னும் சில நாடுகளிலும் (கொசோவோ போன்ற நாடுகளில்) இரண்டு மூன்று பெண் குழந்தைகள் இருக்கின்ற வேளையில் கூட அடுத்த குழந்தையானது ஆண் குழந்தையாக அமையும் பட்சத்தில் அதனை ஏற்பதற்கான விருப்பமின்மையோ அல்லது பொருளாதார பலம் இல்லையென்பதோ குடும்பங்களிலிருந்து தெரிவிக்கப்படுவதில்லை. எவ்வாறாயினும் சீனாவில் இரண்டு பிள்ளைகள் மட்டும் என்ற வரையறையின் கீழ் பெண் சிசுக் கருக்கள் அழிக்கப்படுவது நிதமும் இடம்பெறுகின்றது. இது மட்டுமல்ல இதற்கு பத்து வருடங்களுக்கு முன்னர் நான் சீனாவுக்குச் சென்றிருந்த வேளையில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்ததன் பிரகாரம் பிறக்கப் போவது எவ்வகையான குழந்தை என்பதை அறியாத தந்தைமார்கள் குழந்தை பிறந்தவுடன் அது பெண் குழந்தையாக இருக்குமானால் மருத்துவிச்சியைக் கொண்டு புதிதாகப் பிறந்த பெண் குழந்தையை நீராட்டுவதற்காகப் பயன்படுத்தும் நீர் பேசினில் மூழ்கடிக்கச் செய்து கொலை செய்கிறார்கள். பிறப்பதற்கு முன்னரும் பிறந்த உடனேயும் பெண்களுக்கெதிரான வன்முறை இவ்வாறே செயற்படுத்தப்படுகின்றது. சீன சமூகவியல் அக்கடமியின் ஆய்வுகள் 2020 ஆம் ஆண்டளவில் சீன மக்கள் தொகை விகிதமானது 30, 40 மில்லியன்களைக் கொண்ட 19 வயதுக்குக் குறைந்த மற்றும் அதனைவிடக் கூடிய ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையைவிட மிகவும் குறைந்த அளவில் அதே வயதெல்லையைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் இருக்கக்கூடுமென

கூறுகின்றன. இதன் பிரகாரம் எதிர்காலத்தில் ஐந்து இளைஞர்களுள் ஒருவருக்கு மணப் பெண் ஒருத்தியை தேடிப் பிடிக்க முடியாமல் போக வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும், கடந்த இரண்டு தசாப்த காலப் பகுதியில் சமூகத்தில் காணப்படுகின்ற பால்நிலை சமத்துவமின்மையின் காரணமாக பெண்களுக்கெதிராக இடம்பெறுகின்ற குற்றச் செயல்களின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்திருப்பதாகவும் "எக்கொனமிஸ்ட்" சஞ்சிகை சுட்டிக்காட்டுகின்றது.

இவ்வாறு மக்கள் தொகை விகிதத்தில் ஆண்களின் எண்ணிக்கை அதிகரிப்பதானது குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு நேரடியாகவே செல்வாக்குச் செலுத்துவதாக ஜேர்மனியின் பொன் நகரில் அமைந்துள்ள "தொழிலாளர் கற்கை நிறுவகம்" மேற்கொண்ட ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைத் தவிர திபெத் மற்றும் கொரியா போன்ற நாடுகளிலும் பெண் சிசுக் கொலைகள் இடம்பெறுகின்றன. கொரியாவில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இது 100 இற்கு 124 ஆக அமைந்திருந்தது. அதாவது ஒவ்வொரு வருடமும் 100 பெண் குழந்தைகள் பிறக்கும் போது 124 ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. இதற்கு முந்திய வருடங்களில் பாரிய அளவிலான வித்தியாசம் காணப்படவில்லை. சாதாரணமாக விகிதாசார வீதமானது 100 இற்கு 104 அல்லது 106 ஆகக் காணப்பட்டது. இவ்வாறு 124 ஆக அதிகரித்தமையானது மானிட தலையீடின்றி இயற்கையாக இடம்பெற்றதாகக் கருதி புறக்கணிக்கக்கூடிய ஒரு விடயமல்ல. எவ்வாறாயினும் பெண் சிசுக் கருக்கலைப்பின் காரணமாக பெரும்பாலான ஆசிய சமூகங்களிலே பால்நிலையில் அளவுசார் ரீதியில் சமநிலையற்ற தன்மை அதிகரித்து வருகின்றதென்பது




ஏற்றுக்கொள்ள வேண்டியதொரு உண்மையாகும். தாய்வானிலும் 1980 தொடக்கம் 1990 வரையிலான காலப்பகுதியில் 100 இற்கு 110 அளவிலான விகிதத்துடன் கூடிய இயற்கையான வித்தியாசம் காணக்கூடியதாகவிருந்தது. தாய்வானில் பால்நிலையைப் பார்த்து கருக்கலைப்புகள் இடம்பெறாதமையினாலும், ஆண் பிள்ளைகளையே பிரார்த்திக்கின்ற போலியான சமூக மனோபாவங்கள் அச்சமூகத்தில் பிரபல்யமடையாதமையினாலும் தற்போது மேற்படி அளவில் குறைவினை அன்றி அதிகரிப்பினைக் காணமுடியாதுள்ளது.




தென்கொரியாவில் இச்சமநிலையற்ற தன்மையானது 1990 ஆம் ஆண்டில் சாதாரண விகிதாசாரத்திலிருந்து 117 வரை அதிகரித்தது. முறையே தாய்வானும் தென்கொரியாவும் துரிதமான அபிவிருத்தியைக் காட்டுகின்றதும், உயர்மட்ட எழுத்தறிவினைக் காட்டுகின்றதுமான பணக்கார நாடுகள் என்பதால் பால்நிலை சமத்துவமின்மையின் இடைவெளியைக் குறைத்துக் கொள்வதற்கான மாற்றுத் தீர்வுகளுக்குப் பிரவேசித்திருக்கும் சாயல் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது, மிகையாகவுள்ள இளைஞர் சமுதாயத்தினர் பிற ஆசிய நாடுகளைச் சேர்ந்த யுவதிகளை திருமணம் செய்துகொள்ளும் போக்கு

தற்போது அதிகரித்துள்ளது. கொரிய அரசாங்க மதிப்பீட்டின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டளவில் விவசாய கிராமியச் சமூகத்தில் சரிபாதி ஆசிய கலப்புத் திருமணங்களைக் கொண்டிருக்கும் எனக் குறிப்பிடலாம். அதன் பிரகாரம் பின்னர் உருவாகும் பரம்பரையில் "கொ-ஆசியன்" எனும் புதிய இனவர்க்கமொன்று உருவாகக்கூடுமென அவர்கள் ஊகிக்கின்றனர். பிறப்பின் போது ஆண் பெண் விகிதம் இவ்வளவு தான் என கணக்கிடுவது இந்தியாவில் இடம்பெறாவிட்டாலும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையானது பெண் குழந்தைப் பிறப்புகளைவிட விகிதாசார ரீதியில் அதிகமானது. இந்தியாவின் பல மாநிலங்களில் காணப்படுகின்ற மகன்மாரை மட்டுமே பிரார்த்திக்கும் மனோபாவம் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு "சீதனம்" கொடுக்கும் பாரம்பரிய வழக்கம் என்பவற்றின் காரணமாக பெண் சிசுக்களுக்கான கருக்கள் பெரிதும் கலைக்கப்படுகின்றன. இந்தியாவின் பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் காணப்படுகின்ற விகிதாசார வித்தியாசமானது சீனாவின் தென் மற்றும் கிழக்குப் பிரதேசங்களைவிட மிகவும் அதிகமானதென அறிந்தால் ஒருவர் வியப்படையக்கூடும். எவ்வாறாயினும் 1991 ஆம் ஆண்டில் இந்த விகிதாசார வித்தியாசமானது ஒரு மாவட்டத்தில் மட்டும் காணப்பட்டாலும் 2001 ஆம் ஆண்டு இந்த விகிதாசார வித்தியாசமானது 100 இற்கு 125 ஆக 46 மாவட்டங்களில் காணப்பட்டது. இவைகள் இயற்கையாக ஏற்பட்ட மாற்றங்கள் அல்ல மாறாக பெண் சிசுக்களுக்கான கருக்களை கலைத்ததன் மூலமாக மேற்கொள்ளப்பட்ட சமநிலையற்ற தன்மைகள் என்பது விவாதமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகும். இங்கே இந்து சமூகத்தில் பிரபல்யமான ஒரு கூற்று நினைவுக்கு வருகின்றது. அதாவது "ஒரு பெண் பிள்ளையை வளர்த்து ஆளாக்குவதென்பது பக்கத்து வீட்டு மலர்த் தோட்டத்திற்கு நீரிறைப்பதாகும்" என்று தரக்குறைவுக்கு உள்ளாக்கப்படுகின்றது. "மகன்மார்களை பிரார்த்திக்கும்" இந்திய சமூக முறையில் இந்திய அரசினால் 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வரும் கேள்வி கேட்கப்பட்டது.

**உங்கள் அடுத்த குழந்தை யாராக இருக்க வேண்டும்**

இதன்போது 1/3 வீதமானோர் கட்டாயமாக தமது அடுத்த பிள்ளை ஆண் பிள்ளையாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளனர். 2/3 வீதமானோர் யாராக இருந்தாலும் பரவாயில்லை என நடுநிலையாக பதிலளித்துள்ளதோடு, ஒரே ஒரு பெண் மட்டும் தமது அடுத்த பிள்ளை பெண் பிள்ளையாக இருக்க வேண்டுமெனப் பதிலளித்துள்ளார். இந்தக் கருத்துக் கணிப்பானது இன்றேல் மக்கள் கருத்துக் கணிப்பானது பாகிஸ்தானிலும் ஜேர்மனியிலும் மேற்கொள்ளப்பட்டது. அதிகமாக ஆண் பிள்ளைகள் தேவையென்பதே அந்த நாடுகளிலும் கிடைத்த பதிலாகும். தாய்மார்களில் 1/10 வீதமானோர் மட்டுமே பெண் குழந்தைகள் தேவையெனக் குறிப்பிட்டனர். இன்னும் சில வளர்முக நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் மகள்மார்களை அன்றி மகன்மார்களைப் பெற்றுக்கொள்ளவே விரும்புகின்றனர்.

இங்கே குறிப்பிட வேண்டிய மற்றுமொரு விடயம் யாதெனில், சீனாவைச் சேர்ந்த மருத்துவிச்சிமார் ஆண் பிள்ளைப்பேறொன்றுக்கு அறவிடும் தொகைக்கு மேலதிகமான தொகையை பெண் பிள்ளைப்பேறுக்கு அறவிடுகின்றனர் என்பதாகும்.

அண்மைக்கால வரலாற்றில் அதாவது சுமார் 1980 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தி அடைந்துவரும் சில நாடுகளைச் சேர்ந்த மக்கள் மகன்மாரைப் பிரார்த்தித்தாலும் கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்பதைப் பிறப்புக்கு முன்னர் அறிந்து கொள்ளும் அளவிற்கு புரிதலையோ அறிவினையோ அல்லது தொழில்நுட்ப முன்னேற்றத்தினையோ கொண்டிருக்கவில்லை. இருப்பினும் இதற்குப் பின்னர் மலர்ந்த தசாப்தத்தில் பிரபல்யமடைந்த விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புகளுக்கு ஒருங்கமைவாக அறிமுகப்படுத்தப்பட்ட "அல்ட்ரா சவுண்ட்" ஸ்கேன் மற்றும் "அமினியோ சென்டெசிஸ்" போன்ற பரிசோதனைகளின் மூலம் சிசு கருவறையில் இருக்கும் போதே அதன் பால்நிலையைக் கண்டறியக்கூடிய ஆற்றல் உருவானதன் விளைவாக மகன்மாரைப் பிரார்த்திக்கும் சமூகங்களில் காணக்கூடியதாகவிருந்த பெண் சிசுக்களை கருக்கலைக்கும் போக்கில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. இந்தியாவைச் சேர்ந்த மருத்துவர்கள் இதனைப் பெருமளவில் பணம் ஈட்டித் தருகின்ற வருமான வழியாக அமைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் இதற்கு வர்த்தக விளம்பரங்களின் மூலம் பாரியளவில் பிரசாரத்தினை பெற்றுக்கொடுத்தனர். அத்தகையதொரு விளம்பரம் கீழே தரப்பட்டுள்ளது.

**இன்று 5,000 ரூபாவை செலுத்துங்கள். நாளை 50,000 - ரூபாவை சேமித்துக் கொள்ளுங்கள்.**

பெண் பிள்ளைகளுக்காக வழங்க வேண்டிய சீதனத்திலிருந்து பெற்றோரை விடுவித்து அவர்களுக்கு உதவி புரிவதற்காக இந்த மருத்துவர்களுக்கு எவ்வளவு மனித

நேயம் இருக்க வேண்டும்? பெண் சிசுக் கருக்களை கலைக்குமாறு வெளிப்படையாகக் குறிப்பிடாமல் அதற்காக விடுக்கும் மேற்படி அழைப்பு எவ்வளவு மிலேச்சத்தனமானது? இந்த விளம்பரங்களைப் பார்த்த வறுமையால் பீடிக்கப்பட்ட, சீதனப் பிரச்சினை காரணமாக பெண் பிள்ளைகளைச் சுமையாகக் கருதுகின்ற மற்றும் மகன்மார்களையே பிரார்த்திக்கின்ற பெற்றோர்கள் மில்லியன் கணக்கான பெண் சிசுக் கருக்களை கலைப்பதனை தெரிவு செய்யுமளவுக்குச் கொடூரமானவர்களாயினர். 1998 ஆம் ஆண்டு ஒரு நிறுவனத்தில் மருத்துவ காரணங்களெனக் குறிப்பிட்டு மேற்கொள்ளப்பட்ட 2000 கருக்கலைப்புகளில் 1998 கருக்கலைப்புகள் பெண் சிசுக் கருக்கலைப்புகளாகும் என்பதோடு ஒரு கருக்கலைப்பு மட்டும் பாரதூரமான அங்கவீன நிலைமைக்குள்ளான ஆண் சிசுக் கருக்கலைப்பாக அமைந்திருந்தது.

1994 ஆம் ஆண்டு இந்தியாவிலும் 1995 ஆம் ஆண்டு சீனாவிலும் கருக்கலைப்பு தடைசெய்யப்பட்டது. இருப்பினும் அன்று தொடக்கம் இன்று வரை பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவுகளை பொருட்படுத்தாமல் இந்த நாடுகளில் சட்டவிரோத கருக்கலைப்புகள் பல இடம்பெறுகின்றன. பெண் சிசுக் கருக்கள் இனங்காணப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற கருக்கலைப்புகளை மேற்படி சமூகங்களில் காணப்படுகின்ற பின்னடைவு காரணமாக இடம்பெறுகின்றதென்றோ அல்லது குறைந்த எழுத்தறிவு காரணமாக இடம்பெறுகின்றதென்றோ நியாயப்படுத்த முடியாது. இந்தியாவில் மிகவும் செழிப்பான பிரதேசங்களாக விளங்குகின்ற மகாராஸ்டிரா, பஞ்சாப் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களிலேயும் மிகவும் பாரதூரமான வகையில் இடம்பெறுகின்ற பெண் சிசுக் கருக்கலைப்புகள் காரணமாக இடம்பெற்றுள்ள சமநிலையற்ற விகிதாசாரங்களைக் காணமுடிகின்றது. இவ்விகிதாசாரத்தின் வித்தியாசமானது குடும்ப வருமான நிலை மற்றும் எழுத்தறிவு என்பவற்றுக்கமைய ஏற்றத்தாழ்வுக்குள்ளாகின்றது என்பதை இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சீனாவின் நகர்புற குடும்பங்களைப் பொருத்த மட்டில் ஒரு குடுப்பத்திற்கு ஒரு பிள்ளையை மட்டும் பெற சட்ட ரீதியாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மக்கள் தொகையில் சுமார் 55% உள்ள கிராமப்புற பிரதேசங்களில் ஒரு பிள்ளை என்ற கொள்கையிலும் வகைகள் காணப்படுகின்றன. அதாவது தலைப் பிள்ளை பெண் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் இரண்டாவதாக ஆண் குழந்தையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதி அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இருப்பினும் அல்ட்ரா ஸ்கேன் முறையின் மூலம் பால்நிலை கண்டறியப்படுகின்ற போது கருவிலிருப்பது பெண் குழந்தையென அறியப்படுமிடத்து அக்கருவானது கட்டாயம் கலைக்கப்படுகின்றது. சீனாவின் உட்பகுதியில் அமைந்துள்ள மொங்கோலியா போன்ற பிரதேசங்களில் ஒரு பிள்ளை மட்டும் என்ற கொள்கை நடைமுறையில் இல்லாதவாறு குறைவாக உள்ளது. எவ்வாறாயினும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுக்க வாய்ப்புள்ளது.

சீதனப் பிரச்சினைகள் காரணமாகவோ அல்லது அதிகரித்து வருகின்ற மக்கள் தொகையின் பிரச்சினை காரணமாகவோ குடும்பக் கட்டுப்பாடு அல்லது மக்கள் தொகை ஒடுக்க நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாகவோ "மகன்மார்களையே பிரார்த்திக்கும்" போலியானதும் மரபு ரீதியானதுமான மனோபாவங்களின் காரணமாகவோ மறைமுகமாக அல்லது நேரடியாக மேற்கொள்ளப்படுகின்ற பெண் சிசுக் கருக்கலைப்பானது எந்த நாட்டில் எவ்வகையில் இடம்பெற்றாலும் அது ஒரு மனித உரிமை மீறலாகும். அதற்கு எதிராக செயற்படுவதும் அணிதிரள்வதும் இன்றைய சமூகத்தின் தேவையாகும். இதே வேளை, மேற்படி சமநிலையற்ற விகிதாசாரங்களை குறைப்பதற்கு நடவடிக்கையெடுப்பது பால்நிலை மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக செயற்படுபவர்களினதும் அமைப்புகளினதும் நிகழ்ச்சி நிரல்களில் கட்டாயம் இடம்பெற வேண்டிய முக்கியமான விடயமாகும் என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன். ■

**புஷ்பா ரம்லனி**

இச்சிறுகதை சிங்கள மொழியில் அய(அவள்) எனும் சஞ்சிகையில் 2012 முதலாம் அரையாண்டில் வெளிவந்தது.

மூலங்கள்:

*www.dailymail.co.uk*
British Medical Bulletin/ Unsafe abortion: the silent scourge by David A Grimes
The Economist ( www.economist.com )

# உறவு வல்லுறவு

## பெண்ணுக்கு பிரச்சினை தான் !

### நாலு பேர் சொல்லினம்...

எமது நாட்டைப் பொறுத்தவரை அண்மைக் காலமாக பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்பான பிரச்சினைகள், வன்முறைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அவர்களது உடல் சார்ந்த பிரச்சினைகளே அதிகமாக உள்ளன. அவற்றுள் ஒன்றாக பெண்களுக்குத் தாமே தமது கர்ப்பத்தைத் தீர்மானிக்கும் உரிமை தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் எழுந்த வண்ணமுள்ளன. அதாவது பெண்கள் தமது வேண்டாத கர்ப்பத்தை தவிர்த்தல், எப்போது எத்தனை பிள்ளைகளைப் பெறுவது தொடர்பான தீர்மானமெடுத்தலை மேற்கொள்ள முடியாது உள்ளார்கள். அந்தவகையில் கருக்கலைப்பு பற்றிய விடயமும் முக்கியம் பெறுகின்றது.

கர்ப்பிணிப் பெண்ணின் கருப்பையில் இருந்து முளையம் அல்லது முதிர் கரு தானாகவே சிதைவடைதல் கருச்சிதைவு எனப்படும். கர்ப்பிணிப் பெண்ணின் கருப்பையில் இருந்து முளையம் அல்லது முதிர் கருவை வேறு காரணங்களுக்காக சிதைவடையச் செய்தல் கருக்கலைப்பு எனப்படும். கருக்கலைப்பு செய்தலை சில நாடுகள் சட்டபூர்வமாக்கியுள்ளன. சில நாடுகள் கருக்கலைப்பை குற்றவியல் சட்டமாக்கியுள்ளன. சில நாடுகள் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மட்டும் கருச்சிதைவை நடைமுறைப்படுத்துகின்றன. குறிப்பாகத் தாயின் உயிருக்கு ஆபத்து நேரும் இடத்து, பாலியல் வல்லுறவு காரணமாக உண்டாகும் கர்ப்பத்தின் போது என சில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மட்டும் கருச்சிதைவை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளன. எமது நாட்டைப் பொறுத்தவரையிலும் கருக்கலைப்பானது தண்டனைக்குரிய குற்றமாகும். இலங்கையில் கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் நன்னோக்கத்தினால் அன்றி செய்யப்படும் கருக்கலைப்பானது தண்டணைக்குரிய விடயமாகும். இவ்விடயத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பது தொடர்பாக தற்போது பலரும் பல்வேறான கருத்துகளை முன்வைக்கின்றனர். குறிப்பாகப் பாலியல் வல்லுறவின்போது உருவாகின்ற நிர்ப்பந்திக்கப்பட்ட கர்ப்பத்தைக் கலைப்பதற்கும், வயது குறைந்த சிறுமிகள் பாலியல் வல்லுறவின் போது தரிக்கின்ற கர்ப்பத்தைக் கலைப்பது தொடர்பாகவும் வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. சொல் சஞ்சிகையானது இம்முறை இதழில் கருச்சிதைவு என்பதை மையமாகக் கொண்டு ஆக்கங்களை வெளியிடுகின்றது. ஆகவே இத்தருணத்தில் கருக்கலைப்பு அல்லது கருச்சிதைவு தொடர்பாக சமூகத்தில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் சிக்கல்களில் அக்கறையுடன் செயற்படுகின்ற சிலரைத் தெரிவு செய்து அவர்களது கருத்துகள் பெறப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் தற்கால சூழலில் பாதிப்புக்குள்ளாகி வருகின்ற பெண்களுடனும், நலிவுற்றோருடனும் வேலை செய்து வருகின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## ரஜனி சந்திரசேகர்

எமது நாட்டைப் பொறுத்தரையில் பாலுணர்வில் ஈடுபட்ட ஆண்-பெண் இருவரில் பெண்ணிற்கு கிடைப்பது தண்டனை மட்டுமேயாகும். பாலுணர்வால் ஒருவர் உந்தப்பட்டு பாலியல் உறவில் ஈடுபடுவாரேயானால் அவருக்கு திருப்தி கிடைக்கும். ஆனால் பெண்களைப் பொறுத்தவரை அது இல்லையென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் எமது பெண்களைப் பொறுத்தவரை அதாவது பாதிக்கப்பட்ட பெண்களைப் பொறுத்தவரை ஏதாவது காரணத்திற்காகவே பெரும்பாலும் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளனர். வீட்டில் உழைப்பிற்கான வசதி இல்லாத போதும், உழைப்பில் ஈடுபட்டு பொருளீட்டித் தருவதற்கான தலைமைத்துவம் இல்லாத போதும் அல்லது பெண்களிற்கான வேலை வாய்ப்பின்மை காரணமாகவும் இவர்கள் குறிப்பிட் ஆண்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆண்கள் பற்றிப் பார்த்தால் இவர்கள் அயலவர், உறவினர் என்போராக இருக்கின்றனர். அவர்களுடனான உறவின் மூலம் தமது பிள்ளைகளுக்கு சாப்பாட்டுத் தேவையை இவர்கள் பூர்த்தி செய்து வந்துள்ளனர். அவ்வாறு இருக்கும் போது கர்ப்பமான சில தாய்மார் தமது கர்ப்பத்தைக் கலைப்பதற்கு சட்டரீதியற்ற முறைகளை நாடுகின்றனர். இதனால் அவர்களது உயிர்க்கு ஆபத்தும் நிகழ்ந்துள்ளன. அதனை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. காரணம் எமது நாட்டில் சட்ட ரீதியாகக் கருக்கலைப்பு செய்ய முடியாது. அடுத்தது தனித்த பெண்கள் வேறொரு ஆணுடன் தொடர்பை வைத்துப் பிள்ளை பெறுவதை எமது சமூகம் ஏற்றுக் கொள்வதும் இல்லை. அவர்களை ஒதுக்கி வைத்து விடும். எனவே பாதிக்கப்பட்ட பெண்கள் அதாவது பிறந்த குழந்தையை இறக்கடிக்கச் செய்தவர்கள் சமூகத்திற்கு அஞ்சியே அதனை செய்துள்ளார்கள். இவர்களில் திருமணமாகாத பெண்களைக் காட்டிலும் திருமணமாகி ஏற்கனவே குழந்தை பெற்ற கணவனை இழந்த பெண்களே அதிகமாகும். சிலர் தமது பாலியல் தேவைக்காக பாலியல் உறவில் ஈடுபட்டோராகவும் உள்ளார்கள். போதிய விழிப்புணர்வின்மையால் கர்ப்பத்தைத் தடுக்க முடியாமலும், போதிய குடும்பக் கட்டுப்பாட்டு முறைமை தெரியாத காரணத்தினாலும் பெண்கள் சட்ட ரீதியற்ற நாட்டுப்புறக் கருக்கலைப்பு முறைமையை நாடுகின்றனர். இதன் விளைவால் கிருமித் தொற்று, உடலியல் ரீதியான நோய்கள் எனப் பலவற்றை அனுபவிக்கின்றனர். அதனால் பெண்கள் இறக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் அதிகம் உள்ளன.

எமது நாட்டில் கருக்கலைப்பில் ஈடுபடும் நபர்களில் ஏற்கனவே திருமணமான பெண்கள் தமது வேண்டாத கர்ப்பத்தைக் கலைக்க பெரிதும் முனைகின்றனர். அரசு கருக்கலைப்பினை குற்றமாக அறிவித்தாலும் கருக்கலைப்புகள் நிகழ்ந்த வண்ணம்தான் உள்ளன. சட்டரீதியாக கருக்கலைப்பு இருக்குமேயானால் பெண்கள் சமூகத்திற்குப் பயப்படத் தேவையில்லை. ஆண்- பெண் இருவரினதும் பாலியல் உறவில் இறுதி விளைவான கர்ப்பம் பெண்ணிடமே சென்றடைகிறது. இதனால் பெண் மீதே முழுமையான தாக்கம் சென்றடைகின்றது. தற்போதெல்லாம் பாலியல் உறவில் ஈடுபடும் பெண்கள் இறுதியில் தண்டனையையே அனுபவிக்கின்றனர். திருப்தி, மகிழ்ச்சி என்பன ஆண்களிடம் சென்றடைகின்றன. உபயோகப் பொருளாக சில நாட்கள் பெண்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள். அதிலும் அவர்கள் இரண்டாம் நிலையிலேயே வைக்கப்படுகின்றனர். கடைசியில் பெண்களுக்கு ஏமாற்றமும் தண்டனையுமே கிடைப்பதாக உள்ளது.

யுத்தத்தின் பின்னரான மாற்றத்தின் போது ஏற்படுகின்ற சிக்கல் நிலையில் இவை அதிகளவில் நிகழ்கின்றன. சமூக சேவையில் ஈடுபடுகின்ற நாம் சரி எது, பிழை எது எனச் சிந்தித்து செயற்படாது நலிவுற்றோர் சார்பாக இருத்தலே சரியானது. ஏனெனில் எமது சமூகம் இன்னமும் பல விடயங்களில் பெண்களை சுயமாக இயங்க விடுவதில்லை. எப்போதும் பெண்களே பாதிக்கப்பட்டோராக இருக்கிறார்கள். ஆண்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். இதற்கு எமது நாட்டு சட்டமும் பெண்களுக்கு பல சந்தர்ப்பங்களில் பாதகமானவற்றையே கூறுகின்றது. அந்த வகையில் கருக்கலைப்பு சட்டம் குற்றமாக உள்ளமை பெண்கள் தற்காலத்தில் முகம் கொடுக்கின்ற மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாகும்.



## ராணி சின்னத்துரை

எமது நாட்டைப் பொறுத்தவரை தற்காலத்தில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும்


பெண்கள், சிறுவர்களது தொகை அதிகரித்து வருகின்றது. அத்தோடு யுத்தத்தின் பின்னர் கணவனை இழந்த தனித்த பெண்களது தொகையும் அதிகரித்துள்ளது. வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் சிறுமிகள் கர்ப்பம் தரிக்கின்ற போது அது வேண்டாத நிர்ப்பந்திக்கப்பட்ட கர்ப்பமாகவே உள்ளது. இருப்பினும் எமது நாட்டின் சட்டத்திற்கு அமைவாக தாங்களே விரும்பி ஏற்காத வல்லுறவின் போது உருவாகும் கர்ப்பத்தை சுமந்து பெற வேண்டிய கட்டாயத்துள் பாதிக்கப்பட்ட பெண்கள் மீண்டும் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். குறிப்பாக தற்போது சிறுவயதுப் பிள்ளைகளை வல்லுறவுக்குள்ளாக்கும் கலாசாரம் மேலோங்கி வருகின்றது. இதனால் மனதளவிலும், உடலளவிலும் முதிராத சிறுமிகள் கர்ப்பத்தைச் சுமந்து பெற வேண்டிக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு சட்ட ரீதியாக கருக்கலைப்புச் செய்யக் கூடிய சட்டம் எம்மிடமில்லாதது பெரும் துரதிஷ்டமென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் பாதிக்கப்பட்ட பெண் வல்லுறவின் போது உருவாகிய குழந்தைக்கு தாயாகின்றாள். அதன் பின்னர் அவளுக்கான குடும்ப வாழ்க்கையைப் பெறுவது அரிதாகி விடுகின்றது. எமது சமூகம் பிறக்கின்ற குழந்தையை மனிதாபிமானத்தோடு நடாத்தும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் அளிக்க முடியாது. பாதிக்கப்பட்ட பெண்ணது பாதுகாப்பு, பொருளாதாரம் என்பன கேள்விக்குறியாகிவிடும். தமக்கென தொழில் ஒன்றை வைத்திருக்கும் பெண்கள் ஓரளவுக்குத் தம்மைத் திடப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் தற்காலத்தில் மிகவும் சிறிய வயதினையுடைய சிறுமிகள் வயது வந்த ஆண்களால் வல்லுறவு மூலம் கர்ப்பம் தரிக்கின்றனர். அண்மையில் கூட வடமராட்சிப் (யாழ்ப்பாணம்) பகுதியில் சிறுமியொருவர் 42 வயது ஆணால் கர்பமாகியுள்ளார் என பத்திரிகை மூலம் அறிய முடிந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட சிறுமியினது எதிர்காலம், கல்வி பற்றி சிந்திக்கவே கஷ்டமாக உள்ளது. இவை மாற்றம் காண வேண்டுமாகில் இலங்கையில் உள்ள கருக்கலைப்புச் சட்டத்தில் மாற்றம் தேவை. இல்லையேல் அண்மைக் காலமாகத் தாய்மாரால் கைவிடப்படுகின்ற மற்றும் மரணத்தற்கு உள்ளாக்குகின்ற குழந்தைகளது வீதம் அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. அதற்கு எமது நாட்டின் பொருளாதார திண்டாட்டம் மற்றும் பெண்களுக்கான வேலை வாய்ப்பு அருகியுள்ளமை போன்றவற்றை சில காரணங்களாகக் கூறலாம்.



## உதயனி நவரத்தினம்

**பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்**

தற்போதெல்லாம் கருக்கலைப்பானது சட்டரீதியான முறையில் செய்ய ஏலாத காரணத்தால் பலர் சட்ட ரீதியற்ற முறையை நாடுகின்றனர். இதனால் பெண்கள் இறக்க நேரிடுகிறது. இரத்தப் போக்கு போன்ற நோய்த் தாக்கத்துக்கு உட்படுகின்றனர். அதுமட்டுமல்லாது பாலியல் வல்லுறவின் போதான கர்ப்பத்தை நிர்ப்பந்தித்துப் பெற வைக்கின்ற போக்கு உள்ளது. அத்தோடு 18 வயதுக்குக் குறைந்த சிறுமிகளது கர்ப்பமும், அவ்வாறான சிறுமிகள் பாலாத்காரப்படுத்தப்பட்ட பின்னர் உருவாகுகின்ற கர்ப்பத்தையும் கட்டாயத்தின் மத்தியில் சுமந்து பெற வேண்டியுள்ளது. இங்கு விருப்பமின்றி கர்ப்பம் தரித்து விருப்பமின்றி குழந்தையைப் பெறுகின்றனர். இதனால் எல்லாமே நிர்ப்பந்தமாகத் திணிக்கப்படுகின்றது. நிர்ப்பந்த அடிப்படையில் நிகழ்கின்றது. இவ்வேளையில் அவர்களது மனநிலையானது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அதேநேரம் திருமணத்திற்கு அப்பாலான உறவின் போதான கர்ப்பம் மற்றும் திருமணத்திற்கு முன் கர்ப்பம் தரிப்பது என்பவற்றை எமது சமூகம் சீர்கேடான ஒன்றாகப் பார்க்கின்றது. இவற்றின் விளைவுகளே பெண்களைப் பெரிதும் சமூக விரோத செயல்களில் ஈடுபடத் தூண்டுகின்றது. அதாவது பிறந்த குழந்தைகளைக் கொல்லுதல் மற்றும் கைவிடுதல் போன்றன இவற்றின் விளைவுகளாகவே உள்ளது. கர்ப்பத் தடுப்பு முறை பற்றிய விழிப்புணர்வு எல்லோருக்கும் இருக்கும் என்று சொல்ல முடியாது. எமது நாட்டில் வல்லுறவு மூலம் உருவாகும் கர்ப்பத்தைக் கலைக்கும் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழலில் நாம் உள்ளோம். அது அங்கீகரிக்கப்படுமானால் வல்லுறவு மூலம் உருவாகும் நிர்ப்பந்திக்கப்பட்ட குழந்தைகளின் உருவாக்கம் தடுக்கப்படும்.



## பாதிக்கப்பட்ட நபர்

காதல் என்ற விடயத்தால் நான் ஏமாற்றப்பட்டுள்ளேன். நான் ஒருவரை மனப்பூர்வமாக

விரும்பினேன். அவர் என்னைத் திருமணம் செய்து கொள்ளுவார் என நம்பினேன். அவர் என்னுடன் ஒன்றாகத் தொழில் பார்த்தவர். எனது குடும்பத்தவர்கள் அனைவருக்கும் தெரியவே நான் பழகினேன். எங்கள் வீட்டுக்கு வந்து போவார். வீட்டில் தங்குவார். சாப்பிடுவார். அவரது பொருட்கள் எங்களது வீட்டில் இருக்கும். அவரது தாய் வீட்டுக்குப் போய் வருவோம். இவ்வாறு எனக்குள் ஒரு நம்பகத்தன்மையை உருவாக்கி விட்டதால் நான் அவர் என்னை ஏமாற்றுவார் என நம்பவில்லை. நெருக்கமாகப் பழக முற்பட்ட போது திருமணம் செய்யப் போகின்றவர் என்பதாலும், என்னில் அன்பு வைத்திருப்பவர் என்பதாலும், நான் அவரை உண்மையாகக் காதலிப்பதாலும் எனக்கு சந்தேகம் வரவில்லை. இடையிடையே கர்ப்பத்தடைக் குளிசைகளை வாங்கி வந்து தருவார். நான் அவற்றைப் பாவித்திருக்கிறேன். ஒவ்வொரு நாளும் பாவிக்கும் குளிசையும் கொண்டு வந்து தருவார். இடையிடையே பாவிக்காது விட்டும் இருக்கிறேன். இந்த தருணத்தில் நான் கர்பமாகியதை அவருக்கு சொன்னதும் அவர் அதை விரும்பவில்லை. கலைக்கும் படி சொன்னார். நான் விரும்பவில்லை. திருமணம் செய்யும் படி சொன்னேன். அன்றைய தினம் தனது பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டார். நான் வீடு தேடிச் சென்று அழுது குழறிக் கேட்டும் என்னைத் திருமணம் செய்ய மறுத்ததோடு கர்ப்பத்தைக் கலைக்கச் சொன்னார். எனது குடும்பத்தினரும் தமக்குக் குழந்தை பிறந்தால் அவமானம் எனக் கருதி கலைக்கச் சொன்னார்கள். சட்ட ரீதியாக கலைக்க முடியாததால் சட்டரீதியற்ற முறையில் ஏதோ ஒரு உணவுப் பதார்த்தத்தைச் சாப்பிடக் கொடுத்தார்கள். நானும் சாப்பிட்டேன். ஆனால் அது வாந்தியாக வந்து விட்டது. அதன் பிறகு நான் நம்பியவர் கை விட்டுவிட்டார். அவரது காலில் கூட விழுந்து கேட்டேன். என் வயிற்றில் வளர்வது தனது பிள்ளை இல்லை என்று சொல்லிவிட்டார். பின்பு பெண்கள் அமைப்பொன்றின் உதவியுடன் டீ.என்.ஏ மரபணு பரிசோதனை மூலம் எனது குழந்தைக்குத் தகப்பன் அவர் தான் என்பதை நிரூபித்தேன். தற்போது நீதிமன்றத் தாபரிப்பாக மாதா மாதம் 5000 ரூபாவை எனது குழந்தைக்கு செலுத்தி வருகிறார். பிறப்புச் சான்றிதழிலும் அவர் தான் தகப்பன் என உள்ளது.

எனது வாழ்க்கையின் சுருக்க வரலாறு இப்படி இருக்க ஊர்ப் பார்வை, உறவுப் பார்வை மற்றும் குறிப்பாக ஆண்கள் பார்வை பற்றிச் சொன்னால் வேதனை வரும். விடயம் தெரிந்தவர்கள் அதனை என்னிடம் நேரடியாகக் கேட்காது "எங்க பிள்ளையின்ரை அப்பா? " "நீங்கள் தானே எப்போதும் கூட்டிப் போறீங்கள்?" என்ற கேள்விகள், சிலர் எனது உடலைக் குறி வைத்து "ஒரு பிள்ளைக்கு அம்மா ஆகியும் நல்லாத் தானே இருக்கிறீங்கள். எங்களையும் கொஞ்சம் கவனியுங்கோ" என்ற மறைமுகமான கேள்விகள் தொடர்கின்றன. ஒருத்தனோடை திருமணத்துக்கு முன் போனதால எல்லாரோடும் போவாள் என்ட ஏளனம் எமது சமூகத்தில இருக்கு. எனது குடும்பம் என்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டது. அவர்களுக்கு என்னால மரியாதை இல்லையாம். ஆண் சகோதரன் அடித்தே துரத்தி விட்டார். கர்ப்பிணி என இரக்கம் காட்டவில்லை. எனது சொந்தக் காலில் நின்று குழந்தையை வளர்க்கிறேன். மேற்படிப்பு படிக்க ஆசை. படிக்கப் போகிறேன். என்னை ஏமாற்றிய நபர் வேறு திருமணம் செய்ததாகத் தகவல். விபரம் தெரியாது.

மேற்கூறப்பட்ட சிலரின் கருத்துகளின் படி பார்க்கும் போது காதல் என்ற ரீதியிலும் நம்பிக்கை என்ற ரீதியிலும் பெண்களை ஆண்கள் தமது பாலியல் தேவைக்காகப் பயன்படுத்தி விட்டுக் கர்ப்பமானதும் விட்டுச் சென்று விடுகின்றனர். பாதிக்கப்பட்ட பெண் தனித்து விடப்படுகின்ற சந்தர்ப்பங்களே அதிகளவில் உண்டு. பாலியல் சம்பந்தமாகவும் உடலுறவு, கர்ப்பம் சம்பந்தமாகவும் போதிய விழிப்பூட்டல் இல்லாத காரணத்தால் இளம் பெண்கள் சிக்கலில் விழுகின்றனர். இதனை மாற்றுவதற்கு தற்காலத்தில் கொள்கை நிலையில் மாற்றம் அவசியமாகின்றது. தற்காலத்தில் ஏற்படுகின்ற சிசுக் கொலைகள் மற்றும் கைவிடப்படுகின்ற, இல்லங்களில் ஒப்படைக்கப்படுகின்ற குழந்தைகள் தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும். பெண்கள் பாதிப்படைந்த வேளை அல்லது கர்ப்பமாகி ஆணினால் கைவிடப்பட்ட வேளையில் குடும்ப மற்றும் உறவுகள் ஆதரவு தருதல் இன்றியமையாதது. அதேபோலவே தொழில் தெரிவு இன்மையால் பெண்கள் தமது குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக இன்னொரு ஆணின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து சில சந்தர்ப்பங்களில் நிர்ப்பந்தமாக உள்ள அதேயிடத்துத் தனித்த பெண்களின் பாலியல் உணர்வு மற்றும் அவர்களது பாலியல் உரிமை என்பனவும் மதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு எமது அரசு மற்றும் கொள்ளை வகுப்பாளர்கள் பெண்களது கர்ப்பம் தொடர்பான மற்றும் அவரகளது குடும்பக் கட்டுப்பாடு தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.■

**குகநிதி குகநேசன்**

பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045 / 5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com

ரூ. 50/-